139

தாருல் இஸ்லாம்

ஏப்ரில் 1953

1 APR 1953
MADRAS
139 / 2.53

DARU
ISLA

N53.32.4
199011

விலை 6

ஐந்து நக்ஷத்தீர மார்க்
கைலிகள்
TRADE MARK
REGD
ALEE
பி. அஹமது & ஸன்ஸ்
2/70. நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை. 1

ஏப்ரில் 10-ம் தேதி அன்று தமிழ் நாடெங்கும் ஆரம்பம்

கதை: எச். எல். என். சிம்ஹா

பாடல்: கவி. கா. மு. ஷெரீப்

வசனம்: விந்தன்

சங்கீதம்: ராஜேஸ்வரராவ் &
ஜி. ராமநாதன்

ஸ்டுடியோ: வாஹினி

டைரக்ஷன்: ராமண்ணா

பொருள் அடக்கம்

அந்தோ, பாபம் மாஜீ மன்னரே! … … …	3
காதியானிகளும் முல்லாக்களும் (தலையங்கம்) … …	4
அரிமா நோக்கு … … …	8
மிஸ்ரில் இஸ்லாம்—தொழாதவர்களுக்கு உத்தியோக மில்லை …	10
மிஃ'ராஜ் … … …	13
ஒட்டகங்கள் … … …	14
ஹராத்தை ஹலாலாக்கும் செப்படி வித்தை பாருங்கள்! …	16
வருங்கால வாலிப வீரன்……! … …	22
முல்லாக்களும் முஸ்லிம்களும் … … …	25
ஷஜருத்துர் (தொடர் கதை) … … …	29
இறைவனின்றி மனிதன் உயிர்வாழ முடியுமா? … …	32
கெனியாவின் மாவ் மாவ் பயங்கரக் கூட்டம் …	33
தூங்குகிற முஸ்லிம்காள்! நீங்கள் கண் விழிப்பது எக்காலம்? …	38
குர் ஆன் மஜீதை மொழிபெயர்த்த முழு விருத்தாந்தம் … …	42

அட்டைப் படம்

ஈரான் மக்கள் அவர்களுடைய மன்னரை முடிதுறக்கும்படி வற்புறுத்துகின்றன ரென்று ஒரு கக்ஷியும், அப்படி யில்லை யென்று மற்றொரு கக்ஷியும் சமீபகாலம் வரை கூறி வந்தபோதி னும், சென்ற சில வாரங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளி லிருந்து, ஈரானிய மக்கள் தங்கள் மன்னரை மிகவும் நேசிக்கின்றன ரென்பதே தெளிவாகி விட்டது. அவர் தம் சொந்த இஷ்டத்தின் மீது அரச பதவியைத் துறந்துவிடப் போவதாகக் கூறியதும், பல்லாயிரக் கணக்கான மக்கள் அவர் மாளிகையின் முன்னே கூடி முற்றுகை யிட்டு, “எங்களுக்கு ஷா வேண்டும்; ஷா நீடூழி வாழ்க!” என்று ஆர்ப்பரித்து, அவர் எண்ணத்தை முற்றிலும் மாற்றிக் கொள்ளும்படி செய்து விட்டார்கள். எனவே, மிஸ்ரைப்போ வில்லாமல், ஈரானிய மக்கள் தங்கள் மன்னரை மிகவும் விசுவசிக்கின்றன ரென்பது நன்கு புலனாகின்றது.

இப்படி யிருக்க, சென்ற மாதம் இந்த ஷாவின் இளைய சகோதரர் தம் மனைவியுடன் சேர்ந்து நம் நாட்டுக்கு விஜயஞ் செய்தார். அவருடைய விஜயம் தனிப்பட்ட விஷயமா யிருந் தும், பம்பாயி லிருந்து வெளிவரும் “பிளிட்ஸ்” என்னும் ஆங்கிலப் பத்திரிகை சற்று விஷமத்தனமான முறையில், ஈரான் மன்னருக்கு ஆபத்து வருவதா யிருந்தால் அவரை இந்திய அரசாங்கம் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகவே அந்த மன்ன ரின் தம்பி இங்கு விஜயஞ் செய்திருக்கிறார் என்று சாடு கோத்து விட்டது. நம் அரசாங்கம் உடனே இவ் வதந்தி பொய் யென்று மறுப்புவிட்டது. எனவே, ஈரானிய மன்னர் ஷா தம் மக்களின் விருப்பத்துக் கிணங்கவே இனியும் மன்னராக நீடித்திருக்கிறா ரென்பதும், மக்கள் விரும்பா விட்டால் எந்த நிமிஷத்திலும் முடிதுறக்கச் சித்தமா யிருக்கிறா ரென்பதும் துலக்கமா கின்றன. இப்படிப்பட்ட நிலையில் ஷாவைத் தூக்கிப் பிடிக்க வேற்று நாட்டு உதவியும் தேவை யில்லை; அதை அவர் தேடியும் நிற்கவில்லை. மாட்சிமை தங்கிய மன்னர் ஷா நீடூழி வாழ்க!

அந்தப் பொது மக்களின் அபிமானம் பெற்றுள்ள மன்னரின் படமே நம் இவ்விதழின் மேலட்டையில் பிரசுரமாகி யிருக்கிறது.

வருட சந்தா
உள்நாடு, சிலோன் ரூ. 4-8-0   பர்மா, மலேயாவுக்கு ரூ. 6-0-0

DARUL ISLAM   TAMIL MONTHLY

தாருல் இஸ்லாம்

ESTD. 1919

(தமிழகத்தில் மிகப் புராதன முஸ்லிம் மாஸிகை)
நிர்வாக ஆசிரியர்: அல்ஹாஜ், பா. தாவூத்ஷா, பீ.ஏ.

மலர் 32 | ஹிஜ்ரீ 1372, ரஜப் மீ — 1953, ஏப்ரில் மீ | இதழ் 4

தமிழ்நாடு ஆவணக் காப்பக ... சென்னை-600 00
19901.1

அந்தோ, பாபம்! மாஜீ மன்னரே!

ஆண் மகவைப் பெறவில்லை யென்னும் அற்பக் காரணத்துக்காக அநியாயமாய்த் தம் மனைவி பரீதாவை மாஜீ மன்னர் பாரூக் தலாக் சொல்லித் தள்ளிவிட்டார். அடுத்த மனைவியாக நரிமன் ஸாதிக்கை அடையப் பெற்ற அவர் அந்தத் தவங்கிடந்த ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். பெற்றும், பிரயோஜனம்? வாரிசுக்கு மகன் பிறந்த அதிருஷ்டத்தில் தந்தைக்கு அரச பதவியே அடியோடு போய்விட்டது. அவ்வளவுடன் நின்றிருக்கக் கூடாதா? அவர் தம் மனைவியுடனும் மக்களுடனும் நாடு துறந்து ஓட்டமாய் ஓடிப்போயும், இந்த மனைவி கூட அவருக்கு மிஞ்சவில்லை! சென்ற மாதம் 21உ இந்த நரிமன் ஸாதிக் தம் கணவரைத் துறந்து மிஸ்ருக்குள் வந்து புகுந்து கொண்டு விட்டார். மிஸ்ர் சிம்மாசனத்துக்கு எதிர்கால வாரிஸ் என்று பாரூக் கருதுகிற 16 மாதச் சிசு புஆத் மட்டுமே தற்போது பாரூக்குக்கு மீந்திருக்கிறது. இச் சிசுவின் எதிர்காலம் எப்படி யிருக்கிறதோ, அல்லாஹுஅஃலம்.

மிஸ்ரில் பாரூக் அரசாண்ட காலத்தில் அவர் புரிந்த அழிச்சாட்டியங்களின் எதிரொலி இவ்வளவுடன் நின்றுவிட வில்லை. ஆனால், அவருடைய மைந்தன் பிற்காலத்தில் பெரியவனான பின்பு அவனையே மிஸ்ருக்கு மன்னனாக உயர்த்துவதென்று மிஸ்ரீகள் சென்ற ஆகஸ்ட் மாதத்தில் கொண்டிருந்த எண்ணமுங் கூட இப்போது காற்றோடு கரைந்து போய்விட்டது. அந்தச் சிசு புஆத் சார்பாக ஆட்சி செலுத்த வென்று அமைக்கப்பட்ட ரீஜென்ஸி கவுன்ஸிலின் தலைவரா யமைந்திருந்த ரஷீத் முஹன்னா என்பவர் (44 வயது) சென்ற 12-1-53 அன்று கலகம் விளைத்து நஜீப் சர்க்காரைக் கவிழ்க்கச் சதி செய்த குற்றத்துக்காக 25 வருஷம் கடுங்காவல் (ஆயுள்) தண்டனை விதிக்கப்பட்டு விட்டாரென்று 30-3-53 அன்று தகவல் வெளியாயிற்று.

இதிலிருந்து என்ன விளக்க மாகிற தென்றால், பாரூக் இழைத்த பெரும் பாபங்கள் எவ்வளவு வன்மை மிக்கனவென்றால்: (1) அரச பதவி போய்விட்டது. (2) மனைவி போய்விட்டாள். (3) மகன் பிறந்தும், அவனுக்கு ஆசனமில்லை. (4) அந்த மகன் பெயரால் ஆட்சி செலுத்தியவருக்கு 25 வருஷம் கடுங்காவல் தண்டனை. (5) பாரூக்கின் மாஜீ நண்பர்கள் பாடு அதோகதியாகிப் போனது.

இவ்வளவெல்லா மிருந்தும், பாரூக் கூறுகிறார்: "நான் முடி துறந்தது என் சுயேச்சையிஷ்டத்துடனன்று. எனவே, நானே மிஸ்ருக்கு ராஜா! எனக்குப் பின் என் பிள்ளையே பட்டத்துக்கு வரவேண்டும்!" என்று.

அந்தோ, பாபம்! மாஜீ மன்னரே!

DARUL ISLAM ✦ தாருல் இஸ்லாம் ✦ TAMIL MONTHLY

ஏப்ரில் 1953, சென்னை - 5

காதியானிகளும் முல்லாக்களும்

பாக்கிஸ்தானிலே சென்ற மாத ஆரம்ப முதல் நடந்து வரும் மிகப்பெரிய குழப்பங்கள் பற்றிய விவரமான செய்திகளை நீங்கள் பத்திரிகைகளில் படித்தே வருகிறீர்கள். அங்கே நடக்கும் விபரீதங்கள் பற்றி நம் நாட்டுப் பத்திரிகைகள் பல தத்தம் தலையங்கங்களில் ஏதேதோ எழுதிவிட்டும் இருக்கின்றனவென்பதையும் நீங்கள் கவனித்திருக்கலாம். இவ்வளவு துலக்கமாகப் பலருடைய கவனத்தையும் ஈர்த்துவிட்ட பெருங் குழப்பத்தைப் பற்றிய விமரிசனத்தை நாம் சற்றுத் தெளிவுபடுத்த விழைகின்றோம்.

இப்போது பாக்கிஸ்தானிலே நடக்கும் குழப்பம் முக்கூட்டுக் குழப்பமாக விளங்குகிறது. ஒரு புறத்தில் காதியானிகள்; மற்றொரு புறத்தில் முல்லாக்கள்; மூன்றாவது, அரசாங்கம். முஸ்லிம் ராஜ்யமாக அமைந்துள்ள பாக்கிஸ்தானிலே காதியானிகள் முஸ்லிம்களாக ஏற்கப்படக் கூடாதென்பதும், அவர்களை மைனாரிட்டி வகுப்பினராக ஒதுக்கித் தள்ள வேண்டுமென்பதும், அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்து வரும் கனம் ஜபருல்லாகான் முதல், இறுதி காதியானி வரை எல்லாரும் பதவியை விட்டு நீக்கப்பட வேண்டுமென்பதும் முல்லாக்களின் கோரிக்கைகளாகும். காதியானிகளோ, தாங்களும் கலிமாச் சொல்லும் முஸ்லிம்களே யென்றும், தங்களை மைனாரிட்டி வகுப்பினரென்று பெயரிட்டு முஸ்லிமல்லாத கூட்டத்தினருடன் ஒதுக்கித் தள்ளுவது தகாதென்றும் எதிர்த்து வாதாடுகின்றனர். பாக்கிஸ்தான் அரசாங்கமோ, இந்தக் குழப்பத்துக் கெல்லாம் காரணம் அஹ்ரார் கூட்ட முல்லாக்களே யென்றும், இவர்கள் முன்பெல்லாம் பாக்கிஸ்தானே உதயமாகக் கூடாதென்று கிளர்ச்சி செய்தவர்களாகையால், இப்போது நன்றாய் வேரூன்றிவிட்ட பாக்கிஸ்தானை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டுமென்று இப்படியொரு சூழ்ச்சி செய்கிறார்களென்றும் அறிக்கை பிறப்பித்திருக்கிறது. இந்த நிலைமையிலே முக்கூட்டுப்போர் மும்முரமாகப் பாக்கிஸ்தானெங்கும் தீவிரமாக நடந்து வருகிறது.

பாக்கிஸ்தான் அரசாங்கம் இக் குழப்பத்தை நசுக்கி யொழிக்க வென்று எடுக்கிற நடவடிக்கைகள் நியாயமானவையா? அல்லவா? என்பதன்று இங்கு நாம் ஆராய வேண்டிய விஷயம். எப்படிப்பட்ட ஒரு ஜனநாயக அரசாங்கமும் தன்னகத்தே அமைதியும் ஒழுங்குமே நிலவ வேண்டுமென்று விழைவதும், அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பதும் குற்றங் கற்பிக்க முடியாத விஷயங்களாகும். எனவே, லாஹூரில் ராணுவ ஆட்சியை நிறுவியதும், கராச்சியில் கலகக்காரர்களை வன்மையாய்த் தண்டித்ததும், ராவல் பிண்டியில் ஒழுங்கு நடவடிக்கை யெடுத்ததும் பாக்கிஸ்தான் அரசாங்கம் தன் நாட்டு நலனுக்காகப் பின்பற்றிய நிர்வாக ஒழுங்கு முறைகளாகும். இதில் ஏதும் தவறிருந்தால் சட்ட சபையிலே கூடுபவர்கள் ஜனநாயக முறைப்படி பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும். எனவே, அந்த அரசாங்கத்தின் நடத்தையைப் பற்றி நாம் இங்கு ஆராய வேண்டியது அவசியமில்லை; அது முற்ற முற்ற உள்நாட்டு விவகாரமாகும்.

ஆனால், இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம், கக்ஷியும் பிரதி கக்ஷியுமான முல்லா - காதியானி தகராறிலே எவர் செய்வது நேர்மை, எவர் செய்வது முரண் என்பதே யாகும். இந்தப் பிரச்சினை கொஞ்சம் ருசிகரமான— இல்லை, அதிக வயிற்றெரிச்சலைக் கிளப்பும் தன்மை மிக்கதாய் இருப்பதால் சற்று விவரமாகவே ஆராயக் கடவோம்.

மேற்குப் பாக்கிஸ்தானும் இந்திய யூனியனும் சந்திக்கிற இடத்தில், கிழக்

குப் பஞ்சாபில் குர்தாஸ்பூர் என்று ஒரு ஜில்லா இருக்கிறது. அந்த ஜில்லாவிலே யுள்ள காதியான் என்னும் ஊரிலே சென்ற 117 ஆண்டுகட்கு முன்னே, 1835-இலே மிர்ஜா குலாம் அஹ்மத் என்ற பெயர் படைத்த ஒருவர் ஜனன மாயினர். அவர் ஒரு மௌலானா வாகவோ, மௌலவீயாகவோ, ஆங்கிலம் பயின்ற விற்பன்னராகவோ விளங்கிய தில்லை யெனினும், குர்ஆன் ஆயாத் களுக்கும், ஹதீது மேற்கோள்களுக்கும் மிகவும் நுணுக்கமான ஆழிய, அழகிய நவீனவியாக்யானங்களை எடுத்து விளக்கி இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கேவலமாக ஏளனஞ் செய்த எதிர்மத வாதிகளுக்கு ஒழுங்கான வாயாப்புக் கொடுத்து இஸ்லாத்தின் இணையற்ற தத்துவங்கள் சம்பந்தமான ஆதார பூர்வமான உயரிய நூல்கள் பலவற்றை உர்தூவில் எழுதி வெளியிட்டு, எல்லா முஸ்லிம்களின் புகழ் மாலையையும் சம்பாதித்துக் கொண்டார். ஆனால், அவருடைய கீர்த்தி வளர வளர அவருக்குப் பல சீடர்கள் ஏற்பட ஏற்பட அவர் தம்மை 'முஜத்தித்' என்றும் 'முஹத்தத்' என்றும் அழைத்துக் கொள்ளத் தொடங்கினர்; பிறகு காலஞ் செல்லச் செல்லத் தம்மை 'மஹ்தீ' யென்றும், 'மஸீஹ்' என்றும், அடுத்தடுத்துக் கூறிக் கொள்ள முற்பட்டார். இவற்றைக் கண்டு அருவருப் படைந்தவர்கள் அவரைப்பலவாறாகத் தூஷித்து, பத்வாக் களும் நிரம்ப விடுக்கத் தொடங்கிவிட்டார்கள். இவற்றால் அவர் கொஞ்சமும் தளர்ச்சி யுறாமல், இன்னம் ஒருபடி மேலே சென்று (அல்லது கீழே சென்று) தம்மை ஒரு 'நபி' யென்றும் அழைத்துக் கொள்ள ஆரம்பித்தார் (என்று பலர் கூறுகின்றனர். ஆனால், சிலரோ அவர் அப்படிக் கூறிக்கொள்ள வில்லை யென்கின்றனர்).

அந்த மிர்ஜா குலாம் அஹ்மத் என்பவர் 1908-ஆம் ஆண்டில், தமது 73-ஆம் பிராயத்தில் மரண மடைந்து விட்டார். அவர் ஆரம்பித்து வைத்துத் தலைமை வகித்த அஹ்மதியா இயக்க மென்னும் இஸ்லா மத பிரசார இயக்கத்துக்கு, அரப் மொழியில் மிகவும் பாண்டித்யம் பெற்ற மௌலானா மௌலவீ ஹக்கீம் நூருத்தீன் என்பவ ரொருவர் அப்பால் வந்து பதவியேற்று, சுமார் 6 வருஷங்கள் வரை தலைவராக இருந்து அதை நடத்தினர். பிறகு அவரும் 1914-இல் காலமாகி விடவே, அந்த ஸ்தானத்துக்கு எவர் தலைவராக அமர்வது என்னும் பிரச்னை எழுந்தது. அப்போது, காலஞ் சென்ற மிர்ஜா ஸாஹிபின் நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் ஒரு வெடி குண்டை வெடித்தார்கள். யார் அந்த மிர்ஜா ஸாஹிபை 'உண்மை நபி' என்று மனமார ஏற்றுக் கொள்கிறாரோ அவர் மட்டுமே அந்த அஹ்மதியா இயக்கத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அப்படி ஏற்க மறுக்கின்றவர் தலைவராக உயர அருகதையற்றுப் போவதுடன், ஈமான்மாறிய முர்த்ததாகவும் போய்விடுவா ரென்றும் குழப்பத்தைக் கிளப்பி விட்டார்கள். அந்தக் குழப்பத்தில் எதிர்த்து வெளியேறிய மௌலானா மௌலவீ முஹம்மதலீ எம். ஏ. எல் எல். பீ. என்பவரே மிர்ஜாவை நபியல்லர் என்று செவ்வனம் விளக்கிக் காண்பித்ததுடன், லாஹூருக்குச் சென்று ஒரு புதிய அஹ்மதியா இயக்கத்தை உண்டு பண்ணிக் கொண்டு விட்டார். அன்று முதல் காதியான் தலைமைப் பீடமாக ஓர் அஹ்மதியா இயக்கமும் (இந்த இயக்கத்தார் மிர்ஜாவை நபியென்று கூறுகிறவர்கள்), லாஹூர் தலைமைப் பீடமாக மற்றோர் அஹ்மதியா இயக்கமும் (இவ்வியக்கத்தார் அந்த மிர்ஜாவை நபி என்று ஏற்க மறுப்பவர்கள்) உற்பத்தியாகி, நெடுகவே இருந்து வருகின்றன.

காதியான் என்னுமூரிலுள்ள, மிர்ஜாவை நபி யென்று ஏற்றுக் கொள்ளும் காதியானி இயக்கம் முஸ்லிம்களிடையே அருவருக்கத் தக்க ஒரு பொய்ப் பித்தலாட்டத்தை உற்பத்தி செய்து விட்டு விட்டது. மிர்ஜாவை நபியென்று ஒவ்வொரு முஸ்லிமும் ஏற்க வேண்டுமென்று அவ் வியக்கம் பிரசாரம் புரிவதுடன், அப்படி ஏற்க மறுக்கிறவன் ஒவ்வொருவனுமே காபிர் என்றும் போக்கிரித் தனமாகக் கலகம் விளைக்க முற்பட்டது.

மிர்ஜா குலாமின் மைந்தரான மிர்ஜா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் என்பவரே அந்தக் காதியானி இயக்கத்தின் தற்போதைய தலைவராய் விளங்கி வருகிறார். தமது தந்தை ஓர் 'உண்மை நபி' யாகவே உயிர் வாழ்ந் திருந்தா ரென்று வன்மையாய்ப் பிரசாரம் புரிந்து வருகிறார். அந்த மிர்ஜா பஷீருத்தீனின் ஆப்த நண்பராகவும், அவர் தந்தையின் அத்தியந்த சிஷ்யர்ராகவுமே பாக்கிஸ்தானின் வெளிநாட்டு மந்திரி கனம் ஜபருல்லா விளங்கி வருகிறார். இத்தன்மைத் தாய காதியானிகளையும் அந்த ஜபருல்லா போன்றாரையுமே பாக்கிஸ்தானின் முல்லாக்கள் எதிர்க்கிறார்கள்.

மிர்ஜா குலாம் அஹ்மதை 'நபி' யென்று துணிந்து கூறுகிற காதியானிகள், குர்ஆன் ஷரீபும், ஹதீது ஷரீபும் முஹம்மத் நபி (சல் அம்) அவர்கள் மட்டுமே இறுதி நபி என்று திட்டவட்டமாய்க் கூறியிருந்தும், "**காத்தமன்னபிய்யீன்**" என்னும் அரபுத் தொடருக்கு என்னென்னவோ விதமான விஷம வியாக்யானங்களைக் கற்பித்து, தங்கள் கூற்றை மேலும் மேலும் முரட்டுத்தனமாய் வற்புறுத்தி வருகிறார்கள். இப்படி மிர்ஜாவை நபி யென்று அழைப்பதால் எவராவது சில குறிப்பிட்ட பேர்வழிகள் ஏதும் லாப மடைவதா யிருக்கலாம்; அல்லது அதைக்கொண்டு பிழைப்பு நடத்துபவரா யிருக்கலாம். ஆனால், மிகவும் படித்த மேதாவியும், சட்டகலா வல்லுநரும், ஆண்டவ னச்சங் கொண்டவரும், சிறந்த பேச்சாளரும், நுண்ணிய அறிவுத் திறன் வாய்க்கப் பெற்றவரும், நல்ல ராஜ தந்திரியும், மிக்க மதியூகியுமாகிய கனம் ஜபருல்லாகான் என்பவருங்கூட அந்த முரட்டுக் கட்சியினர்களான காதியானிகளைப் பின்பற்றி, மிர்ஜா குலாம் அஹ்மத் ஒரு 'நபி'யே என்று தவறாய்க் கருத முற்பட் டிருப்பதுதான் விந்தையினும் விந்தையாய்க் காணப்படுகிறது. அவருங்கூட மிர்ஜாவை நபி யென்று ஏற்காதவ ரெல்லாரும் காபிர்கள் என்று கருதுகிறா ரென்றேதான் கொள்ள வேண்டி யிருக்கிறது; எனவே, இப்படிப்பட்ட இஸ்லாமிய அடிப்படைக் கொள்கையில் முரணுண்டுபண்ணுகின்ற அவரையும் அவ ரினத்தினரையும் முஸ்லிமல்லாதார் இனத்திலேதான் சேர்த்துவைக்கவேண்டு மென்று முல்லாக்கள் கிளர்ச்சி செய்வதில் ஓர் அர்த்தமில்லாமலில்லை. கூடிய சீக்கிரத்தில் அந்தக் காதியானிகள் நல்ல ஞானம் பெற்று, தங்கள் தவற்றுக் கொள்கையினின்று தறிபட்டு, மிர்ஜா குலாம் அஹ்மத் நபியல்லர் என்றுணர்ந்து நேரான வழிக்கு வர இறைவன் துணை புரிவானாக!

ஆனால், இப்படி வழிகெட்ட காதியானிகளை நல்வழிக்குத் திருப்பிவிட எத்தனையோ நேர்மையான மார்க்கங்களிருக்க, பாக்கிஸ்தானிலே உள்ள முல்லாக்க ளென்னும் மௌலானாக்கள், மௌலவிகள் பலாத்காரமான முறைகளைக் கைப்பற்றி மிகுதியான குழப்பத்தை மூட்டிவிட்டு, அமைதியைக் குலைத்து, சமாதானத்தைச் சீர்கேடடையச் செய்து, கண்டோரும் கைதட்டி நகைக்கும் வண்ணம் உருப்படாத பெருங் கலகத்தை உண்டுபண்ணியதை எம்மால் வருத்தத்துடன் கண்டிக்காதிருக்க இயலவில்லை. அவர்கள் பின்பற்றும் இந்தப் பலாத்காரச் செயலால் இன்னம் அதிகமான ஊழல்களும் உபத்திரவங்களும் மட்டுமே விளைகின்றன வன்றி, ஏற்கெனவே வன்மையாக நபி யென்று மிர்ஜாவை யழைத்த காதியானிகள் இப்போது மேலும் மும்முரமாகத் தங்கள் கூற்றை உறுதிப்படுத்த எழுகிறார்களன்றி, கோரிய காரிய மேதும் சித்தியடைய வில்லை. காதியானிகளைத் திருத்த வேண்டு மென்று முல்லாக்கள் நிஜமாகக் கருத்துக் கொண்டிருப்பரேல், அவர்கள் பின்பற்றும் இஃதன்று சரியான மார்க்க மென்பதை இப்போதேனும் உணர்ந் திருப்பார்களென்று நம்புகிறோம். இஸ்லாம் உதயமான அந்த நாட்களி லிருந்து இந்தக் காலம் வரையில் எதிரிகளால் இஸ்லாத்துக்கு விளைந்த ஊறுகளைக் காட்டினும், முல்லாக்களால் மட்டுமே செப்பனிட முடியாத மாபெரும் ஊறுகளெல்லாம் விளைந்துவிட் டிருக்கின்றன வென்பதற்குச் சரித்திரம்

சான்று பகர்கின்றது. ஷீஆக்களை இந்த ஸுன்னீ முல்லாக்கள் இன்னமும்கூடக் காபிர்களென்றே அழைத்து வருகின்றனர். எனினும், எல்லா சுன்னத் வல் ஜமாஅத் முல்லாக்களும் இத்தனை நூற்றாண்டுகளாக என்னென்னவோ பாடுபட்டுப் பார்த்துங்கூட ஷீஆக்களைத் திருப்பவும் முடியவில்லை ; அல்லது அவர்களை ஒழிக்கவும் முடியவில்லை. இப்போது பாக்கிஸ்தானில் எத்தனையோ லட்சக் கணக்கான ஷீஆக்களும், கோஜாக்களும், போராக்களும், இஸ்மாயீலீகளும் இருந்துவருகின்றனரெனினும், அவர்களையெல்லாம் மைனாரிட்டி யென்று ஒதுக்க வேண்டுமென்று கத்த முடியாத பாக்கிஸ்தானின் முல்லாக்கள் திடீரென்று காதியானிகளுக்கு எதிராக மட்டும் இப்படிக் குழப்ப முண்டுபண்ண முற்பட்டிருப்பது மிகவும் வருந்தற்குரிய செயலேயாம். எனவேதான், அரசாங்கம்— எல்லா மக்களுக்கும் பொதுவான அந்தப் பீடம் — முல்லாக்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை யெடுக்க முற்பட் டிருக்கிறது.

எத்தனையோ கலீபாக்களின் உன்னதமான அரசாங்கங்களை முல்லாக்களென்பவர்களே கவிழ்த்துத் தொலைத்திருக்கிறார்கள். இவ்வளவையும் ‘சுன்னத்வல் ஜமாஅத்’ என்னும் பெயராலேயே அந்த முல்லாக்கள் புரிந்திருக்கிறார்கள் ; புரிந்து வருகிறார்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டு, அவதிப்பட்டு, அரும்பாடுபட்டுக் காயிதெ அஃலம் நிலைநாட்டிச் சென்ற பாக்கிஸ்தானை அவர்களே இப்போது வேரோடு பிடுங்கி யெறிய முற்பட் டிருக்கின்றனர். எனவேதான், எதிர் மதவாதிகள் இஸ்லாத்தின் ‘ஏக சகோதரத்வ வாஞ்சை’ இதுதானா? என்று கேலியுடன் கூறிக் கைகொட்டி நகைக்கிறார்கள். முஸ்லிம்கள் என்று தங்களையழைத்துக் கொள்ளும் காதியானிகளுக்கே பாக்கிஸ்தானில் இடமில்லை யென்றால், அயல் மதத்தினராகிய ஹிந்து, கிறிஸ்தவ மதத்தினருக்கு அங்கே எங்ஙனம் நீதி கிடைக்கப்போகிறதென்று வினவுகிறார்கள். பார்த்தீர்களா, முல்லாக்களென்போர் நம் சமூகத்துக்கு வழங்குகிற நற்கியாதியை ?

இந்தச் சந்தர்ப்பத்திலே நாம் மற்றொரு விஷயத்தையும் ஈண்டுக் குறிப்பிடல் வேண்டும். மிர்ஜா ஸாஹிபை நபி யல்லர் என்று மறுத்து வெளியேறிய லாஹூர் அஹ்மதியாக்களின் தலைவரா யிருந்த மௌ. முஹம்மதலீ சென்ற 1951 அக்டோபரில் காலஞ்சென்றதும், அந்தப் பார்ட்டியின் தற்போதைய நடவடிக்கைகள் ஊழல் மிகுந்தனவாய்ப்போய் முடிந்ததுடன், சமீப காலமாக, அந்தக் கட்சியினர் அனுவசியமாக முற்சொன்ன காதியானிகள் சார்பில் வ(க்)காலத் வாங்கி, மிர்ஜா ஸாஹிபை நபி யென்று ஏற்றுக்கொள்கிறவர்களுங்கூட முஸ்லிம்களே என்று வாதாட ஆரம்பித்தனர். எனவே, முதலில் காதியானிகள் மீது மட்டும் யுத்தம் தொடுத்த முல்லாக்கள் இப்பால் லாஹூர்ப் பார்ட்டியான — மிர்ஜாவை நபியல்லர் என்று கூறுகிற — அஹ்மதிகளையும் சேர்த்துத் தாக்க ஆரம்பித்துவிட்டனர். அந்த அஹ்மதிகள் பேசாமல் நடுநிலைமை வகித்திருந்தால், அல்லது அவர்களுடைய காலஞ் சென்ற தலைவர் மௌ. முஹம்மதலீயைப் பின்பற்றி, காதியானிகளுக்கு நல்லுபதேசம் புரிந்திருந்தால் அவர்கள் இக் கலகத்தில் சம்பந்தப்படாமல் ஒதுங்கியிருந்து தப்பித் திருப்பார்கள். ஆனால், அவர்கள் காதியானிகளின் சார்பிலே நிற்க முற்பட்டபடியால், காதியானிகள் பெற்றுக் கொண்ட கதியையே அஹ்மதீகளும் பெற வேண்டியதாய் வந்து வாய்த்தது.

இதுதான் விஷயம். பொதுப் படையாய் நோக்குமிடத்து, எந்த ஒரு நாட்டிலும் எவரும் வீண்குழப்பத்தை உண்டு பண்ணுவது மிகவும் கண்டிக்கத் தக்க விஷயமேயாகும். பாக்கிஸ்தானில் இப்போது ஏற்பட்டுள்ள குழப்பம் — அக் குழப்பத்துக்கு ஆதிகாரணம் யாரா யிருப்பினும், இறுதிக் காரணம் யாரா யிருப்பினும் — அஃது ஒழிக்கப்பட்டுத் தான் ஆக வேண்டும். சத்தியத்துக்கு என்றுமே அழிவில்லை. ஓரிரு பேர்வழிகள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மாற்றமான விதத்தில் பொருள் கூறுவதன் மூலம் உலகிலுள்ள சகல முஸ்லிம்களை

யும் ஏமாற்றி, "காத்தமன் னபிய்யீன்" என்றால் மிர்ஜா குலாம் அஹ்மத் என்றுதான் அர்த்தமென்றோ, ஸஹீஹ ஜாமிஉவில் (அத்தியாயம் 62) வருகிற மூன்றாவது ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது அந்த மிர்ஜாவேதான் என்றோ செப்படிவித்தை செய்து காண்பித்துவிட முடியாது. எனவே, காதியானிகளை நல்வழிக்குத் திருப்பிவிட முல்லாக்கள் ஆசைப்பட்டால், அவர்களைப் பேச்சு வன்மையைக் கொண்டும், எழுத்து வண்மையைக் கொண்டும், நேரான பாதை எதுவென்பதை ஆதாரபூர்வமாக விளக்குவதைக் கொண்டுமேதான் முடியுமன்றி, வீண் கலாட்டாவையும் உருப்படாத பலாத்காரக் கலகத்தைக் கொண்டும் இக்காலத்தில் முடியாது என்பதை யாவரும் உணர வேண்டும்.

ஸ்டாலின்

கம்யூனிஸத்தை உலக முற்றும் ஆழமாக வேரூன்றச் செய்ய வேண்டுமென்னும் ஒரே நோக்கங்கொண்ட ஸ்டாலின் தம் எண்ணம் முற்றுப் பெறாமலும், குறைந்த பக்ஷம் 150 ஆண்டுகளேனும் இம் மண்ணிடை உயிர்வாழ வேண்டுமென்று கொண்ட பேராசை நிறைவேறாமலும் சென்ற மாதம் உயிர்நீத்து விட்டார். கம்யூனிஸ்ட்கள் அவரை எவ்வளவு வானளாவப் புகழ்ந்து துதி பாடினாலும், எதிரிகள் அவரைப் பற்றி எவ்வளவு ஈனமாக இகழ்ந்துரைத்தாலும், உயிர் நீத்த ஒரு மனிதனைப் பற்றி இழிவாகப் பேசக்கூடாதாகையால், அவரை நாம் முன்பெல்லாம் எவ்வளவோ துவேஷத்துடனே கருதி வந்தோமென்றாலும், அவர் பற்றிய உண்மைகளை மட்டும் கொஞ்சம் சுருக்கமாகக் கூற விரும்புகிறோம்.

ருஷ்ய ஜார்களிடமிருந்து நாட்டை விடுவித்த பெருமைக்கு எப்படி லெனின் முற்ற முற்ற ஜவாப்தாரியோ, அப்படியே சென்ற யுத்தத்தில் ருஷ்யாவைக் காப்பாற்றிய சகல பொறுப்பும் ஸ்டாலினையே சார்ந்தாகும். ஹிட்லரைக் குழிதோண்டிப் புதைத்த பெருமை அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டையோ, அல்லது பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலையோ சார்ந்ததன்று; ஆனால், அந்தப் பெருமை ஸ்டாலினை மட்டுமே சார்ந்ததாகும். சென்ற உலக யுத்தத்தில் மற்றெல்லா நாடுகளையுங் காட்டில், ருஷ்யா தேசம் மட்டுமே சொல்லொணாச் சோதனைகட்கு உட்பட்டு, அளவிடற்கரிய தியாகங்களைப் புரிந்திருக்கிறது. நாஜீ அரக்கர்களை நேருக்கு நேர் நின்று போராடி வெற்றி பெற்ற பெருமை செஞ்சேனைகளையும், அவற்றை நடத்திய ஸ்டாலினையுமே சார்ந்திருக்கிறது. எனவே, ருஷ்ய மக்கள் அந்தப் பெரிய வீரனாகிய ஸ்டாலினுக்கு என்றென்றுங் கடமைப்பட்டிருக்கின்றனரென்பதில் ஐயமில்லை. அந்த வீரன் மட்டும் இல்லாமற் போயிருந்தால், ஹிட்லர் ருஷ்யாவை ஒருகால் நிச்சயமாக விழுங்கியே இருக்கக் கூடும்.

ஸ்டாலின் உலக மகா யுத்தத்தில் தம் நாட்டைக் காப்பாற்றியதால் பெற்ற புகழ் ஒருபுறமிருக்க, லெனின் 1924-இல் காலஞ் சென்றது முதல் ருஷ்யாவை ஒரு முன்னணிக்கு வரத்தக்க யோக்யதைகள் மிக்க நாடாக உயர்த்தி வைத்த பெருமை முற்றும் ஸ்டாலினையே சார்ந்ததாகும். ஜார் சக்ரவர்த்திகளின் ஏகபோகக் கொடுங்கோலாட்சியால் சிதைவுற்றுக் கிடந்த ஏழை ருஷ்ய மக்களை அந்த ஸோவியத் ஆட்சி முறைத்திட்டப்படி நல்ல அந்தஸ்துக்கு உயர்த்தி வைத்த கீர்த்தி முழுதும் அவரையே சாரும். ஏழைகளுக்கு நிலங்கள் உரிமையாக்கப்பட்டன; பெரிய நதிகளுக்கு அணைகள் கட்டப்பட்டன ; அந்த அணைகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது; எல்லாவிதமான யந்திரங்கள், ஆயுதங்கள், வேறு சாதனங்கள் முற்றும் பெருத்த அளவில் உற்பத்தி செய்யப்பட்டன; கடற்படைப் பலம் கற்பனை செய்யமுடியாத அளவுக்குப் பெருக்கப் பட்டது. வாஸ்தவத்திலேயே ஸ்டாலினின் தாய்நாட்டுப் பக்தியும் தம் மக்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நிஜமாகக் கொண்ட அன்பும் மிக உன்னதமானவையே.

சென்ற யுத்தம் முடிவுற்றதிலிருந்து ருஷ்யாவை ஈடிணையற்ற உலகப் பெரிய வல்லரசாக உயர்த்திவிட வேண்டுமென்றும், கம்யூனிஸ சித்தாந்தத்தை உலக முற்றும் பரவச் செய்து, 'சுப்ரீம் ஸோவியத்' என்ற ஹோதாவில் சாம்ராஜ்யத் தலைவராகத் தாம் திகழ வேண்டுமென்றும் ஸ்டாலின் கண்ட கனவுதான் பலிக்கவில்லை. குழப்பத்தில் மூழ்கிக் கிடந்த சீனாவை மட்டும் கம்யூனிஸ மயமாக அவரால் ஆக்க முடிந்ததேயன்றி, மலேயா, இந்தோ-சீனா முதலிய தென் கிழக்கு ஆசியாவையோ அல்லது மிஸ்ர், ஈரான் போன்ற முஸ்லிம் நாடுகளையோ, அல்லது நீகிரோவ மத்திய ஆபிரிக்க நாடுகளையோ ஸ்டாலினால் கம்யூனிஸ நாடுகளாக மாற்றிவிட முடியாமலே போய்விட்டது. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அங்கங்கே சிற்சில ரடங்கிய கம்யூனிஸ்ட் கட்சி என்னும் கட்சியைத் தான் ஸ்டாலினால் உற்பத்தி செய்துவிட முடிந்ததேயன்றி, (இரும்புத் திரைக்கு இப்பாலுள்ள) வேறெந்த நாட்டையும் பக்கா கம்யூனிஸ நாடாக ஆக்கிவிட முடியவில்லை. ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையிலே எத்தனையோ முறை ரத்ததிகாரத்தைப் பிரயோகிக்கச் செய்தும், அமெரிக்கா

வையோ பிரிட்டனேயோ ஒரு சிறிதும் அசைக்க முடியவில்லே.

ஸ்டாலின் வயது முதிர்ந்த பருவத்தை யடைந்த பின்னரும் ஓய்வெடுத்துக் கொள்ளாமல், அல்லும், பகலும் தாமே எல்லாவற்றையும் நேரில் கவனித்து வந்தார். ஜனநாயக நாடுகளில் அரசியல் தலேவர்களா யிருப்பவர்கள் ஓய் வெடுத்துக் கொண்டு ஒதுங்கி விடுவதும், அவர்களுடைய ஸ்தானங்களில் வேறு தலேவர்கள் அமர்வதும் இயற்கை. ஆனல், சர்வாதிகார நாடாகிய ருஷ்யாவிலே அதற்கு இடமில்லே. எனவேதான், இறுதி வரை அவர் ஓய்வெடுத்துக் கொள்ளவு மில்லே; மக்களுள் எவருக்கும் அவர் ஓய்வு கொடுக்கவு மில்லே. கம்யூனிஸ சித்தாந்தப்படி இந்த உலகமே எல்லா மாகையாலும், மரணத்துக்குப் பின் வாழ்க்கை யென்பது உண்டு என்ற நம்பிக்கை யில்லே யாகையாலும், இந்தத் துன்யாவிலே உயிருடன் வாழ்கிற நேரத்துக்குள்ளேயே எல்லாவற்றையும் நிறைவேற்றி முடித்துக் கொண்டுவிட வேண்டும். எனவேதான், ஸ்டாலின் தம் ஆயுளுக்குள்ளே எல்லாவற்றையும் சாதித்து முடித்துவிட வேண்டு மென்று நாடினர்; அதற்கொப்ப நீண்ட நாள் (74 வயது வரை) உயிர் வாழ்ந்தார். ஆனல், அப்ஸோஸ்! அவர் கனவு நனவாகா முன்னமே உயிர் துறந்து விட்டார். அவருக்கு இறுதிக் காலத்திலாவது கொஞ்சம் ஆண்டவ னச்சம் ஏற்பட வேண்டு மென்பதற்காகவே போலும் இறைவன் அவருக்குப் பெரிய வாத நோயை உண்டு பண்ணி, மூன்று நாட்கள் 'ஸக்ராத்தை'க் கொடுத்தானே என்று எண்ண வேண்டி யிருக்கிறது.

கடவுளில்லேயே இல்லே என்று நாஸ்திகக் கம்யூனிஸ்ட்கள் என்னதான் கூடியாய்க் கத்திய போதினும், ஸ்டாலின் என்னவோ அந்த ஆண்டவனுக்குப் பதில் சொல்லவே அவனிடம் சென்று விட்டார் என்றே நாம் கருதுகிறோம். எனவே, எவ்வளவு பாபங்களே அவர் உயிர் வாழ்ந்த காலத்தில் மண்ணிடைப் புரிந்திருப்பினும், அவருடைய ஆவி — (கம்யூனிஸ்ட்கள் மனித ஆவி யென்று ஒன்று கிடையா தென்று கூறிக் கொண்டே, தங்களேயும் அறியாமல் ஸ்டாலினின் ஆவியைப் புகழ்கின்றனர். அவர்கள் சித்தாந்தப்படி ஸ்டாலினின் உடலும் ஆவியும் ஒழிந்து போய்விட்டன வென்பது உண்மை யென்றல், அவர்கள் ஏன் ஸ்டாலினே இப்போதும் வாழ்த்த வேண்டும்?) — இறைவனின் கருணேயைப் பெற்றுக் கொள்ளுமாக! என்று ஆண்டவனே வந்திக்கின்றோம். இறைவனே மறந்து ஏதேதோ பேசும் கம்யூனிஸ்ட்கள் ஸ்டாலினின் இந்த எதிர் பாராத மரணத்தி னின்ருவது நல்ல பாடம் கற்று, எல்லாம் முடிவது மனிதனுலன்று; ஆனல், அவனேப் படைத்த ஏக பராபரனலே மட்டுமே யாகும் என்பதை இனியாவது உணர மாட்டார்களா?

விலே குறைக்கப்பட் டிருக்கிறது!

ஆப்டோன் படங்கள் அதிகம் சேர்க்கப் பட்டுள்ளன !!

மணவாழ்க்கையின் மர்மங்கள்

(புத்தப்புதிய ஐந்தாம் பதிப்பு)

கல்யாணமாகியும் பிரமசாரியா? விவாகமாகியும் விவரம் தெரியாதா? கண் மூடித் தனமான வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? இதுவரை தமிழில் எவரும் வெளியிடாத உன்னத உண்மைகள் நிரம்பிய எமது நூலே வாங்கிப் படித்துத் தெளிய இன்னம் தயக்கமேன்? கர்ப்பத்தடை, சிற்றின்பத்தில் பேரின்ப வாழ்க்கை, தகாத முறைகளேத் தவிர்க்கும் உபதேசம், தக்க முறைகளேப் பயில்விக்கும் உன்னத விவரங்கள், நுட்ப சாஸ்திரத்தை விளக்கமாக்கிக் காட்டும் விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் முதலிய யாவையும் ஒருங்கு திரட்டப்பட்ட இந்நூல் யாவர்க்கும் எளிதில் கிட்டும்படி பதிப்பிக்கப்பட்டுள்ளது. 344 பக்கங்கள் கொண்ட 8 நவீன ஆப்டோன் படங்களும், பலவித அபூர்வப் படங்களும் நிறைந்த இப்புதிய பதிப்பின் விலே ரூ. 4-8-0. தபாற் செலவு 0-12-0.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, ஷைரோட் :: சென்னே—5

மிஸ்ரில் இஸ்லாம்

தொழுகை இல்லாதவனுக்கு உத்தியோக மில்லை

நஜீப் பிறப்பித்துள்ள அரசாங்கப் பிரகடனம்.

மிஸ்ரிலே சமீபத்தில் ஓர் அரசாங்கப் பிரகடனம் பிறப்பிக்கப்பட் டிருக்கிறது. அதன்படி, ஒவ்வொரு வேளைத் தொழுகையின் குறிப்பிட்ட நேரம் வந்தவுடனே, அரசாங்க இலாகாக்களிலும். வேறு பொது ஸ்தாபனங்களிளும், அலுவலகங்களிலும் பணிபுரிகிற அத்தனை (முஸ்லிம்) சிப்பந்திகளும் ஊழியர்களும் ஜமாஅத்தாகச் சேர்ந்து அங்கங்கே ஐந்து வேளைத் தொழுகையையும் நிறைவேற்ற வேண்டும். நஜீப் அரசாங்கம் பிறப்பித்திருக்கும் பிரகடனத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு:—

கௌரவத்தையும் நீடித்த வாழ்வையும் விரும்புகிற ஒவ்வொரு நாட்டின் ஜீவிதக் குறிக்கோளும் எந்த நேர்மையான ஒழுக்கத்தின் மீது சார்ந்து நிற்கின்றதோ அந்த நேர்மை யொழுக்கத்தின் குறிக்கோளைப் புனருத்தாரணம் செய்கின்ற பாதையை நோக்கியே நம் நாடு முன்னேறிக்கொண் டிருக்கின்றமையாலும்;

எந்த நல்லொழுக்கத்தைப் பின்பற்றினால் இறைவன் தனது அருட் கொடையைத் தன் நல்லடியார்களுக்கு வருஷிப்பதாக வாக்குறுதியளித் திருக்கிறானோ, எதைப் பின்பற்றத் தவறினால் அல்லது மறுத்தால் தன் னடியவர்கள்மீது அவ்விறைவன் தண்டனையைக் கொடுப்பானென்பதாக எச்சரித் திருக்கிறானோ, அப்படிப்பட்ட நல்லொழுக்கங்களையே புனருத்தாரணம் செய்வதற்கு மதமே அடிப்படையா யமைந் திருப்பதாலும்;

தற்போதைய புதிய ஆட்சியில் நேர்மையும் யோக்கியத் தன்மையும் பற்றிய கொள்கைகள் இறைவனச்சத்தின் மீதும், நல்ல அமல்களைப் புரிந்து அவனிடம் நெருக்கத்தைப் பெற வேண்டுமென்பதன் மீதும் பொதிந்திருக்கின்றமையாலும்;

தொழுகை யென்பது எவ்விதக் குறைபாடு மற்ற இறைவன் மீது வைக்கப்படும் ஈரானின் முதற் குறிக்கோளாயமைந்திருப்பதுடன், ஒரு தனிப்பட்ட மனிதன் சம்பந்தப்பட்ட சுற்று வட்டாரத்திலும், ஒரு சமூகம் சம்பந்தப்பட்ட சுற்று வட்டாரத்திலும் பரிசுத்தத்தையும் வெற்றியையும் தரக்கூடிய பாதைக்கு அத்தொழுகை யென்பது தொழுகையாளிகளை நடத்திச் செல்கின்றமையாலும்;

பிரதம மந்திரி எமக்கு ஸிபாரிஷ் செய்திருப்பவைகளை யொட்டியும்:

நாம் இதன் கீழ்க் காணப்படும் பிரகடனத்தைப் பிறப்பிக்கிறோம்:—



மிஸ்ரின் பிரதமர்

முஹம்மத் நஜீப்

(1) பணிபுரிந்துகொண் டிருக்கிற நேரத்தில் ஒவ்வொரு தொழுகையின் வேளை வந்துற்றவுடனே, எல்லா மந்திரியாலயங்களிலும், அரசாங்க இலாக்காக்களிலும் அலுவல் பார்க்கும் சகல முஸ்லிம் ஊழியர்களும் சிப்பந்திகளும் ஜமா அத்களாகக் கூடி அவ்வவ் வேளைத் தொழுகையையும் நிறை வேற்றித் தீர வேண்டும்.

(2) பணிபுரிந்து கொண் டிருக்கிற நேரத்தில் ஒவ்வொரு தொழுகையின் வேளை வந்துற்றவுடனே, எல்லா முனிஸிபல், தேசீய அலுவலகங்களிலும், எல்லாப் பொதுக் கம்பெனிகளிலும், பொது நிலயங்களிலும், இன்னம் ஏனை ஸ்தலங்களிலும் அலுவல் பார்க்கும் சகல முஸ்லிம் ஊழியர்களும் சிப்பந்திகளும் ஜமா அத்களாகக் கூடி அவ்வவ் வேளைத் தொழுகையையும், நிறை வேற்றித் தீரவேண்டும்.

(3) எந்த மனிதனாவது தகுந்த காரணமில்லாது முற்சொன்ன விதமாகத் தொழுகையை நிறைவேற்றத் தவறிவிடுவனேயானால், அவனுடைய சம்பளத்தில் அல்லது கூலியில் அபராதம் விதிக்கப்பட்டுப் பிடிக்கப்படும். அப்படி விதிக்கப்படும் அபராதத் தொகை எந்த அளவுக்கு உட்பட்டதா யிருக்கு மென்பதை நிர்ணயிப்பதற்காக, ஒவ்வோர் அரசாங்க, தேசீய, பொது ஸ்தாபன, அல்லது வேறு ஸ்தாபன சிப்பந்திகள் அல்லது ஊழியர்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்படும் அங்கத்தினர்க ளடங்கிய கமிட்டி யொன்று அமைக்கப்படும்.

(4) இந்தப் பிரகடனம் அரசாங்க கெஜட்டில் பிரசுரமாகி ஒரு மாதத்துக்குள் அத்தகைய அபராதங்கள் விதிப்பதால் எந்த ஒரு மனிதனாவது திருந்தா விட்டால், இதற்காக வென்று பிரத்தி யேகமாக நிர்மாணிக்கப்பட் டிருக்கும் பிரத்தியேக நீதிமன்றத்துக்கு அவன் கொண்டு செல்லப்பட்டு, இந்தப் பிரகடனத்துடன் இணைக்கப்பட் டுள்ள ராணுவக் கட்டளைகளில் சொல்லப்பட் டிருக்கும் வண்ணம் விசாரணை புரியப்பட்டுச் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப் பெறுவான்.

(5) தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி அடுத்த ஆறுமாத காலத்துக்குள் தன் குற்றத்துக்காகக் கழிவிரக்கப்பட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் அவனைப் பழைய உத்தியோகத்திலேயே அமர்த்த மந்திரி சபைக்கு அதிகாரமுண்டு; ஆனால், அந்த மனிதன் எத்தனை நாட்களுக்கு உத்தியோகத்தி லிருந்து நீக்கப்பட் டிருந்தானோ அத்தனை நாட்களுக்கும் சம்பளம் பெற முடியாது.

(6) இந்தப் பிரகடனத்தை உடனடியாக அமல் நடத்துவதற்குப் பிரதம

மந்திரிக்கு அதிகாரமளிக்கப் படுகிறது.

[மிஸ்ர் தேசத்திலாவது இப்படியொரு பிரகடனம் பிறப்பிக்கப்பட்டு, தொழுகையென்பது சட்டப்படி கடமையாக்கப்பட்டு விட்டது. ஆனால், நம் நாடு போன்ற இடங்களில் 100-க்கு 97 பேர்கள் பெயருக்காக முஸ்லிம்களென்று சொல்லிக் கொண்டு, தொழுகையை எங்கேயோ காற்றில் பறக்கவிட்டு விட்டு அவ்லியாப் பரஸ்துக்கு விரைந் தேகுகின்றனர். நம் நாட்டுக்கு இப்படி ஒரு நஜீப் தோன்ற மாட்டாரா? என்றே எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ப-ர்.]

தீனுல் இஸ்லாம்

(மானிடருக் கேற்ற மார்க்கம்)

இஸ்லாத்தின் உன்னதக் கோட்பாடுகள் பற்றிய அபூர்வமான அழகிய சிறுநூல் இது. முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதாரும் மிகக் குறைந்த செலவில் இஸ்லாத்தின் சகலவிதமான அனுஷ்டான சித்தாந்தக் கோட்பாடுகளையும் வெகு எளிதில் கற்க உதவுவது இந்நூல் ஒன்றேதான். காலஞ் சென்ற மௌ. முஹம்மதலீ அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பு. லார்டு ஹெட்லீயின் முகவுரையும் போட்டோப் படமும் சேர்ந்திருக்கின்றன. விலை 10 அணா. தபால் செலவு தனி. சொற்பப் பிரதிகளே அச்சிடப்பட் டிருப்பதால் உடனே முந்திக் கொள்க.

பிரார்த்தனைகள் (துஆக்கள்)

(புத்தப்புதிய இரண்டாம் பதிப்பு)

குர்ஆன் ஷரீபிலுள்ள முக்கியமான 99 துஆக்கள் அரபி மூலத்துடனும், தமிழ்மொழி பெயர்ப்புடனும் அச்சிடப்பட்டு, சட்டைப்பைக்குள் அடங்கத்தக்க விதமாக பைண்டு செய்யப்பட் டிருக்கின்றன. இதுவரை தமிழில் இந்த மாதிரியான அபூர்வமான பிரார்த்தனை நூல் வெளிவந்ததில்லை. முஸ்லிம்கள் எந்த எந்த மாதிரியில் இறைவனிடம் குறையிரக்க வேண்டுமென்பதை நம் குர்ஆன் ஷரீப் உபதேசித்திருக்கும் நேர்த்தியை இதில் நன்கு கண்டு கொள்ளலாம். இந்தப் புதிய இரண்டாம் பதிப்பின் விலையில் மாறுதலில்லை. விலை அணா 12 தான்.

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை - 5.

அம்மயத் ஜுஜ்வு

(தமிழ் அர்த்தத்துடன்)

குர்ஆன் ஷரீபின் இறுதி முப்பதாம் பாகமாகிய அம்மயத் ஜுஜ்வின் ஒவ்வோர் ஆயத்தும் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டு, அவற்றின் கீழே சரியான தமிழர்த்தம் பொறிக்கப்பட்டுள்ள புத்தப் புதிய மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவந்து விட்டது. சென்ற இரு பதிப்புக்களையும்விட இப்புதிய பதிப்பு எல்லா அம்சங்களிலும் சிறந்து விளங்குவதுடன், "வல் லுஹா" என்னும் 93-ஆவது அத்தியாயம் முதல், இறுதிவரையுள்ள எல்லா அத்தியாயங்களுக்கும் ஒவ்வோர் ஆயத்தின் கீழேயும் சரியான தமிழ் உச்சரிப்பு எழுதப்பட் டிருப்பதால், அரபு ஓதத் தெரியாத எவரும் சுலபமாக அந்த ஸூராக்களைப் பாராயணம் பண்ண முடியும். 22 ஸூராக்களுக்கும் தமிழுச்சரிப்புக் காணப்படுவதால், சிறு குழந்தைகளுங்கூட இவற்றை எளிதில் படிக்க முடியும். நல்ல அழகிய வர்ண ஜாக்கெட் மேலட்டை போர்த்தப் பட்டுள்ள இந்நூல் கண் கவரும் வசீகர மிக்கது. தமிழ்நாட்டு முஸ்லிம் சிறுவர் பெரியோர் ஆகிய அனைவர்க்கும் இப் புஸ்தகம் ஒரு வரப் பிரசாதமாகும். மத்ரஸாக்களுக்குப் போய் ஓதக் கற்றுக் கொள்ள முடியாத இளவல்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த நண்பன். இன்றே இம் மூன்றாம் பதிப்பு நூலுக்கு ஆர்டர் கொடுங்கள். விலையில் மாறுதலில்லை.

விலை ரூ. 1-8-0 தான் தபால் செலவு தனி.

உமரே பாரூக் (றலி)

குலபாயெ ராஷிதீன் வரிசையில் இரண்டாவது கலீபாவாய் விளங்கி வரும் ஹஜ்ரத் உமர் கத்தாப் (றலி) அவர்களின் சரித்திர விவர நூலின் புத்தப் புதிய மூன்றாம் பதிப்பு வெளிவந்து விட்டது. இஸ்லாத்தின் இணையற்ற கலீபாவாய் விளங்கிய பெரியார் உமர் (றலி) அவர்களின் அப்பட்டமான உன்னத சரித்திர உண்மைகளை உணர்த்துவிக்கும் அழகான நூல் இதைப்போல் மற்றொன்று எப்போதுமே வெளிவந்ததில்லை. ஏற்கெனவே இரு பதிப்புக்கள் விற்று முடிந்து, இப்போது இப் புதிய அழகிய மூன்றாம் பதிப்பு வெளிவந் திருக்கிறது. விலை ரூ. 2-4-0 தான். தபால் செலவு தனி.

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை-5.

மிஃ'ராஜ்*

[லாகூர் மௌ. முஹம்மதலீ (மர்ஹூம்)]

"இன்னம், 'நிச்சயமாக, நும்மிறைவன் (எல்லா) மனிதர்களையும் அடைய வளைந்துள்ளான்,' என்று நாம் நுமக்குச் சொன்னபொழுது; மேலும், நாம் நுமக்குக் காண்பித்த (அந்த ரூயா) உவமதரிசனத்தை மானிடருக்கொரு சோதனையாக வன்றி, (வேறெதுவாகவும்) நாம் செய்து வைத்தோமில்லை"— குர்ஆன், 17:60.)

இவ்வாயத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ரூயா—(உவம தரிசனம்) என்பது மிஃ'ராஜ் என்றழைக்கப்படும் நபிகணாயகரது விண்ணுலக சஞ்சாரத்தைக் குறித்துக் காட்டுகிறது (புகாரீ, 63:42). இந்த "ரூயா", உண்மையிலே இஸ்லாம் இறுதியிலே வெற்றி பெற்றே தீருமென்பதைச் சூசிப்பித்துக் காட்டவல்ல ஒரு தீர்க்கதரிசனமாகவேயிருந்து வருகிறது. நபிகள் திலகத்திற்கு நேரிட்ட இவ்விண்ணுலக சஞ்சாரம் பஞ்சபூத சரீரத்துடனே நிகழ்வுற்றதா? அல்லது அஃதோர் ஆன்ம வுலக அனுபவமா? என்னும் பிரச்சினை குறித்துக் கல்விமான்களுக் கிடையே இன்றுகாறும் அபிப்பிராய பேதமே யிருந்து வருகிறது. பெரும்பான்மையான முஸ்லிம்கள், அந்த மிஃ'ராஜ் இந்தப் பஞ்சபூத சரீரத்துடனேதான் நிகழ்வுற்றதென்று எண்ணி யிருக்கிறார்கள்; ஆயின், அஃதோர் ஆன்ம வுலக அனுபவமே யென்னும் அபிப்பிராயத்தில் ஹஜ்ரத் ஆயிஷா பிராட்டி (றலி) முஆவியா (றலி) போன்ற பெரியார்களும் காணக் கிடக்கிறார்கள். வெளிப்படையாய் அந்த மிஃ'ராஜைக் குறித்தே கூறும் மீக்கூறிய ஆயத்தில், "நாம் நுமக்குக் காண்பித்த (அந்த ரூயா) உவமதரிசனத்தை மானிடருக்கொரு சோதனையாக வன்றி, (வேறெதுவாகவும்) நாம் செய்து வைத்தோமில்லை," என்று ஆண்டவன் அறைந்திருப்பதொன்றே, அந்த "விண்ணுலக சஞ்சாரம்" பஞ்சபூத சரீரத்துடனே தான் நிகழ்வுற்றதென்று கூறும் அபிப்பிராயத்தை அழித்தொழிக்க வல்லதா யிருக்கிறது. நபிபெருமான் (சல்) திருவாக்கும் இக் கூறிய அபிப்பிராயத்தையே வலியுறுத்துகிறது. கீழ்க் காணுமாறு ஒரு செய்தி காணக்கிடக்கிறது: ஜிப்ரீல் (அலை) யென்னும் வானவர் அவர்— (நபிபெருமானார்)—பால் "அன்றோர் இரவிலே விஜயம் செய்தார்; அது பொழுது அவரது ஹிருதயம் பார்த்துக்கொண்டிருந்தது; நபிகட்டிலகத்தின் (சல் அம்) கண்கள் உறங்கிக் கிடந்தன; ஆயின், அவரது ஹிருதயம் உறங்கவில்லை.— இப்படியேதான் நபிமார்கள் இருக்கிறார்கள்: அவர்களுடைய கண்களே உறங்கிக்கொண்டிருக்கும்; அன்னவர்களின் ஹிருதயங்கள் உறங்கமாட்டா. பிறகு ஜிப்ரீல் அவர்களைப் பின் பற்றினார்; மேலும், அவர் அவர்களை விண்ணுலகுக்கு எடுத்துச் சென்றார்"— (புகா. 61:24)

மிஃ'ராஜைக் குறித்துக் கூறும் இனியொருசெய்தியின் இறுதிச் சொற்கள், "மேலுமவர்கள் விழித்துப் பார்த்தார்கள்; ஹரம் ஷரீபிலே யிருந்தார்கள்," என்பனவாய்க் காணக்கிடக்கின்றன. புகா (98:37). அதன் சார்பா யுள்ள இன்னமொரு செய்தியிலே அந்த மிஃ'ராஜின் பொழுது நபிபெருமான் (சல் அம்) அவர்களது நிலைமை எவ்வாறிருந்தது என்பது குறித்துள்ள வசனங்கள், "நான் உறங்கிக்கொண்டிருக்கும் ஒருவனுக்கும் விழித்துக்கொண்டிருக்கும் ஒருவனுக்கும் இடை நிலையிலே யிருந்தக்கால்" என்று காணப்படா நின்றன (புகா 59:6). உண்மையிலே அந்த விண்ணுலக சஞ்சாரத்தின் பொழுது அப் பெருமானார் உறங்கிக்கொண்டிருந்தது கிடையாது; அவர்கள் ஓர் உவமதரிசனத்துக் குரிய துரியா தீத நிலையிலே இருந்திருக்கிறார்கள். ஆகவே, அஃதொரு பஞ்சபூத சரீரத்துடனே நிகழ்வுற்ற யாத்திரை அன்றென்னும் மெய்ம்மை செவ்வனம் விளங்கக் கிடக்கிறதென்பது உண்மையேயாம். நபிகட்டிலகம் (சல் அம்) உண்மையிலே அவ்வுயரிய ஏகவல்லோன் திரு முன்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவண் அனந்த அற்புதக் காட்சிகளை யெல்லாம் காண்பிக்கப் பெற்றார்கள்; ஆனால், அவ்வாறு கொண்டு செல்லப்பட்டது அப்பெருமானா ரவர்களின் (ரூஹ்) ஆவியே யாகும்; அவண் அற்புதக் காட்சிகளைக் கண்டு இன்புறறது அம்மஹானின் அகக்கண்ணாகிய ஆத்மநயனமேயாம். அப்பெருமானார் (சல்) இப்பவுதிக உடம்புடனே உயர்த்தப்படவுமில்லை; இப் பவுதிக (புற)க் கண்களால் அவ் வற்புதங்களைக் காணவுமில்லை; என்னெனின், ஆவி யுலகத் தோற்றங்களை ஆன்ம நயனங்களைக் கொண்டேதான் காணமுடியுமல்

(21-ஆம் பக்கம் பார்க்க)

* ரசூலுல்லா அவர்கட்கு ஏற்பட்ட மிஃ'ராஜைக் குறித்து நாம் ஒன்றுமே ஆராயத் துணியாது, அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டுமென்று ஓதுவாரும் உளர். அந்த மிஃராஜ்—ஆவியுலக அனுபவம் — எப்படியிருக்குமென ஆன்மஞான உவமதரிசனப் பழக்க மில்லாத மக்கள் துருவத் துணிவது கூடாதுதான். ஆயின், அவ் விண்ணுலக சஞ்சாரம் என்பது நபிகணாதருக்கு (சல்) இப்பஞ்சபூத சரீரத்துடன் நிகழ்வுற்றதா? அல்லது அஃது ஆன்ம வுலகில் நிகழ்வுற்ற ஓர் உவமதரிசனமா? என்று ஆராய்வதிலே தோஷமொன்றும் இல்லையென் றறிக. ப—ர்.

'பாலைவனக் கப்பல்கள்' என்று அழைக்கப்படும் ஒட்டகங்களைப் பற்றி ஓர் அமெரிக்க பத்திரிகை வெளியிட்டிருக்கும் ருசிகரமான தகவல் இது. படித்துப் பாருங்கள் !

ஒட்டகங்கள்

வீட்டு மிருகங்களுக்குள்ளே ஒட்டகத்தைப் போல் சடுதியில் சிடுசிடுப்புக் கொண்டுவிடக் கூடிய, எடுத்ததற்கெல்லாம் வம்பு வளர்க்கக்கூடிய பொல்லாத மிருகம் வேறென்றும் இருக்க முடியாது. சுமக்கொணுப் பொதிச் சுமையைச் சுமந்து செல்கிற விஷயத்தில் ஒட்டகங்கள் அதிசயமான மிருகப் பிறவியாகக் காணப்படினும், அவற்றுக்கு அந்த வேலையைச் செய்வதில் கடுகளவும் விருப்பமில்லை; மேலும் அவற்றுக்கு வேலை கொடுக்கப் போகிறோமென்பதை அவை தெரிந்து கொண்டவுடன், முற்கூட்டியே கத்திக் கதற முற்பட்டு விடும்.

மண்டியிட்டுக் குந்திக் கிடக்கிற ஓர் ஒட்டகத்தை அதன் சொந்தக்காரன் எழுப்பிவிட்டு நிற்கச் செய்தவுடனே அது கதறத் தொடங்கிவிடும். அதற்குச் சிறிது உணவு கொடுக்கப்பட்டவுடனே அது தன் கத்தலை நிறுத்திக்கொண்டுவிடுமென்றாலும், அந்த உணவு வயிற்றுக்குள் சென்று ஜீரணமானவுடன் மீண்டும் அது பழையபடி கத்த ஆரம்பித்துவிடும்!

ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒட்டகங்கள் இப்படி நடந்து கொள்வதில்லை. அப்படி அவை எப்போதுமே தொந்தரை விளைப்பதாயிருப்பின், அவற்றின்மீது அளவுகடந்த ஆத்திரங் கொண்டுவிட்ட ஒட்டக மோட்டிகள் வெகு நாட்களுக்கு முன்பே அவற்றைச் சுட்டுக் கொன்றொழித்திருப்பார்கள்; நாமும் இன்றைக்கு மருந்துக்குக்கூட ஓர் ஒட்டகத்தைக் காண்பதென்பது முடியாமற் போயிருக்கும்.

பாலைவனங்களின் கொடுமைகளைச் சமாளிக்கத்தக்க விதத்திலேதான் ஒட்டகம் படைக்கப்பட்டிருக்கிறது. வட ஆபிரிகா, அரப் நாடுகள் போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் சாதாரண ஒற்றைத் திமில் ஒட்டகங்களின் முதுகிலே கம்பளி மயிர் கிடையாது. ஆனால், குளிர்ந்த பிரதேசங்களாகிய மத்திய ஆசியா, தென் ருஷியா போன்ற வட்டாரங்களில் காணப்படும் இரட்டைத் திமில் ஒட்டகங்களின் மேலெல்லாம் மயிரடர்ந்து, குளிரைத் தாங்கத்தக்க விதத்தில் சருமம் அமைந்திருக்கும். இதனால் பகலின் உஷ்ணத்தையும், இரவின் குளிரையும் அந்த இரட்டைத் திமில் ஒட்டகங்கள் எளிதாகச் சமாளித்து விடுகின்றன.

மண்டியிட்டுக் குந்திக் கிடக்கும்போது ஓர் ஒட்டகத்தின் எவ்வெவ் வுறுப்புக்கள் மணல்மீது படுமோ அவ்வவ் வுறுப்புக்களெல்லாம் மெத்தை போன்று கடித்த சதைப் பற்றால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மெத்தை போன்ற சதைப் பற்று ஒட்டகத்தின் பாதங்களிலும், அடிவயிற்றிலும், முழங்கால் இணைப்புக்களின் மீதும் காணப்படுகின்றன. அதன் பாதங்களினடியில் வெடிப்பு விழுந்த மெத்தை போன்ற சதைப்பற்று இருப்பதால் அது தொந்தி மணல்மீது செல்கையில் அதில் புதையுண்டு விடாமலும், அமுங்கி விடாமலும் நடந்துசெல்ல முடிகிறது. கற்பாறைகள் கூட அதன் பாதத்தை அறுத்துவிட முடியா.

சுழன்று வீசும் கொடிய மணற்காற்றும் அம் மிருகத்தைத் தொந்திரவு செய்ய இயலாது. ஏனென்றால், எவ்வளவு கொடூரமாக மணற் காற்றுச் சுழன்று சுழன்று வீசி வெறும் புழுதி மண்டல

ாக ஆக்கிய போதினும், அதன் நீள மான கண்ணிமைகளால் கண்களை மூடிக் கொண்டு அவ் விமைகளையே முகமூடித் திரையாக உபயோகித்து அவற்றின் மூலமாக அது பார்வையைச் செலுத்தி வழியைக் கண்டுகொள்ளும். அதன் நாசித் துவாரங்களையும் இரு சிறு தசை மூடிகள் காவல் புரிகின்றன. தேவைப் படும்போது மூக்கை மூடிக்கொள்ளவும் திறந்துகொள்ளவும் அதனல் முடியும்.

ஒட்டகத்துக்கு மூன்று இரைப்பைக ளுண்டு. அவற்றிலே தான் அது தனக்கு வேண்டிய ஆகாராதிகளைச் சேமித்து வைத்துக்கொள்ளும். அந்த இரைப்பையிலுள்ள ஆகாரத்தைக் கக்கி அசைபோட்டு நைய மென்று விழுங்குவ தற்கு ஏற்றபடி அதன் அலகுகள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

ஒரு நீண்ட தூரப் பாலைவனப் பாதை யூடே செல்ல நேரும்போது அதற்குப் பசியோ அல்லது தாகமோ ஏற்பட்டு விட்டால், கண்ணுக்கெட்டாத தூரத்தில் மறைந்து கிடக்கும், பல மைல்களுக்கு அப்பாலுள்ள உணவும் தண்ணீரும் கிடைக்கும் இடத்தை மோப்பம் பிடித் துக் கண்டுணர்ந்து வழி தேடிச்செல்லும் அதிசயமான இயற்கை மாந்திரீக சக்தி அதற்குத் துணை புரிகிறது. பாலைவனங் களில் திசை தப்பிவிட்ட எத்தனையோ பிரயாணிகள் தங்கள் ஒட்டகங்களை அவற்றின் இஷ்டப்படி செல்லவிட்டு உயிர்பிழைத் திருக்கிறார்கள். ஏனென் ருல், அப்படி ஒட்டகங்களை அவற்றி னிஷ்டத்துக்கு விட்டு விட்டால், அவை தாமாகவே சுயமாக வழியைக் கண்டு பிடித்து, பாலைவனச் சோலைகளிருக்கும் திக்கை நோக்கி விரைந்து சென்று விடு கின்றன.

ஓர் அமெரிக்க ஸோல்ஜர் வட ஆபிரி காவில் ராணுவ ஊழியம் புரிந்துவந்த போது, மொராக்கோவிலுள்ள குடியான வர்கள் வயல்களை உழும்போது ஏர் கலப் பையின் நுகத்தடியின் ஒரு மூலையில் ஓர் ஒட்டகத்தையும் மற்றொரு மூலையில் ஒரு கழுதையை அல்லது மெல்லிய குதி ரையையும் கட்டி ஓட்டுவதைக் கண்டு அதிசயித்துவிட்டான்.

ஏன் இப்படி ஒருபுறத்தில் ஒட்டகமும் மறுபுறத்தில் வேறொரு மிருகமும் சேர்த்து இணைக்கப்பட்டு ஏர் உழப்படு கிறதென்று அவர் ஒருவனைக் கேட்டான். குடியானவன் இரண்டு ஒட்டகங்களை வாங்கக்கூடிய அளவுக்குப் பணக்காரனு யில்லாததால் இப்படி நடக்கிறதென்று ஒருவன் பதில் சொன்னன். ஒட்டகங் களுக்கு நேரே நடந்து செல்லும் தன் மை யில்லாமையால், ஒரு குதிரையோ அல்லது கழுதையோ சேர்ந்து நின்று நேரே நடந்து கலப்பையை இழுக்க வேண்டி யிருக்கிற தென்று மற்றொரு வன் பதிலீந்தான். இன்னெருவனே, இரண்டு ஒட்டகங்களை நுகத்தடியில் பூட்டினல் அவை இரண்டுமே ஒன்றுட னென்று சேர்ந்து சண்டையிட்டுக் கொள்ளுமாகையால் இப்படி நடக்கிற தென்று சொன்னன். மற்றுமொருவன் சொன்னன்: ஒட்டகம் மிகவும் சாந்த மான மிருகம்; குதிரையோ கொஞ்சம் உடல் நடுக்கமுள்ளது. எனவே, இரண் டையும் சேர்த்துப் பூட்டி ஏருழுகிறார்க ளென்று. ஆனல், பின்னுமொருவன் இதைத் தலைகீழாய்ப் புரட்டி, ஒட்டகம் ஒரு மிகவும் அற்பமான மிருகம். எனவே, நிலத்தை உழுதல் போன்ற சரியான வேலையைச் செய்வதற்கு அதை நடத்திக் காட்டுவதற்காக ஒரு சாதுவான மிருக மாகிய கழுதையையோ அல்லது குதிரை யையோ சேர்த்திணைத்துப் பூட்டியாக வேண்டி யிருக்கிறது என்று கூறினன்.

இத்தனைவிதமான பதில்களுள் எது வுமே அந்த அமெரிக்கனுக்குத் திருப்தி விளைக்காமையால், ஓர் ஒட்டகத்தையும் ஒரு கழுதையையும் பூட்டி ஏருழுது கொண் டிருந்த ஒரு குடியானவனை அவன் நெருங்கி, இந்த விசித்திரமான ஜோடியைப் பூட்டி ஏர் உழுவதன் இரக சிய மென்ன வென்று வினவினன். அவன் உழுவதை அப்படியே நிறுத்திக் கொண்டு, தலைமுறை தலைமுறையாகவே இப்படித்தான் நடந்து வருகிற தென் றும், "என் தாத்தா காலத்தில் இந்த

(20 - ஆம் பக்கம் பார்க்க)

ஹராத்தை ஹலாலாக்கும் செப்படி வித்தை பாருங்கள் !

[அபின் வரைவது]

II

கண் பார்வை யில்லாத குருடனொருவன் வழிதெரியாமல் தள்ளாடி நடந்து கொண்டே தரையோடு தரையா யிருக்கும் பாழ்ங் கிணற்றை நோக்கிச் செல்வதைக் காண்பவனொருவன் அக் குருடனை வழிமடக்கி நேரான பாதையில்தான் திருப்பிவிட வேண்டுமே யன்றி, அவன் பின்பற்றிச் செல்லும் பாதைதான் சரியான பாதை யென்று குதர்க்கம் பேசி, அவனைக் கிணற்றுக்குள்ளே விழச் செய்வது விவேக மாகாது. அங்ஙனமே, கண்ணிருந்துங் குருடாகித் திரியும் அவ்லியா பரஸ்த் பேர்வழிகளைச் சரியான மார்க்கத்தின் பக்கல் திருப்பிவிட வேண்டியது எல்லா உண்மை முஸ்லிம்களின் கடமையாயிருக்க, முற்சொன்ன அருவருக்கத் தக்க நூலாசிரியர்கள் அப்படிப்பட்ட வழிகெட்ட முஸ்லிம்களைமேலும் கெட்டலையும்படி உதாரண மேற்கோள்களுடன்—அதுவும் கவைக்குதவாத, உண்மைக்குப்புறம்பான, தவறான பாதைக்குக் கொண்டு விடும் மேற்கோள்களுடன் தொடையைத் தட்டி விடுவது சற்றாவது இஸ்லாத்துக்கு ஒத்ததாய்க்காணப்படுகிறதா?

ஒரு முஸ்லிமுக்கு விவாகமாகிப் பல ஆண்டுகள் கடந்தும் அவனுக்குக் குழந்தைகள் ஜனிக்கவில்லை யென்று வைத்துக் கொள்வோம். அதற்காக அவன் தனக்கும் தன் மனைவிக்கும் பலப் பலவித மருந்துகளைப் பிரயோகித்துப் பார்த்தும் பலன் பெறவில்லை. எனவே, அவன் மனமிடிந்து, நம்பிக்கை யிழந்து குந்திக் கிடக்கிறான். அப்போது அவன் குறையைப் பற்றிக் கேள்விப்பட்ட மற்றொருவன் அவனிடம் வந்து, ''தம்பி! இதற்காக ஏன் கவலைப் படுகிறாய்? நீ உன் மனைவியை அழைத்துக் கொண்டு...தர்காவுக்கு உடனே செல். அங்கே அடக்கமாகி யிருக்கும்...அவ்லியாக்களிடம் போய்க் கேட்டுக்கொள். அவர்களுடைய துஆ பாக்கத்தால் நிச்சயமாக உனக்கொரு பிள்ளை பிறக்கும். உன்னைப்போல் பிள்ளையில்லாமல் தவித்த எத்தனையோ விசுவாசிகளுக்கு அவர்கள் பிள்ளை கொடுத்திருக்கிறார்கள். நீ இதை வாஸ்தவமாக நம்பு!'' என்றெல்லாம் உபதேசிக்கிறான். இவ்வுபதேசத்தின் மீது அவனுக்கு நம்பிக்கை பிறக்காவிட்டாலும், அவனுடைய மனைவிக்கு வாயெல்லாம் பல்லாய்ப் போய் விடுகிறது. அதன் விளைவாக அவ்விருவரும் புறப்பட்டு, அந்தக் குறிப்பிடப்பட்ட தர்காவுக்குச் சென்று, அக் குறிப்பிடப்பட்ட அவ்லியாவின் உண்டியிலே பணத்தை நிரப்பிவிட்டு, அவருடைய கப்ரருகே நின்று (அல்லது அதனெதிரிலே ஸுஜூத் செய்து) பிள்ளை வரம் கேட்கிறார்கள்.

இப்படிப்பட்ட முதல் நம்பர் ஷிர்க் புரியும் அறிவிலிகளை முற்குறிப்பிட்ட ''ஹிதாயத்துல் அனாம் இலா ஜியாரத்தில் ஔலியாயில்கிறாம்'' என்னும் வழிகெடுக்கும் நூலின் 57, 58—ஆம் பக்கங்களில் காணப்படும் கீழ்க்கண்ட வருணனைகள் இன்னம் எவ்வளவு பொல்லாத அளவுக்கு நீசர்களாக இழியும்படி துணைபுரிகிறது, பாருங்கள்! அந்தப் பக்கங்களில் காணப்படும் வாசகங்களை உள்ளன உள்ளபடியே (அத்தனை பிழைகளுடனும்) அப்படியே எடுத்துக் காட்டுகிறேன்:—

> ''பிரபல்ய வியாபரியும் செல்வந்தருமான ஸ்பெயின் வாசி ஒருவருக்கு எல்லாவித சம்பத்துமிருந்தும் புத்திர சம்பத்து ஒன்று மட்டுமில்லாதிருந்தார். அவர் கேள்விபட்ட எல்லா பெரியாரிடத்தும் சென்று தமது குறையைத் தெரிவித்தார். அவர் விதியிலேயே பிள்ளை கிடையாதென்ற பதிலே பெற்றுத் திரும்பினார். கௌதுல் அஃலம் செய்யிதுனா முஹிய்யித்தீன் அப்துல் காதிறுஜீலானி (ரலி) அவர்களது கீர்த்திப் பிரதாபத்தைக் கேட்டு, பகுதாது சென்று, தமது முறைப் பாட்டைத் தெரிவித்துக் கொண்டார். அதற்கு கௌது நாயகமவர்கள் லௌஹை நோக்கினேன், அதில் உமக்கு ஔலாது இல்லை யெனத் தெரிய வருகிறது என்றார்கள். அம் மனிதர் பரிதாபத்துடன் நாயகமே, இந்த துர்பாக்கியனுக்கு பிள்ளை யில்லையென எல்லோருமே கூறிவிட்டனர். இரப்பார்க்கு இல்லையென ஈயும் தங்கள் வாயலைத் தேடி தமியேன் வந்துள்ளேன். பாவியின் மீது தயை கூர்ந்து கிருபை செய்தருள்வீர்களாக! என்று மன்றாடினார். அவரது மனோ நிலையறிந்து; மனமிரங்கி அலியே என்னில் நின்றும் உமக்கொரு பிள்ளையைத் தருகின்றேன். உமது முதுகை என்னுடைய முதுகுடன் சேரும். எனது முதுகந்தண்டி லிருப்பது ஆண் குழந்தை. அது உமது இல்லத்தில் பிறக்கும், எனது எல்லாவித இல்முகளுக்கும் அப்பிள்ளையே

வாரிஸாவார். அவர் எனது நாவாகவே யிருப்பார்...முஹியிய்யித்தீன் என்றகாரணப் பெயருடன் விளங்குவார். என்று ஆசி கூறி அனுப்பினார்கள். அவரும்சந்தோஷத்துடன் வீடு சென்றார். அன்று அவர் மனைவி கர்ப்பவதியாகி ஜனனமானவர்தான் ஷைகுல் அக்பர் முஹியித்தீன் இப்னு அறபி (ரஹ்) அவர்களாவர். இப்படி கலாயிதுல் ஜவாஹிர் மனாகிப் கௌதிய்யா 76—வது பக்கம் பார்க்கவும். கருமாத்தைக் கொண்டு தகப்பனின்றி பிள்ளையை வெளிப்படுத்த, ஔலியாக்களுக்கு சக்தி யுண்டா? என்று அல் இமாம் ஆரிப்பில்லாஹ் ஷைகு முஹம்மது கலீலீ ஷாபியீ அவர்களிடம் வினவப்பட்டதற்கு அங்ஙனம் செய்ய அவர்களுக்கு சக்தி யுண்டு, என்பதாய் கூறிய விடை பதாவா கலீலீ 1வது பாகம். 79 பக்கத்தில் காணப்படுகின்றது.”

இந்தமேற்கோளில் காணப்படும் தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களை ஊன்றிப் படியுங்கள். இந்தத் தடித்த சொற்களை அந் நூலில் இப்படியே தாம் அச்சிட் டிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்து என்ன வென்றால், ஓர் அவ்லியாவா யிருப்பவர்—(அவர் உயிருட னிருப்பினும், மரித்துப்போ யிருப்பினும்) தம்முடைய முதுகந் தண்டு வழியே ஊர்ந்து வரும் ஆண் குழந்தைகளைத் தம்முடைய பக்த சிகாமணிகளின் முதுகந் தண்டுக்கு மாற்றிவிட்டு, பிறகு அவர்களுடைய மனைவிகளின் கர்ப்பாசயத்துக்குள்ளே நுழையும்படி செய்து விடுகிறா ரென்பதை அழுத்தந் திருத்தமாய் உறுதிப்படுத்தி, கொஞ்ச நஞ்ச சந்தேகத்துடன் பிள்ளை வரங்கேட்டு தர்காவுக்குப் போகலாமா, வேண்டாமா? என்று சிந்தித்துக் கொண் டிருப்பவர்களை உடனடியாக தர்காவுக்கு இழுத்து விட்டு விடவேண்டும் என்பதாகவே காணப்படுகின்றது. மேலே எடுத்துக் காட்டப்பட்ட மேற்கோள் எவ்வளவு அசுத்த நாற்றம் வீசுகிறதோ அதனினும் கெட்ட நாற்றமே அவர்களுடைய தர்க்கத்திலும் வீசிக் கொண் டிருக்கிறது. பகுத்தறிவுள்ளவன் ஒவ்வொருவனும் இக்கூற்றைப் படித்தால் நகைக்காம லிருக்க முடியுமா?

கருமாத்தாம்!

ஆண்டவனின் நல்லடியார்களான அவ்லியாக்களுக்குக் கருமாத்து உண்டா, இல்லையா? என்பதன்று நாம் இங்கே ஆராய வந்த விஷயம். ஆனால், அந்தக் கருமாத்துக்களின் மகத்துவத்தை மிகைபடவும் மெய்க்குப் புறம்பாகத் திரித்துக் கொண்டும் சொல்லொணா அக்ரம அழிச்சாட்டியமான கப்ர் பரஸ்துக்கு முடுகிச் செல்லும் பாமர மக்களை இந் நூல் எப்படி மேலும் ‘சிண்டு விறைக்க’ச் செய்கிறது, பார்த்தீர்களா? இந் நூலாக்கியவர்கள் எவ்வளவு லாவகமாகக் கொடிய ஹாராமான காரியத்தைப் பரம சாத்விகமான ஹலாலாகத் தென்படும் படிசெய்கின்றனர், பார்த்தீர்களா? விக்ரஹத்தொழுபர்கள் தங்கள் கடவுள்களுக்கு (?) என்னென்ன விசேஷ சக்திக ளுண்டென்று புளுகிப் புகழ்கிறார்களோ அந்த அளவுக்கு இந்தப் பெரும் புளுகுகள் கொஞ்சமாவது சளைக்கின்றனவா? வாதத்துக்காகவாவது அவ்லியாக்களுக்கு அவர்களுடைய ஆயுட்காலத்தில் கருமாத்துக்கள் (அகடி தகடனா சக்திகள்) இருந்தன வென்று வைத்துக்கொள்வோம். அப்படியானால், அவர்கள் மரித்த பின்னரும் அச் சக்தி அவர்களுக்கு இருக்க முடியுமா? அவ்லியாக்கள் மாண்ட பின்னர் அவர்களுக்குச் சக்தி யில்லை யென்று நான் சொல்ல வரவில்லை; ஆனால் ஆண்டவனே தன் வேதத்தில், ஈஸா நபியைக் கேள்வி கேட்பா னென்று முன்னம் சொன்னேனே அதே இடத்தில் விளக்கிக் காட்டியுள்ளான், ஒரு பெரிய இஸ்ராயீல் நபியாகிய ஈஸா (அலை) அவர்களாலே கூடத் தங்கள் மரணத்துக்குப் பின் ஒன்றும் செய்து கொள்ள இயலவில்லை யென்று. எனவே, தவ்ஹீதைப் போதிக்க வந்த ஒரு பெரிய நபியாலேகூட— அதிலும் எப்படிப் பட்ட நபி? “மண்ணால் பறவை செய்து அதற்கு உயிர் கொடுத்தவர், குருடர்களுக்குப் பார்வையை யளித்தவர், குஷ்டரோகிகளைக் குணப் படுத்தியவர், மரித்தவர்களைப் பிழைக்க வைத்தவர்”— இப்படிப் பட்ட மஹா மஹா முஅஜிஜாத்கள் படைக்கப் பெற்ற ஒரு பெரிய நபியாலேயே கூட, தம்முடைய மரணத்துக்குப் பின் கிறிஸ்தவர்களை நல்வழியில் திருப்பிவிட முடியாமற் போய்விட்ட தென்பதை அவரே ஆண்டவனிடம் பகிரங்கமாய் ஒத்துக் கொண்டு விடுவார் என்று குர்ஆன்ஷரீப் திறந்த சொற்களால் அழகாக எடுத்துக் காட்டி யிருக்க, அந்தப் பெரிய நபி (அலை) யைவிட எவ்வளவோ கம்மியான கருாமத்துச் சக்தியும் தாழ்வான ஸ்தானமும் வகிக்கப் பெற்ற ஓர் அவ்லியாவால், தம் பெயரைச் சொல்லிக் கொண்டு தம் மரணத்துக்குப் பின்னர்த் தம் கப்ரெதிரே நின்று பிள்ளை வரம் கேட்கும் பிள்ளையில்லாத தம்பதிகளுக்கு எப்படிப் பிள்ளை கொடுக்க முடியுமென்று கேட்கிறேன். ஏதோ ஒரு புராணப் புளுகு மூட்டையில் எவரோ வாய்க்கு வந்ததை எழுதிவிட் டிருப்பதை ஆதாரமாக எடுத்துக் காட்டி, குர்ஆன் ஷரீபின் நற்போதனைகட்கு எப்படி முகமூடி யிடுகிறார்கள், பாருங்கள்!

அந்த அப்துல் காதிறு ஜீலானீ பிள்ளை கொடுத்த கதையைப் பற்றி எவ்வளவோ கற்பனையான வருணனையுடன் எழுதிய புண்ணியாத்மாக்கள் தங்கள் கற்பனை வெள்ளத்தின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், அந்த மஹானைப் பொய்யாக்கிக் காட்டிவிட்டார்கள். என்ன வென்றால், “லௌஹை நோக்கினேன், அதில் உமக்கு ஔலாது இல்லையெனத் தெரிய வருகிறது,” என்று அந்தப் பிள்ளை வரம் கேட்க வந்தவரிடம் கையை விரித்துவிட்ட அவர், அடுத்த க்ஷணத்தில் அந்த “லௌஹில் எழுதப்பட்டுள்ள தக்தீ ரென்னும் தலையெழுத்துக்கு முரணாக” எப்படிப் பிள்ளை கொடுத்தார்? ஒன்று, அந்த ஜீலானீமுதலில் சொன்னது பொய்யா யிருக்க வேண்டும்; அல்லது அது மெய்தானென்றால், லௌஹில் ஏற்கெனவே எழுதப்பட்டதை அவர் மறைத்துவிட்டார் என்று கொள்ள

வேண்டும். எப்படி நோக்கினும், முதலில் "உமக்குப் பிள்ளையே பிறக்காது என்பது உறுதி" என்று சொன்னவர் மறுநிமிஷம் பல்டியடித்து எப்படித் தம் வாக்கையே பொய்ப்பித்துக் காட்டினார் என்பது தெரியவில்லை. இப்படி ஒரு நிமிஷத்தில் முன்னுக்குப் பின் முரண் செய்யும் ஹம்பக் பேர்வழியா ஜீலானீ என்னும் பெரியார்? என்று மிக விநய பூர்வமாக நான் அந் நூலாசிரியர்களிடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

செய்வ தெல்லாம் ஷிர்க், புரிவ தெல்லாம் பித்தலாட்டம்; வணக்க மெல்லாம் அவ்லியாவின் கப்ர்மீது, ஆனால், பேசுவதோ தவ்ஹீது சித்தாந்தம்! அந்தத் தவ்ஹீதின் சட்ட திட்டங்களையே தங்கள் துர்நடத்தைக்கு ஏற்றதாக மாற்றிக் கொள்ள வேண்டு மென்னும் பேராசை! ஹராத்தை யெல்லாம் ஹலாலாக்கிக் காண்பித்துவிட வேண்டு மென்னும் வீண் இச்சை! இவற்றின் விபரீத முடிவைப் பாருங்கள்:—

"இய்யாக்க நஸ்தஈன்"

அந்த உஃவாக்கறை நூலின் 36-ஆவது பக்கத்தில், ஹராத்தை ஹலாலாக்கும் 'உலமாக்க' ளென்போர் கூறுகிறார்கள்:—"அல்லாஹ் ஒருவனைத் தவிர்த்து, வேறு யாரிடமும் குறைகளைக் கூறி உதவி தேடக் கூடாது என்பதற்கு சிலர் இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்ற ஆயத்தை மேற்கோளாகக் காட்டுகின்றனர். இது அவர்களது அறியாமைக் காட்டுகின்றது."

இப்படிப்பட்ட முகவுரையுடன் ஆரம்பித்து, குர்ஆனின் முதல் அத்தியாய மாகிய சூரத்துல் பாத்திஹா ஏவல் விலக்கல்களை விட்டு நீங்கிய தென்றும், அதில் வரும் ஆயாத்கள் எந்த முஸ்லிமையும் கட்டுப் படுத்தா வென்றும், குர்ஆனிலும் ஹதீதிலும் முறையே 500 ஆயாத்களும் * 3000 வசனங்களும் மட்டுமே ஏவல் விலக்கல்களைக் குறிப்பிடுகின்றன வென்றும், அந்த ஏவல் விலக்கல்களை மட்டுமே நாம் ஏற்று நடக்க வேண்டு மென்றும், "இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்த ஈன்" என்னும் ஆயத் முற்குறிப்பிட்ட 500 ஆயாத்களில் சேர்ந்த தன்று என்றும், எனவே அந்த இய்யாக்க நஃபுது ஆயத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட வேண்டு வேண்டும் கிஞ்சித்தும் பொறுப்பற்ற தனமாக அந்த நூலாசிரியர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். "எ ஆண்டவனே, உன்னையே வணங்குகிறோம், மேலும் உன்னிடந்தே உதவி தேடுகிறோம்" எதுனும் ஆயத் ஏவல் விலக்கலுக்குக் கட்டுப்படாத திருவாக்கிய மென்று நெஞ்சுத் துணிச்சலுடன் கூறுகிற இவர்களுக்கும், குர்ஆன் இறைவனின் வேதமே அன்று என்று எதிர்க்கிற யூத, கிறிஸ்தவ, ஆரிய சமாஜ, ஹிந்து, சீக்கிய, நாஸ்திக, கம்யூனிஸ திராவிட நிராகரிப்பாளருக்கும் இடையே என்ன வித்தியாசம் இருக்கிற தென்று நினைக்கிறீர்கள்? இந்தப் பிற் சொன்ன நிராகரிப்பாளர் குர்ஆன் முழுதுமே நம்மைக் கட்டுப் படுத்தாத கற்பனைக் காவியமென்று அழைக்கின்றனர். நம் ஹிதாயத்துல் அனாம்" ஆசிரியர்களோ சூரத்துல் பாத்திஹா என்னும் முதல் அத்தியாயம் உட்பட, அதிலும் சிறப்பாக, இய்யாக்க நஃபுது ஆயத்தும் மீதி 6165 ஆயாத்களும் நம்மைக் கட்டுப் படுத்தா வென்று பிதற்றுகிறார்கள். இதுதான் வித்தியாசம்!

நான் இக்கட்டுரை யாரம்பத்தில் கூறினேனே, பன்றி யிறைச்சியும் அதனுடன் சேர்ந்து வெந்த உருளைக் கிழங்கும் பற்றிய விவரமொன்று. அந்தக் கூற்றை இந்தக் கூற்றுடன் ஒப்பு நோக்கி நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள், இந் நூலாசிரியர்கள் அந்தக் கீழ்நாட்டு 'ஹாபிஸ் மாது'க்கு எப்படி முற்றும் நிகர்த்துக் காணப்படுகிறார்க ளென்பதை.

ஜியாரத் பற்றிய சில வின்னியாச மேற்கோள்கள்

"ஜியாரத்துக்குப் போகக் கூடாதென எண்ணம் வைத்து விலக்குகிறவன் இஸ்லாத்தைவிட்டு நீங்கினவனாகவும் அல்லாஹ் ரசூலுக்கு மாறு செய்தனாகவும் ஆகிவிடுவான் என்பதாய் அல்லாமா கிஸ்தலானி முல்லா அலீகாரி ஆகியவர்கள் கூறுவதாக மவாஹிபுல்லதுன்னியா 2 வது பாகம் 383 வது பக்கம் ஷரஹு ஷிபா 2 வது பாகம் 151 வது பக்கம், ஜௌஹர், முன்லம், ஷவாஹிதுல்—ஹக், மஷாரிகுல் அன்வார், தாருஸ்—ஸனிய்யா பீறத்தில் வஹ்ஹா பிய்யா முதலிய கிரந்தங்கள் கூறுகின்றன," என்னும் வாசகம் அந் நூலின் 64—ஆம் பக்கத்தில் காணக் கிடக்கிறது. கவனியுங்கள்! ஜியாரத்துக்குப் போகக் கூடா தென்று எண்ணம் வைத்து விலக்குகிறவன் இஸ்லாத்தை விட்டே நீங்கிய காபிராகி விடுகிறானாம்! முஸ்லிமாய் விளங்குபவனை எத்தனையோ மூ முல்லாக்கள் என்னென்ன பத்வாக்க ளெல்லாமோ வழங்கி அவனுக்குக் 'குபுர் பத்வா' விடுத்து, அவனைக் 'காபிர்' என்று அழைத்திருக்கிறார்க ளென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த அவ்லியா பரஸ்துக்காக வ(க்) காலத் பேசும் மௌலானா மௌலவீக ளென்னும் "பெரிய மனிதர்கள்" இன்னம் சில படிகள் மேலே ஏறி, அவ்லியாக்களின் கப்ர்களுக்கு ஜியாரத்துக்குப் போகாதவன், போகக் கூடா தென்று நினைப்பவன், போகிறவர்களைத் தடுத்து நிறுத்துகிறவன் ஆகிய ஒவ்வொரு முஸ்லிமுமே காபிர் என்று துணிகரமான பத்வாவை அச்சடித்து வெளியிட் டிருக்கிறார்கள். இவர்களுடைய இந்தக் குருட்டுத்தனமான பத்வாவுக்கு ஆதாரங்கள் அல்

* குர்ஆன் ஷரீபில் மொத்தம் 6666 ஆயாத்கள் இருப்பதாகக் கூறும் இதே பிருகஸ்பதிகள் அவற்றுள் 500 ஆயாத்கள் மட்டுமே ஏவல் விலக்கல்களுக்குக் கட்டுப்பட்டன, மீதி யெல்லாம் காற்றில்பறக்கப்பட்டுவிட வேண்டு மென்று பிதற்றுவரேல், இந்த வயிற்றெரிச்சலை என்னென்று சொல்வது? குர்ஆனின் ஒவ்வொரு சொல்லும் மனிதர்களின் நலனுக்காக இறைவனால் அருளப்பட் டிருக்க, 500 ஆயாத்கள் மட்டுமே செல்லும் என்றால், மீதி யெல்லாம் வெற்றெனத் தொடுக்கப்பட்ட வீண் சொற்களென்றா அர்த்தம்? என்று நாம் அந்தப் பிருகஸ்பதிகளை அறைகூவி யழைக்கிறோம். ப-ர்.

லாமா கிஸ்தலானி, முல்லா அலீகாரி, இன்னம் சில கண்ணியமான (?) கிரந்தங்கள்!

ஆனல், ரசூலுல்லாஹ் (சல்) திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்: "எவனொருவன் நமது தொழுகையைத் தொழுது, நமது தொழுந் திசையை—(கஃபாவை) முன்னோக்கியும் நிற்கிறானே, நம்முடைய பலியிடப்பட்ட பிராணிகளையும் புசிக்கிறானே, அவனொரு முஸ்லிமே யாவான்; அவனுக்கு அல்லாஹ்வின் உறுதி மொழியும், அவனுடைய தூதரின் உறுதி மொழியும் உண்டு; ஆதலால் அல்லா (ஹ்) வின் உறுதி மொழிக்கு நீங்கள் நம்பிக்கை மோசம் செய்யாதீர்கள்"— (புகாரீ). இந்த ரசூலுல்லா (ஹ்) சல் அம் அவர்களின் "உம்மத்துக்க"ளான மௌலானா மௌலவீ அல்லாமாக்கள் இந்த ஹதீதை எவ்வளவு மெய்ப்படுத்திக் காட்டும் ஸாலிஹீன்களாக விளங்குகின்றனர், பார்த்தீர்களா!

அவ்லியாக்களின் கப்ரெதிரே எவ்வாறு நின்றுகொண்டு 'ஜியாரத்' செய்தல் வேண்டுமென்று அந்நூலாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள், தெரியுமா?— "ஜியாரத் செய்கிறவர்கள் கபுராளிகளின் முகத்தை முன்னோக்கி, தொழுகையில் கட்டுவது போல் கைகட்டி ஒழுங்கு மரியாதையுடன் நின்று, ஸலாம் கூறி, குர்ஆனில் நின்றும் அல்ஹம்து, யாஸீன் முதலிய சூராக்களை ஓதி கையேந்தி துஆ கேட்டு ஜியாரத் செய்ய வேண்டு(ம்)...பழங்கள் நிறைந்த மரக்கொப்பு தாழ்மையாகத் தலை கவிழ்ந்து எங்ஙனம் பூமியை நோக்கி வளைந்திருக்கிறதோ அங்ஙனமே, அறிஞர்...நடப்பர்...எனவே, ஜியாரத்தின் போது தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் கடைபிடிப்போர், அதற்குள்ள சன்மானத்தைப் பெற்றுக் கொள்வர்..." அஃதாவது, கப்ருக்கு முன்னே நின்று, பழங்கள் நிறைந்த மரக்கொப்புத் தாழ்ந்திருப்பதைப் போல், ஜியாரத் செய்பவர்கள் ருகூஃ செய்ய வேண்டுமாம்! பிறகு அந்த மரக்கொம்பில் மிக அதிகமான பழங்கள் செறிந்துவிட்டால் அது தரையில் எப்படி ஸுஜூத் செய்துவிடுகிறதோ, அதைப்போல் இவர்களுக்குப் பக்தி மிகுந்து கரை புரண்டோடத் தொடங்கினல் இவர்களும் கப்ரெதிரே தரையில் ஸுஜூத் செய்துவிடலாமென்று அர்த்தம்! ஏனென்ருல், பழம் நிறைந்த மரக்கொம்பைப் போல் பக்தர்கள் அவ்லியாக்களின் கப்ர் முன்னே நிற்க வேண்டுமல்லவா?

[மதீனவில் ரௌளா ஷரீப் எதிரிலே முஸ்லிம்கள் எங்ஙனம் ஜியாரத் செய்கின்றனரென்பதை, ஹஜ்ஜுக்குச் சென்றுவந்த ஹாஜிகளிடம் நீங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டால், இந் நூலாசிரியர்கள் கூறும் ஜியாரத்தின் வேடிக்கையை விளங்கிக் கொள்ளலாம். ப—ர்.]

"ஹிதாயத்துல் அனம்" என்னும் நூலில் ஒவ்வொரு பக்கத்திலும் உளறிக் கொட்டி வைக்கப்பட்டிருக்கும் பிதற்றல்களுக்கு முற்றும் விளக்கம் எழுத முற்படுவோனல், பகுத்தறிவுள்ள முஸ்லிம்கள் மட்டுமின்றி, இஸ்லாத்தை ஏளனஞ் செய்து எள்ளி நகையாடும் எதிர்மதவாதிகள் கூட வாய்விட்டுச் சிரிக்க முற்பட்டுவிடுவ ராகையால், மாதிரிக்காக மேலே எடுத்துக் காட்டிய சில கயமையான வாசகங்களுடன் நிறுத்திக் கொண்டு, உண்மையை ஆராயக் கடவோம்.

ஆண்டவன் உலகத்தில் படைத்துள்ள சகல மனிதர்களுக்குமே பிறப்புண்டு; மரணமு முண்டு. இந்தப் பொது விதிக்கு நம் இறுதி நபி முஹம்மத் முஸ்தபா ரசூல் (சல் அம்) அவர்களுங்கூட விலக்காயமையவில்லை. பிற்காலத்தவர் எங்கே நபியவர்களை (சல்) நாமெல்லாரும் சேர்ந்து கொண்டு ஆண்டவனின் அவதார மென்று சொல்லிவிடப் போகிறோமோ என்பதற்காகவே, குர்ஆன் ஷரீபில் ஒருமுறைக்கு இரு முறையாக, "(ஏ நபியே!) நானும் உங்களைப்போல் ஒரு மனிதனே என்று சொல்லக் கடவீர்!" (18:110, 41:6) என்று நபி கட்டிலகத்தைப் பார்த்துக் கட்டளை பிறப்பிக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்? எல்லா மனிதரும் எப்படி இயற்கையை ஒத்து, பிறப்பு இறப்புக்கு இலக்காகி யிருக்கின்றனரோ அப்படியே தாம் இறுதி நபியும் (சல்), அவர்களுக்கு முன்னே தோன்றிய எல்லா நபிகளும், அவர்களுக்குப் பின்னே வரப்போகிற சகல அவ்லியாக்கள், குத்புகள், இன்னம் ஏனைப் பெரியார்கள் யாவரும் இயற்கைக்கு ஒத்தவிதமாகவே விளங்கினர், விளங்குவர் என்றுதான் இதற்கு அர்த்தம். இதை விடுத்து, அவ்லியாக்களென்போர் சாதாரண மனித இயற்கைக்கு அப்பாற்பட்டவர்களென்று கூறுவதும், அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் என்ன என்ன கருமாத்துக்களைச் செய்து காண்பித்தார்களோ அத்தனை கருமாத்துக்களையும் அவர்கள் மரணமடைந்த பின்பும் செய்து காண்பிக்கிறார்களென்று கூறுவதும், எனவே, அந்த அவ்லியாக்கள் அடக்கமாகியிருக்கும் ஸ்தலங்களை முத்தமிடலாமென்பதும், எதிரே நின்று ருகூஃ, ஸஜ்தா செய்யலாமென்று ஜாடையாகக் கூறுவதும், கொடியேற்றலாமென்பதும், சந்தனம் பூசலாமென்பதும் குர்ஆனையே நிராகரிக்கும் பெரும் பாதகச் செயல்களாகக் காணப்படவில்லையா? ஆண்டவனும், ரசூலும் நமக்கு என்ன போதித்துச் சென்றார்கள்? நாமென்ன செய்கிறோம்?

பரிசுத்த மற்றவன்

குர்ஆன் ஷரீபு பரிசுத்தமற்றவனல் தீண்டப்படத்தகாததாகும் (56:79) என்று ஆண்டவன் எடுத்துக் கூறியிருக்கிறான். இந்த ஆயத்துக்குக் குறுகலான வியாக்யானம் செய்பவர்கள், ஒலுவில்லாமல் குர்ஆனைத் தீண்டக் கூடாது என்று எழுதுகிறார்கள். விரிவான வியாக்யானம் என்னவென்பதை நாம் ஆராய்வோமானல், அகப் பரிசுத்தமும் புறப் பரிசுத்தமு மற்றவர்களுக்குக் குர்ஆன் பிரயோஜனப்பட மாட்டாது என்றே தெரியவரும். அஃதாவது, குர்ஆனின் கட்டளைகளைப் புறக்கணித்து நேர் முரணாக நடந்து கொள்ளுகிறவனொருவன் அவ் வேத நூலைத் தீண்டுவதால் எவ்விதமான பயனையும் பெற்றுக் கொள்ள மாட்டான் என்று விளக்கமாகச் சொல்லலாம். எனவே, குர்ஆனை நெருங்கி அதன் மூலம் மேன்மையை யடைய

விரும்புகிறவன் அதைப் பெற்றுக் கொள்ளத் தக்க யோக்கியதாம்ச முடையவனாக (முத்தக்கீனாக)த் தன்னை மாற்றிக் கொண்ட பின்னர்த்தான் அதைத் தீண்டவேண்டும் என்று குறிப்புத் தொனிக்கிறது.

இங்ஙனமிருக்க, அவ்லியாக்க ளென்போர் ஆண்டவனின் ஏவல் விலக்கல்களுக்கு முற்றிலும் சிரம் சாய்ப்பவர்கள். தவ்ஹீதுக்காகவே உயிர் வாழ்ந்தவர்கள், உயிர் கொடுத்தவர்கள். ஆண்டவனின் கட்டளைகள் எங்ஙனம் எழுத்துருவில் குர்ஆனில் ஜொலிக்கின்றனவோ, அங்ஙனம் பூதவுடலுருவில் அவனியில் திகழ்ந்தவர்கள். குர்ஆன் எப்படிப் பரிசுத்தமிக்க வேதமோ அப்படியே அவ்லியாக்கள் பரிசுத்தமே உருவா யமைந்தவர்கள். இவர்கள் அடக்கமாகி யிருக்கும் புனித ஸ்தலத்தைச் சென்று தீண்ட வேண்டு மென்று எண்ணங் கொள்ளும் முஸ்லி மொருவன் கிஞ்சித்தாவது அகப்புறப பரிசுத்தமுள்ளவனா யிருக்க வேண்டாமா? குர்ஆனைத் தீண்ட லாயிக்கற்றவனுக்கு அது பயன்படாததே போல், அவ்லியாவை நெருங்கச் சற்றும் லாயிக்கற்ற, ஷிர்க் புரிகிற, குபிரியத் மிகுந்த, ஈமானுக்குத் துரோக மிழைக்கிற, பொய் பேசுகிற, சூதுவிளையாடுகிற, மது வருந்துகிற, ஜினா செய்கின்ற 'யோக்கிய புருஷ'னொருவன் தன்னை ஒரு முஸ்லிமென்று கூறிக்கொண்டு அங்கே சென்றால்—அதுவும் ஆண்டவனிடம் கேட்க வேண்டிய குறையிரத்தலை அவ்லியாவிடம் கேட்டுக் குறுக்குப பாதையில் பலனடைய நினைத்துச் சென்றால், "லா யமஸ்ஸஹூ இல்லல் முதஹ்ஹரூன்!" —"பரிசுத்தமானவர்களைத் தவிர (வேறு) யாரும் இதைத் தீண்டார்!" என்றுதானே அந்த அவ்லியாவின் ஆவி ஜபிக்கும்? ஆண்டவனுக்கு மாற்றம் புரிகிற அசுத்தமானவனுக்கு இறைவனிட மிருந்தோ, ரசூலிடமிருந்தோ, குர்ஆனிடமிருந்தோ, அல்லது அவ்லியாவிடமிருந்தோ எத்தன்மைத்தாய நன்மையும் கடுகத்துணையும் கனவிலுங்கூடக் கிட்ட முடியாது. "ஹிதாயத்துல் அனாம்" பேர்வழிகள் இன்னம் எத்தனை ஆயிரம் பக்கங்களில் இன்னம் எத்தனை நூல்களை எழுதி அச்சிட்டுப் பரத்தி அவ்லியா பரஸ்துக்காக வு(க்) காலத் வாங்கிய போதினும், ஹராம் ஹராமாகவேதா னிருக்குமே யன்றி, அதைக் கிஞ்சித்தும் ஹலாலாக்கிவிட முடியாது, முடியாது, முக்காலும் முடியாது.

எச்சரிக்கை

நூற்றுக் கணக்கான 'ஆலிம்க' ளென்போர் தங்கள் கண்களை இறுக மூடிக் கொண்டு, தங்கள் மனச்சாட்சிக்கே முற்றிலும் விரோதமாக இந் நூலில் கையொப்பமிட்டிருப்பினும், அவர்கள் மற்றொரு மன்னிக்க முடியாத பெரும் பாபத்தை இழைத்திருக்கிறார்கள். தர்காக்களில் நடக்கிற அத்தனை பித்அத் ஷிர்க்கும் சரிதா னென்பதை அவர்கள் என்னென்ன கவைக்குதவாத மேற்கோள்களையெல்லாம் எடுத்துப் போட்டு, இந் நூலைத் தயாரித்திருந்தபோதினும், இதில் ஓரிடத்திலாவது "கூடு எடுக்கலாம்!" என்று தீர்ப்பு வழங்க முடியவில்லை. கொடியேற்றலா மென்று கூட முடிவு கூறியுள்ள அவர்களால், கூடெடுப்பதற் கென்று எந்த ஓர் ஆதாரத்தையும் (கற்பனையாகக்கூட) அவர்களால் கற்பிக்க முடிய வில்லை. எனவே, அவர்களே மறைமுகமாக அதை ஹராம் என்றே ஏற்றுக் கொண் டிருக்கின்றனர்.



ஆனால், இப்போதும் நாமென்ன காண்கின்றோம்? இதோ மேலே படம் போட்டுக் காட்டி யிருக்கிறோமே, இது 'நாகூர் ஆண்டவர்கள்' பெயரால் ஜமாதியுல் ஆகிர் மாதம் பிறை 10-இல் நாகபட்டினத்திலிருந்து நாகூருக்கு இழுத்துச் செல்லப்படும் "சந்தனக் குடம்" வைத்த தேராகும். இதை—இந்தப் பக்கா ஹராமான பெரும்பாபச் செயலை ஒழித்துக்கட்ட யார் முற்படுகிறார்? அந்த 'ஹிதாயத்துல் அனாம்' நூலில் கையொப்பமிட்ட பல பிருகஸ்பதிகள் தங்கள் கண்களை அகல விரித்துக் கொண்டு தான் இந்த கேலிக் கூத்தை—ஹிந்துக்கள் தேர் இழுப்பது போன்ற செயலைக் கூர்ந்து பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்.

இது சாற்றெனப் படுமோ, சதுரெனப் படுமோ, முஸ்லிம் வீரர்காள், பதில் கூறுங்கள்!

(தொடரும்)

(15 – ஆம் பக்கத் தொடர்)

முறைதான் சிறந்த முறையென்று அனுஷ்டிக்கப்பட்டு வந்தது; அவருக்கு எது நல்லதாகப் பட்டதோ அதுவே எனக்கும் நல்லதாகப் படுகிறது. அவ்வளவேதான்!" என்றும் பதிலீந்தான்!

(13 - ஆம் பக்கத் தொடர்)

லது, அவ் வான்மவுலக விஷயங்களை இங்குள்ள புற (பவுதிக)க் கண்களால் எவ்வாறு காணமுடியும்?

இவ்வான்மவுலக உவமதரிசனத்துக்கு ஓராழிய தாத்பரியம் இருந்து வருகிறது: இந்த மிஃ'ராஜ் நிகழ்வுற்ற நேரத்திலே நபிபெருமானார் (சல் அம்) இம்மானிட வுலகினிலே உதவுவாரற்று மகா சங்கட நிலையிலே யிருந்து வந்தார்கள். அதுகாலை, அவர்கட்கு ஒரு ஜயகரமான எதிர்காலம் வரப்போகிற தென்று அவ் வுவமதரிசனம் தீர்க்கதரிசனம் கூறிற்று. ஆயின், வழக்கம் போலே அம்மகானின் எதிரிகள் இந்த மிஃ'ராஜை நம்பாது, அப்பெருமானையும் எள்ளி நகையாடுவாராயினர்கள். இம் மிஃ'ராஜைக் குறிக்கும் இனியோர் ஆயத் இவ்வாறு காணக்கிடக்கிறது:—

"தன்னுடைய அடியவரை, அவருக்கு நாம் நம்முடைய அடையாளங்களுள் சிலவற்றைக் காண்பிப்பான் வேண்டி, ஓர் இரவினில் பரிசுத்த மஸ்ஜிதிலிருந்து நெடுந்தூர மஸ்ஜிதுக்குக் கொண்டு சென்ற அ(வ்வாண்ட)வன் தூயனாய் விட்டான்; அதனைச் சூழ்ந்துள்ள நிலங்களை நாம் ஆசீர்வதித்துள்ளோம். நிச்சயமாக, அன்னவன் பார்க்கிறவனாக, கேட்கிறவனாக இருக்கிறான்"—(குர் 17:1).

இவ்வாயத்தில், மக்காவிலுள்ள ஹரம் ஷரீபிலிருந்து நெடுந்தூரத்தில்—ஜெருசலேமில்— இருக்கும் மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஆண்டவன் தன்னுடைய அடியவரை—திருநபி (சல்) அவர்களை—ஓரிரவிலே கொண்டு சென்றதென்பது அந்த நபி பெருமானுக்கு நிகழ்ந்த மிஃ'ராஜ் வைபவத்தைத் தான் சுட்டிக் காட்டுகிறது. புகாரீ கிரந்தம் இஸ்ராவைக் குறித்து 63:41-இலும், மிஃ'ராஜைக் குறித்து 63:42-இலும் பிரஸ்தாபித்திருப்பினும், இனியோரிடத்தில் "இஸ்ராவின் இரவிலே தொழுகைகள் கட்டாயமாக்கப்பட்ட" விஷயம் குறித்துக் கூறியுள்ளது; அப்பால் அம் மகா கிரந்தம், மிஃராஜைக் குறித்தும், அந்த மிஃ'ராஜிரவிலே தொழுகைகள் கடமையாக்கப்பட்டதைக் குறித்துமுள்ள ஹதீதை விவரிக்கத் துவக்குகிறது (புகா. 8 : 1) மிஃ'ராஜுக்குரிய முதற்படி இஸ்ராவா யிருந்து வருகிறது; என்னெனின், நபிகள் திலகம் (சல் அம்) விண்ணுலகுக்கு உயர்த்தப் பெறு முன்னே, மக்காவிலுள்ள கஃபாவி லிருந்து பைத்துல்மு(க்)கத்தஸி லுள்ள அந்த நெடுந்தூர மஸ்ஜிதுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவ்வாறு முஹம்மத்நபி (சல் அம்) அந்த நெடுந்தூர மஸ்ஜிதுக்கும், அங்கிருந்து ஆகாய லோகத்துக்கும் அழைத்துச் செல்லப்பட்ட காட்சி ஆவியுலக சம்பந்தமாயுள்ள உவமதரிசனமே என்பது, குர். 17 : 60-இல் ஆண்டவனால் வழங்கப்பட்டுள்ள ருயா என்னுஞ் சொல்லால் செவ்வனம் அறியக் கிடக்கிறது. இவ் வுவமதரிசனத்தின் அந்தரங்க நோக்க மெல்லாம் நபிகளாயகரது ஆன்மிக உச்சத்தையே சுட்டிக் காட்டுவதா யிருந்து வருதலினாலும், இன்னம் அன்னவர்களின் எதிர்கால இணையற்ற வெற்றியையே சுட்டிக் காட்டுவதா யிருந்து வருதலினாலும், அப் பெருமானார் பைத்துல் மு(க்)கத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பது, அம் மஹானுபாவர் இஸ்ரவேல் தீர்க்கதரிசிகளின்—பனீ இஸ்ராயீல் நபிமார்களின்— ஆசீர்வாதங்களையெல்லாம் அளிக்கப் பெறுவார்கள் என்பதைச் சூசிப்பித்துக் காட்ட வல்லதா யிருக்கிறது.

பர்மா நண்பர்களுக்கு

ஷாஜஹான் புக் டெப்போ வின் நூல்களும், "தாருல் இஸ்லாம்," "முஸ்லிம் முரசு" "மறுமலர்ச்சி" முதலிய முஸ்லிம் பத்திரிகைகளில் எது தேவைப்பட்டாலும் நீங்கள் சென்னைக்கோ, திருச்சிக்கோ எழுதத் தேவையில்லை. கீழ்க்காணும் விலாசத்தில் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

ஸவுத் இந்தியா புக் டெப்போ

326, மொகல் வீதி, இரங்கூன்.

"மானிட இன்பம்" ஆசிரியர்

K. வெங்கடராவ் எழுதியுள்ள

அபூர்வமான சிற்றின்ப நூல்கள்.

1. காமக் களஞ்சியம்	0	14	0
2. ஆண் பெண் இன்பம்	0	14	0
3. ஆ. பெ. ஜனனேந்திரிய விளக்கம்	0	12	0
4 குடும்பக் கட்டுப்பாடு	0	12	0
5. காம கலாசாகரம்	0	12	0
6. தேக தர்ம அவஸ்தை	0	12	0
7. உச்சஸ்தான இன்ப சுகம்	0	12	0
8. தேக தத்துவ வினு விடை	0	12	0
9. ஷை இரண்டாம் பாகம்	0	9	0
10. கசங்கியகன்னி	0	12	0
11. ஆ. பெ. உறவு ஆபாசமா? (வேள்)	1	0	0
12. என் காதலி (சிரஞ்சீவி)	1	0	0
13. சம்சார பந்தம் ,,	1	0	0
14 நித்ய கன்னி ,,	0	9	0
15. யார் விபசாரி ,,	0	8	0

தா. இ. ஏஜெண்ட்களுக்குக் கமிஷன் உண்டு.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, திருவல்லிக்கேணி ஹைரோட் சென்னை-5

நபிகள் நாயக வாக்கியம்

உலகம் புகழும் உன்னத நபி முஹம்மத் முஸ்தபா ரசூல் (சல்அம்) அவர்கள் உலக மக்களின் மேன்மைக்காகத் திருவாய் மலர்ந்தருளி யுபதேசித்துச் சென்ற பொன்மொழிகளின் பொறுக்கு மணிகளான 451 ஹதீதுகள் அழகாக அச்சிடப்பட்டு, சட்டைப் பைக்குள் அடங்கத்தக்க விதமாக பைண்டு செய்யப்பட்டுள்ளன. இந்நூல் கண் கவரும் மூவர்ண ஆர்ட் ஜாக்கெட்டுடன் கூடியது. இப்புதிய ஏழாம் பதிப்பின் விலை ரூ. 1—8—0 தான். வி.பி. செலவு வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ

சென்னை-5

வருங்கால வாலிப வீரன் ...!

ஷேக்கோ

இந்தியா, தனது சுதந்தரப் போரில் தீவிரமாக ஈடுபட்டு, நடைமுறையில் இறங்கிக் கொண்டிருந்த கடைசிக் கட்டம் அது. ஒவ்வோர் அரசியல் தலைவருமே நம் நாட்டு இளைஞர்களையும், பள்ளி மாணவர்களையும் பார்த்து, "இளைஞர்களே நீங்களே வருங்கால வாலிப வீரர்கள்..." என்றெல்லாம் கதறிக் கொண்டு திரிந்த நேரம் அது. குறிப்பாகச் சொல்லப் போனால், பள்ளி மாணவர்கள் தங்கள் படிப்பைக் கூடக் கவனிக்காமல், அரசியல் கொந்தளிப்பில் அகப்பட்டு அல்லல் பட்டுக்கொண்டிருந்த சமயம் அது.

அந்தச் சமயத்தில், நான் திண்டுக்கல்லில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் நாலாம் பாரம் படித்துக் கொண்டிருந்தேன். அந்த நாலாம் பாரம் எனக்குப் பெரிய பாரமாகத்தான் தோன்றிற்று. இருந்தாலும், பள்ளிக்கூட நிர்வாகம் நிர்மூலமாகிக் கிடந்ததால், நான் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டிய அவசியமில்லாமலே இருந்து வந்தது. படிக்க வேண்டுமென்ற ஆர்வத்திற்காகக் கொஞ்சம்—அதுவும் நினைத்தபோது பரீக்ஷை நெருங்கும் போது—சிரமப்பட்டுப் படித்துக் கொள்வேன். அதுவும் கூடப் படிக்காதிருந் திருந்தால் நான் எஸ். எஸ். எல். சி. யை எட்டிக்கூடப் பார்த்திருக்க முடியாதே!

என் வகுப்பில், என்கூடப் படித்த நாற்பது பேர்களில், என்னுடன் சேர்ந்த ஒன்பது பேர்கள் மட்டும் ஒரு தினுசு: என்னையும் சேர்த்தால் மொத்தம் பத்துப் பேர்களும் ஒரு தனி ரகம். வகுப்பில் ஒரே கும்மாளம் தான். உபாத்தியாயர்கள் வராத சமயத்தில், வகுப்புக் கதவுகளை யெல்லாம் சார்த்திக் கொண்டு, ஒரே தம்! அதாவது 'தம்' என்றால், பள்ளி மாணவர்கள் அகராதிப்படி, புகை பிடித்தல். என் கூடச் சேர்ந்த அன்புள்ள நேயர்கள் எல்லோரிடமும் ஒவ்வொரு சிகரெட் இருக்கும்; என் கையில் மட்டும் ஒரே ஒரு பீடி யிருக்கும். ஏனென்றால், அந்தக் காலத்தில் அரையணாப் போட்டு ஒரு சிகரெட் வாங்கும் காசுக்கு, ஆறு பீடிகளை வாங்கி ஆறுதரம் ஆனந்தமாகக் குடிக்கலாமே என்ற "சிக்கன புத்தி!" ஒரு நாளைக்கு மூன்று சிகரெட் பிடித்தால் ஒன்றரையணா; ஆனால் அதே ஒன்றரை யணாவுக்கு ஒரு நாளில் பதினெட்டு பீடிகள் பிடித்து விடலாமே! இப்படிப் பிடித்தால், இதயம் எப்படி யிருக்கும்? அதை யெல்லாம் அந்த நேரத்தில் யார் கவனித்துக் கொண்டிருக்க முடியும்? ஒரே 'ஜாலி'! பள்ளிக் கூடமே எங்கள் கையில் என்றாலும் மிகையில்லை! வகுப்பு அறையைத் திடீரென்று யாரும் திறந்துவிட்டால், ஒரே பீதியாகிவிடும் திறந்தவர்களுக்கு. ஏனென்றால், அதற்குள் நாக சாக்கியும், ஹிரோஷிமாவுமே காட்சியளிக்கும்! அதாவது ஒரே புகை மயம்! பள்ளிக்கூட நிர்வாகம் சரியில்லாமல் இருந்ததால், நாங்க ளெல்லாரும் அப்படி நடந்து கொள்ள ஏதுவாக இருந்தது.

இப்படி இருக்கும்போது, திடீரென்று எங்கள் பள்ளிக்குக் கதிமோட்சம் வர ஆரம்பித்து விட்டது! எங்கள் ஹெட் மாஸ்டர் "ரிடைய" ராகி, அவருக்குப் பதிலாக வேறு ஒரு கண்டிப்பான பேர்வழி வந்து விட்டார்! எங்களுக்கு அப்பொழுது எப்படி யிருந்திருக்கும்? அந்தப் புதியவர் வரவும், எங்கள் பள்ளிக்கூடமே புதுமாதிரியாக மாறிவிட்டது. அதன் காரணமாக நாங்களும் 'புதுமாதிரி' யாக மாறவேண்டிய தாயிற்று! பெரும்பாலும் எங்களுக்கு என்ன என்றே தெரியாமல் இருந்த 'பிஸிகல் க்ளாஸ்' (*Physical Excercise Class*) புது சோபையுடன் மலர ஆரம்பித்து விட்டது.

இதன் காரணமாக, எங்கள் பள்ளியின் ஒவ்வொரு பையனின் தேகாரோக்கியத்தையும் சரிவரப் பரிசோதனை செய்து, சரியான - நல்ல தேகாரோக்கியமுள்ளவர்களுக்குப் பரிசுகளும் வெளியூர்களுக்குச் சென்று 'ஸ்போர்ட்ஸ்' களில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பங்களும் அளிக்கப் பள்ளியின் சார்பாகக் கல்விபோர்டார் தீர்மானித்தார்கள்.

அதைக் கேட்ட மற்ற எல்லாப் பையன்களும் ஒரே 'குஷி' யுடன் கூத்தடித்தார்கள். அவர்களோடு, நானும் என்னைச் சேர்ந்த ஒன்பது நவ நண்பர்களும் சேர்ந்து கொண்டு கூத்தடிக்க முடியுமா என்ன? நாங்கள் "சரி, அந்தப் பரிசோதனை நடத்தும் சந்தர்ப்பம் வரட்டும்; ஒரு கை பார்த்து விடுவோம்!" என்று திட சங்கல்பம் செய்து வைத்திருந்தோம். தேகாரோக்கியத்தைப் பரிசோதனை செய்யப் போகிறார்களாமே அதற்காக வேண்டி, நாங்கள் 'புல் அப்ஸ்' (pull-ups) எடுத்துப் பழகி, உடம்பைக் கொஞ்சம் 'ஸ்ட்ரெங்த்' தாக— வலுப்பமாக— வைத்துக் கொள்ள விரும்பினோம். 'புல்அப்ஸ்' ஒன்றுதான் ஓட ஆடச் செய்யாமல் இருந்த இடத்திலிருந்தே செய்யும் சௌகரியமான தேகப்பயிற்சி முறை. அதனால்தான் நான் இந்த யோசனையைச் சொன்னேன்; நவநண்பர்களும் "எதிர்ப்பு" இல்லாமலே அதை ஏற்றுக் கொண்டார்கள் தொடர்ந்து ஒரு வாரம் புல் அப்ஸ் எடுத்துப் பழகினோம். என்னைத் தவிர மற்ற எல்லோரும் ஐந்து வினாடிக்கு ஒன்று வீதம் ஒழுங்காக புல் அப்ஸ் எடுத்துப் பழகினார்கள். நான் மட்டும் பதினைந்து வினாடிக்கு இரண்டு வீதம் எடுத்தேன். இதைக் கண்ட மற்ற நண்பர்கள் எல்லோரும் கைதட்டினார்கள்! எனக்குக் கைதட்டுதலைக் கண்டு பெருமையாக இருந்தது. ஆனால், அவர்கள் கைதட்டிக் கொண்டே சிரிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். எனக்கு அப்பொழுது வந்த கோபத்தைப் பார்க்கணுமே!

அந்த நாளும் வந்தது. அதாவது, உடற் பரிசோதனை நடத்தும் தேதியும் வந்தது. ஒரு டாக்டர், ஸ்கூல் 'பி. ஐ.' பிஸிகல் இன்ஸ்ட்ரக்டர், ஸ்கூல் ஹெச். எம்,— ஹெட்மாஸ்டர் ஸ்கூல் பியூன் ஆகியோரடங்கிய ஒரு குழு பள்ளியின் மேல் மாடியில் கூடியது. மேல் மாடியின் வாசலில் பியூன் நின்று, மாணவர்கள் ஒவ்வொருவரின் பெயரையும் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தான். மூன்றாம் பாரத்திலிருந்து, அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக மேலே சென்று பரிசோதனைக்கு ஆளாகி வந்தார்கள். மூன்றாம் பாரத்திற்குக் கீழ்ப்பட்ட மாணவர்கள் இந்தப் பரிசோதனைப் பரிசுத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஏனென்றால், அவர்களெல்லாம் 'சின்னப் பசங்கள்' தானே! நாங்களெல்லோரும் பெரிய—புகை பிடிக்கும் அளவுக்குப்—பெரிய பிள்ளைகள்!

ஒவ்வொரு மாணவ மணிகளாக மேலே போய் வந்து கொண்டிருந்தார்கள். நானும் எனது நவநண்பர்களும், மேலே போகும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து ஆவலோடு உட்கார்ந்திருந்தோம். எங்கள் வகுப்பை அழைக்கும் சந்தர்ப்பம் வந்தது. முதலில் பியூன், எனது ஆருயிர் அன்பர்களில் ஒருவனை 'நைனா முஹம்மத்' என்று கூவினான். நைனா முஹம்மத், ஒரே குதியில், எங்களைக்கூட லக்ஷியம் செய்யாமல் எழுந்து ஓடினான். என் மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டது, எங்கே அவனுக்குப் பரிசுச் சான்ஸ் கிடைத்துவிடுமோ என்று! சில நிமிஷத்தில் சோர்ந்த முகத்தோடு நைனா முஹம்மத் கீழே வந்தான். அவன் முகத்தைப் பார்த்ததுமே எனக்குச் சந்தோஷமாகப் போய்விட்டது, "சரி இவனுக்குப் பரிசு இல்லை" என்று. அவன் கையில் ஒரு உள் பனியன். ஒரு காலர் பனியன், ஒருஸ்வெட்டர் ஒரு ஷர்ட் இவ்வளவும் இருந்தன. ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் போட்டுக் கொண்டால், உடற்சுற்றை அளவெடுக்கும்போது சுற்றளவு அதிகமாகத் தெரியும் என்று என் அருமை நண்பன் நைனாவிற்கு நான் யோசனை சொல்லிக் கொடுத்திருந்தேன். ஆனால், அந்தப் 'பி. ஐ.' அவற்றையெல்லாம் கண்டு பிடித்துக் கழற்றி எறிந்துவிட்டுத்தான் பரிசோதனை நடத்தி இருக்கிறார். அதுதான் பையன் அசந்து போய் வந்தான். இல்லாவிட்டால் நான் அவனைவிடக் கேவலமாகவல்லவா போய்விடுவேன்!

என் பெயரைப் பியூன் கூப்பிட்டான். மாடிப்படியின் பதினெட்டுப் படிகளையும், "பதினெட்டாம் படி"யைக் கடப்பது போல் ஒவ்வொன்றாகக் கடக்க விரும்பாமல், ஒன்பதே தாவில் மேலே போய்ச் சேர்ந்தேன்; சேர்ந்த வேகத்தில் மேல்படியிலிருந்து வழுக்கி விழப்போன என்னை, நல்ல வேளையாகப் பியூன் பிடித்துக் கொண்டான். இல்லாவிட்டால்...? பியூனுக்கு ஒரு 'சாய்' வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்து விட்டு, உள்ளே பரிசோதனை ஹாலுக்குப் போனேன். என் உள்ளமெல்லாம், ஒரு தாவில் இரண்டுபடி வீதம் ஒன்பது தாவில் பதினெட்டுப் படிகளையும் தாண்டி வந்துவிட்டோமே என்று எண்ணிக் குதூகலித்தது. பரிசு நமக்குக் கண்டிப்பாகக் கிடைக்கும்; வெளியூர் ஸ்போர்ட்ஸ்களில்

கலந்துகொள்ளச் சந்தர்ப்பமும் கிடைக்கும் என்றும் எண்ணிப் பூரித்துப் போனேன்.

பரிசோதனை நடத்தும் இடத்தில் போய் நின்றேன். எனக்கு ஒரு கணம் ஒரே கலவரமாய்ப் போய்விட்டது. ஒன்றும் ஓடவில்லை. பிறகு, அமானுஷ்ய உணர்ச்சி, ஒரு 'ஸ்டைலாக' நடந்து கொள்ளும்படி பிடரியைப் பிடித்துத் தள்ளியது. பிறகு, நான் ஒரு 'ஸ்டைலாக'வே நடந்து கொண்டேன். டாக்டர் என்னைப் பார்த்தார். என் பாடியை நன்றாகக் கவனித்துவிட்டு, மெதுவான குரலில், பி. ஐ. யைப் பார்த்து 'இவன் யார்?' என்று கேட்டார். எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. பி. ஐ. 'இவன் நம்ம ஸ்கூலில் ஒரு பையன்' என்று ரத்தின சுருக்கமாக, உள்ளதை உள்ளபடி சொன்னார்.

பிறகு, சட்டைகளை யெல்லாம்— நானும் ஒன்றுக்குமே லொன்றாக, மூன்று நான்கு வகைச் சட்டைகளையே அணிந்திருந்தேன்— கழற்றி வைக்கச் சொல்லிவிட்டு, எடை பார்க்கும் மெஷீனில் ஏறி நிற்கச் சொன்னார் டாக்டர். நின்றேன். எடையைக் குறித்துக் கொண்டார். பிறகு 'மூச்சை இழு' என்றார். "எவ்வளவு நேரம்?" என்று நான் கேட்டேன். உடனே, டாக்டர் 'பி. ஐ'யைப் பார்த்தார். 'பி. ஐ.' 'ஹெச். எம்.'மைப் பார்த்தார். 'ஹெச். எம்.' என்னைப் பார்த்தார்; நான் டாக்டரைப் பார்த்தேன். பிறகு டாக்டர், "முடிந்தநேரம் வரை இழு" என்றார். நான் மூச்சை இழுத்தேன். ஐந்து நிமிஷம் சென்றது. அதுவரைக்கும் எனக்கு மூச்சிழுப்புச் சரியாக அமையவில்லை. "போதும் நிறுத்து!" என்றார் டாக்டர். "என்னுங்க சார்! அதுக்குள்ளாகவா? நான் இன்னும் சரியாக மூச்சைப் பிடிக்கவேயில்லையே?" என்றேன். "அட கடவுளே!" என்று முணுமுணுத்துக் கொண்டார் டாக்டர். பிறகு உடலின் சுற்றளவை எடுத்துக் குறித்துக்கொண்டார். நான் ஜாடையாக அவர் குறித்ததைப் பார்த்தேன். அது ஏழும் இரண்டுமாகத் தெரிந்தது. ஒரு வேலை எழுபத்தி இரண்டு அங்குலமாக இருக்குமோ என் மார்பின் சுற்றளவு என்று பிரமித்துப் போனேன்! ஆனால் அது அப்படியில்லை!

பிறகு ஸ்டெத்தாஸ் கோப்பை மார்மீது வைத்துச் சோதித்தார். வெகு நேரம் வைத்து வைத்துப் பார்த்தார். பிறகு உதட்டைக் கடித்துக் கொண்டே, 'சரி போ' என்று கூவினார். நான் தயங்கிய படியே, "எப்படி சார்...?" என்றேன். உடனே ஹெட்மாஸ்டர், "போடா கழுதை...!" என்று கத்தினர். நான் உடனே சட்டைகளை எடுத்து மாட்டிக் கொண்டு நடையைக் கட்டினேன். டாக்டர் என்னைப் பற்றி ஹெட்மாஸ்டரிடம் சொன்னது என் காதுகளில் நன்றாக விழுந்தது: "பையனின் உடம்பு முழுவதும் புகைபிடித்துக் கிடக்கிறது. இதயமும், புப்புசமும் பலஹீனமாகி விட்டன. பெரிய ஸ்மோக் பேர்வழி போலிருக்கிறது..." என்றார் வருத்தத்தோடு. அதற்குப் பி. ஐ. "அதை ஏன் கேக்கிறீங்க சார்...? இந்த மாணவங்களே அப்படித்தான் சார்...!" என்று ஆமோதித்தார். ஹெட்மாஸ்டர் மூச்சுவிடவில்லை. அவரை, வெட்கமும் பிரமிப்பும் பேசவிடவில்லை. பிறகு எப்படி அவர் பேசுவார்! பாவம்! புதிய ஹெட்மாஸ்டர்!

நான் மாடியைவிட்டு என் 'டியர் ப்ரண்ட்'களிடம் வந்து சேர்ந்தேன். ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டோம். அவைகளில் அசடு வழிந்தது. "மாணவமணிகள், மதியீனமாக நடந்து கொண்டு, புகைபிடித்தலே பிரதானம் என்று கருதியதன் பலன் இது," என்று என் மனம் அடித்துக் கொண்டது. "வருங்கால வாலிப வீரர்களா நாம்?" என்று என் நண்பன் கேட்டான். அதற்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. எப்படிச் சொல்ல முடியும் பதில்!

இதை எழுதி முடித்த சமயம், என் பக்கத்து வீட்டு ரேடியோப் பெட்டி இப்படிப் பாடியது:

" ஓ...வருங்கால வாலிப வீரர்களே...
மணமாலை சூட்டிக் கொண்டு
வீட்டைப் பார்த்துக் கொண்டு...
வாழ்வினில் இன்பம் பெறுவீரே...
தமிழ் காவியப் படையினில்
செல்வீரே...!"

[ஒரு பிரயோஜனமுமில்லாது, உடலுக்கும் உயிருக்கும் எல்லாவிதக் கேடுகளையும் உண்டு பண்ணித் தரும் பீடி, சிகரெட், சுருட்டு, பொடி, புகையிலை ஆதியவற்றிற்காக நம் மக்கள் எத்தனை யெத்தனை ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஆண்டு தோறும் வீண் விரயம் செய்து நஷ்டமடைகிறார்கள், தெரியுமா? ஐயங்கொண்டவர்கள் இச் சென்னைக்கு வந்து

(28 - ஆம் பக்கம் பார்க்க)

முல்லாக்களும் முஸ்லிம்களும்

[பாசிதா பகர்வது]

பல தெய்வ வணக்கமற்ற ஏக தெய்வ (தவ்ஹீதுக்குரிய) இஸ்லாத்தையும், ஜாதிப் பாகுபாடற்ற சர்வலோக சகோதரத்துவத்தையும், புரோகிதக் குறும்பற்ற புராணப் புளுகற்ற ஒரு பரிசுத்த சன்மார்க்கத்தையும் நபி பெருமானார் முஹம்மத் (சல்) அவர்கள் அரும்பெரும் பாடுபட்டு, 1400 ஆண்டுகட்கு முன்னே இந்நிலவுலகில் நிலைநிறுத்திச் சென்றார்கள்; ஆனால், அப்படிப்பட்ட அப் பழுக்கற்ற அழகிய இஸ்லாத்திலே இக் காலத்தில் எண்ணிறந்த ஷிர்க்களும், அபரிமிதமாய ஜாதிபேதங்களும், புரோகிதக் குறும்புகளும் புராணப் புளுகுகளும் மிக வாய் மலிந்துபோயே காணப்படா நின்றன என்று ஒருசமயம் விவேகானந்தர் விளக்கியுள்ளார். இதனைக் கண்டு ஒரு சில முஸ்லிம்கள் ஆத்திரப்படுவார்கள். ஏன் ஆத்திரப்பட மாட்டார்கள்! உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாளமாய்த்தானே இருக்கும்! நாம் புத்திசாலிகளா யிருந்தால், விவேகானந்தர் மீது ஆத்திரங் கொள்ளாது, அவ்விவேகியார் கூறியுள்ள குற்றங்கள் நம்பால் மிளிர்ந்து கிடந்தால் அவற்றினைக் களைந்தெறிந்து விடுவதே சாலச் சிறந்த காரியமா யிருக்கும். குடிகாரனைப் பார்த்துக் கட்குடியனென்று கூறினால், அவன் தானொரு குடிகாரன் தானேயென் றுணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ளாது, தன்னைக் குடிகாரனென்று கூறியவன்மீது கோபித்துப் பாய்வான். அறிவாளி செய்யக்கூடிய காரியமன்று அது.

எவர்களுமே தங்களிடத்துள்ள குற்றங் குறைகளை — ஏதிலனொருவன் அவற்றை எடுத்துக் காட்டினாலும் கோபியாது — ஒழித்து உயர்வடைவதே சாலச் சிறந்த ஒழுக்கமாகும். இவ்வாறு திருந்துகிறவர்களே முன்னுக்கு வருவார்கள். தங்கள்பாலுள்ள, குற்றங் குறைகளைச் சுயமே திருத்திக்கொள்ளாவிடினும், பிறர் எடுத்துக் காட்டுங்காலும் திருந்தாதவர்கள் ஒருகாலும் முன்னேற மாட்டார்கள். எனவே, எம் முஸ்லிம் சோதரர்கள் இன்றுள்ள இழிநிலையைவிட்டு உன்னத கதியடைய நாடினால், மேலே விவேகானந்தர் விளக்கிக் காட்டியுள்ள குறைபாடுகளைவிட்டு இவர்கள் பரிசுத்த இஸ்லாம் போதிக்கும் இக்லாஸான சன்மார்க்கத்திலே திரிகரண சுத்தியுடனே ஒழுகிவரல் வேண்டும்.

இஸ்லாம் ஏகேசுர (தவ்ஹீத்) மார்க்கத்தையே போதிக்கின்றது. எனினும், இற்றைநாள் முஸ்லிம்களுள் பெரும்பான்மையினர் அல்லா(ஹ்)வைக் கைவிட்டு அவுலியாக்களை — இறந்துபோய் விட்ட மகான்களை — வணங்கி வரன் கேட்டு வருகிறார்கள். ஆண்டவன் ஏவிய வண்ணம் ஒழுகி, அவனால் விலக்கப்பட்டுள்ளவற்றை ஒழித்து, சிராத்துல் முஸ்தகீமில் நடப்பது சிரமமெனக் கொண்டு, அவுலியாக்களிடம் நல்வரம் பெற அம்மக்கள் ஓடுகிறார்கள். அந்த அவுலியாக்கள் தங்கள்பாலுள்ள — இஸ்லாத்துக்கு முரணாயுள்ள — குற்றங் குறைகளனைத்தையும் மன்னித்து, தமக்கு வேண்டிய சகல சௌபாக்கியங்களையும் நல்கியருள்வார்களென நம்புகிறார்கள். அவுலியா பக்தர்கள் ஆண்டவனை வணங்கவேண்டுவதின்று; அவனுக்காகத் தொழ வேண்டாம்; அவனுக்காக நோன்பு நோற்கவேண்டாம்; அவனுக்காக ஜ(க்)காத் கொடுக்கவேண்டாம்; அவனுக்காக ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டாம். ஆண்டவன் விலக்கியுள்ள ஜினா, திருட்டுப் புரட்டு, உருட்டு, சூது, மதுபானம், கள்ளமார்க்கெட், மோச நாசம் முதலிய பலப்பல காரியங்களையும் தாராளமாய்ச் செய்யலாம். இறுதியிலே அவுலியா அல்

191011

லது ஆலிம்சா, பீர் அல்லது மஷாயிக், தங்கள் அல்லது முரீத் கொடுத்த குருநாதர் ஆதியோர்பால் அடைக்கலம்புக்கு அபயந் தேடினல், அந்த அவுலியாக்கள் முதலியோர் தங்கள் பக்தர்கள் இழைத்துள்ள எல்லாப் பாபங்களையும் போக்கி, அந்தப் பக்த சிகாமணிகளுக்கு வேண்டிய எல்லாவித நன்மைகளையும் — ஆண்டவனுல்கூட அளிக்கமுடியாத அத்தனை நன்மைகளையும் — அளித்துவைப்பார்களென்றே நம்புகிருர்கள். இவ்வாறு எளிதில் தங்கள் தின்மைகள் ஒழிந்து நன்மைகள் வந்து கைகூடுவதா யெண்ணியிருத்தலினல், இந்த அவுலியா பக்தர்கள் ஆண்டவன் ஏவியவண்ணம் நடந்து சுயமே முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு, தங்கள் வாழ்க்கையிலும் ஒழுக்கத்திலும் முன்னுக்கு வராது மிகவும் இழிநிலைக்குள்ளே இறங்கிவிடுகிருர்கள்.

இவ்வாறு மானிட முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையா யிருத்தலினலேதான் அவுலியா பூஜை, ஆலிம்சா பூஜை பீர் பூஜை, மஷாயிக் பூஜை, தங்கள் பூஜை, தர்வேஷ் பூஜை, பஞ்சா பூஜைபோன்ற பல பூஜைகளெல்லாம் ஆகாதவை யென்றும், அவையனைத்தும் ஷிர்க் கென்றும் கொள்ளப்படுகின்றன. எனவேதான், இஸ்லாம் ஏகதெய்வத் தவ்ஹீத் கொள்கையை என்றென்றும் வற்புறுத்துகின்றது. நபிகளுயகரும் அரும்பெரும் பிரயாசையெல்லாம் எடுத்து இத் தவ்ஹீதை நிலைநிறுத்தினர்கள். ஆனல், அந்தோ! இக்கால முஸ்லிம்களுள் மிகுதியான மக்கள் ஷிர்க்கான காரியங்களில் அளவிறந்து மூழ்கிக் கிடக்கிருர்கள். இதைத்தான் விவேகானந்தர் விளக்கியுள்ளார்.

இன்னம், எங்கள் நபி பெருமானுரவர்கள் (சல்) "அஜமீகளை விட அரபிகள் உயர்ந்தவர்களல்லர்; அரபிகளை விட அஜமீகள் உயர்ந்தவர்களல்லர்," என்று கூறி, மானிடவர்க்கமெல்லாம் ஒரே மனித இனந்தானென வற்புறுத்தி நிலைபெறுத்தி வைத்தார்கள். "மன்பதையனைத்தும் ஒரே மனித இனந்தான் என்று எமது திருமறையும் (2 : 213) வற்புறுத்தியுள்ளது. இஸ்லாமிய ஏக சகோதரத்துவம் இவ்வாறிருந்துவருங் கால், இதுகாலே இப் பூவுலகில் நாம் என்ன காண்கிருேம்? அரபிகள், அரபிகளல்லாதார், ஷீஆக்கள், ஸுன்னீகள், சையிதுகள், சாதாத்கள், ஷெய்குகள், முகல்கள், பட்டான்கள், கான்தான்கள், நவாய்த்தாக்கள், தக்னீகள், பான்வாலாக்கள், லப்பாபீன்கள், ராவுத்தர்கள், சாஹிப்கள், மரைக்காயர்கள், சோனகர்கள், சோலியாக் காரர்கள், கிள்ளங்கிக் காரர்கள், ஜோர்பாதி முஸ்லிம்கள், மலாய் முஸ்லிம்கள், ஜாவா முஸ்லிம்கள், மாப்பிள்ளை முஸ்லிம்கள், ஆப்கானியர், எகிப்தியர், துருக்கியர், வங்காளிகள், மேமன் சேட்கள் என்றெல்லாம் வேற்றுமை பாராட்டப்பட்டு வருகிறது. மஸ்ஜிதிலும், சாப்பாட்டிலும் வேற்றுமை பாராட்டா விட்டாலும், திருமணம் முதலிய சமுதாய ஒற்றுமையிலேதான் பெரிதும் வேற்றுமை பாராட்டப்பட்டு வருகிறது; மீக்கூறிய முஸ்லிம்களில் ஒரு சிலர் மற்றவர்களைவிடத் தாங்களே ஒப்புரவில் மேலாய முஸ்லிம்களென எண்ணி, ஏனை முஸ்லிம்களை ஏளனமாய்க் கருதி நடத்துகிருர்கள். இந்த ஜாதிபேத இறுமாப்பு இந்துக்களிடத்துக் காணப்படுவதேபோல அத்துணைக் கடிய கொடிய "வருணைச்சிரம தர்ம"மாயில்லாவிடினும், இஸ்லாமிய ஏக மகா சகோதரத்துவத்துக்கு இழுக்கைத் தருவதாகவே யிருந்துவரும் ஒரு புற்று நோய் போலே இச் சமுதாய நலனை அரித்தே வருவது கண்கூடு. எம் முஸ்லிம்கள் இவ்வாறு ஒற்றுமையற்றுக் காணப்படுவது இவர்களுடைய முன்னேற்றத்துக்குப் பெரியதொரு முட்டுக் கட்டையா யிருக்கிறது.

முஸ்லிம்களெல்லாம், ஒரு கற்சுவரிலுள்ள செங்கற்கள் ஒன்றுடனென்று இணைந்து இறுகி நிற்பதேபோல் பிணைந்து ஒன்றுபட்டு நிற்பது அவசியமென்று எங்கள் நபிகளுயகர் (சல்) இயம்பிச் சென்றுள்ளார்கள். இன்னம், இந்த இறுதி நபியவர்கள் தங்களிரு கரத்தின் விரல்களையுங் கோத்துக் காட்டி, அவ்வாறு எம் முஸ்லிம்கள் இணைந்து ஒருவருடனெருவர் கொளுகி

நிற்பது அவசிய மென்றும் விளக்கிக் காண்பித்துள்ளார்கள். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே."

விவேகானந்தர் சுமத்திய மூன்றாவது குற்றச் சாட்டு, புரோகிதருக்கு இடமில்லாது ஏற்படுத்தப்பட்ட இப் பரிசுத்த இஸ்லாத்திலும் புரோகிதர்கள் வந்து புகுந்துகொண்டார்கள் என்பது தானாகும். பொதுவாக, மக்கள் தாங்களே பாடுபட்டுழைத்து மோக்ஷ சாம்ராஜ்யத்தைப் பெற முயலாது, அதற்கு ஏதேனும் குறுக்குவழி யுண்டாவெனத் துருவித் திரிவது நெடுநாட்பழக்கம். எனவே, இதற்கென்று சுவர்க்கத் தரகர்கள் ஏற்படலாயினார்கள். இவர்கள் ஏதேதோ கைப்புரட்டு ஜாலவித்தைக ளெல்லாம் செய்து காட்டித் தங்கள் தரகு காரியத்தைக் கொண்டு பொது மக்களுக்கு நம்பிக்கை யூட்டி விட்டார்கள். இக் கெடுமதிக்கு இஸ்லாமியர்களும் இரையாய் விட்டமையால், இஸ்லாத்துள்ளும் சுவர்க்கத் தரகர்களெனப்படும் புரோகிதப் புல்லுருவிகள் தழைத் தோங்கத் துவக்கி விட்டார்கள். இஸ்லாம், அடியவர் அவ்வவரும் சுயமே பாடுபட்டுத்தான் சுவர்க்கத்தைப் பெறவேண்டு மென்று வற்யுறுத்தி யுள்ளது. எனினும், ஏனை மதவாதிகளைப் பீடித்த சனியன் — சுவர்க்க வாசலுக்குக் குறுக்குவழியைக் கண்டுபிடிப்ப தென்னும் சோம்பேறி வாழ்க்கை — இம் முஸ்லிம்களையும் பிடித் தலைக்கத் துவக்கி விட்டமையால், இவர்கட்குக் குறுக்கு வழிகாட்ட இஸ்லாமிய புரோகிதர்கள்— மூ. முல்லாக்கள்—முளைத்து விட்டார்கள்.

இப்பொல்லாப் புரோகிதப் புல்லுருவிகள் அவ்வாறு முளைத்துச் சுவர்க்கத்துக்குக் குறுக்கு வழியைக் காட்டத்துவக்கியதால், இஸ்லாமியர் பற்பலர் எல்லாம் வல்ல அல்லா (ஹ்)வை மறந்து அவுலியாக்களை வணங்கத் தலைப்பட்டு விட்டனர்; மஸ்ஜிதை மறந்து தர்காக்களைத் தேடித் திரிகின்றனர்; தொழுகை முதலிய ஏகதெய்வ வணக்கத்தைக் கைவிட்டு சமாதியடியில் சிரவணக்கம் (சுஜூத்) செய்து வருகின்றனர். நோன்பை மறந்தனர்; ஜ(க்)காத்தை அடியுடன் வெறுக்கின்றனர்; மக்கா மதீனாவை மறந்து, அஜ்மீருக்கும் நாகூருக்கும் யாத்திரை செல்லுகின்றனர். பின்பற்றி நடப்பவர்கட்கு நேர்வழி காட்டி ஒழுக்கத்தில் அடியவர்களை உயர்த்தி நிறுத்த வந்த குர்ஆன் திருமறை பொருள் புரியாக் கிளிப் பிள்ளைப் பாடமாக—இல்லை, கிராமபோன் பிளேட்டைப் போல் — ஓதப்பட்டு வருகிறது; மேலும், இத் தெய்வத்திருமறை மரியாதையுடனே தலைக்குமேல் பரண்மீது உயர்த்தி வைக்கப்படுகிறது. சத்தியம், இல்லை, பொய்ச் சத்தியம் செய்ய நமதருமைத் திருமறை தூக்கப் படுகிறது. உயிருக்கு உஜ்ஜீவிப்பை யளிக்க வந்த குர்ஆன் ஷரீபு உடலுக்கு ஔடதமெனத் தட்டையிலே, அல்லது மா விலையிலே எழுதிக் குடிக்கப் படுகிறது. தண்ணீரில் அதன் திருவாக்கியங்களை ஓதி யூதிய பின்னர் அத் தண்ணீரை உட்கொள்ளுகிறார்கள்; மாட்டின் முலைக்காம்பைக் கழுவுகிறார்கள்; கைப் பிள்ளை வைத்திருக்கும் பால் கொடுக்கும் பெண்களுக்குப் பால் சுரக்க மார்பில் தடவுகிறார்கள். செப்புத் தகட்டில் வரைந்து, வெள்ளித் தாயத்துள் அடைத்துக் கைப் புயத்திலும், கழுத்திலும், இடுப்பிலும் கட்டிக் கொள்ளுகிறார்கள். கைக் கட்டைவிரல் அளவிலே குர் ஆனை அச்சிட்டுச் சட்டைப் பைக்குள்ளே அடக்கிக் கொண்டு திரிகிறார்கள். இன்னம், ஜின் பேய் பிசாசு தேவ் பூதம் முதலிய "காற்று"ச் சேட்டைகளை ஓட்டவும் குர்ஆன் ஆயத்தை ஓதியூதுகிறார்கள். ஜினாவுக்கென அன்னியப் பெண்களை வசப்படுத்தவுங்கூடக் குர் ஆன் ஆயத்தை ஒரு சிலர் வசியமந்திரமாக உபயோகப்படுத்த ஜபமாய்ஜபிக்கிறார்கள், அந்தோ! அந்தோ! இவ்வாறெல்லாம் குர் ஆன் மஜீதை ஏளனமும் இழிவும் செய்பவர் அத் தெய்வத் திருமறையில் ஏவப் பெற்றுள்ள வண்ணம் ஒழுகுவது ஒரு சிறிதும்கிடையாது.

இஸ்லாத்தில் இமாம்கள் நால்வரால் நான்குவித வழிபாடு வகுக்கப்பட்டிருப்பதுடனே, தரீக்காப் பிளவுகள் வேறு. இன்னம் முரீதின் பேரால் மூ. முக்களும்

தங்களும் முஸ்லிம்களை முட்டாள்களாய்ச் செய்துவிடும் விபரீதக் கூத்து வேறு! பொதுப் படையாய் நோக்குமிடத்து, இதுபொழுது எம் முஸ்லிம்கள் அரசியல், பொருளாதாரம், கல்வி ஞானம், பொது அறிவு ஆதிய பற்பல துறைகளிலும் அதல பாதலத்துள் ஆழ்ந்து தாழ்ந்து போய்க் கிடப்பதற்கெல்லாம் யார் காரணம்? சென்ற 1400 ஆண்டுகளாக இந்த "நபிமார் வார்சு"களெனத் தங்களைப் பறை சாற்றிக்கொள்ளும் "ஆலிம்சா"க்களல்லவா எம் முஸ்லிம்களைத் தலைமை வகித்து நடத்தி வந்துளார்கள்? அப்பொழுதெல்லாம் முஸ்தபா கமால்கள், இப்னுசு ஊதுகள் தோன்றவில்லையே! சென்ற 14 நூற்றாண்டுகளாக இந்த மூ. முக்கள் தாமே நம்மனைவரையும் இகத்துக்கும் பரத்துக்குமுரிய இமாம் — தலைவர் — களாயிலங்கி, "நேர்வழி" காட்டி வந்திருக்கிறார்கள்? இவர்கள் காட்டிய நேர்வழியாலேயே நாம் இதுபோதுள்ள இத்துணை யாழிய இழிநிலைக்குள்ளே இறக்கப்பட்டிருக்கிறோம்.

இன்னம், ஆறரை நூற்றாண்டு வரை அழகுடன் மிளிர்ந்துவந்த கிலாபத் ராஜ்யம் பாக்தாத் நகரிலே முஸ்தஃஸிம் பில்லாஹ் காலத்தில் அழிந்தொழியலாயிற்று; 900 ஆண்டுகள் மட்டும் ஓங்கி வளர்ந்த உந்துலூஸ் (ஸ்பெயின்) ராஜ்யம் உலர்ந்துபோய் விட்டது; ஆயிரவருடம் இந்தியாவில் இன்னரசு செலுத்திவந்த இஸ்லாமிய ராஜ்யம் இருந்தவிடம் தெரியாது மறைந்து போய்விட்டது. மங்காப் புகழ் பெற்றோங்கி நின்ற உதுமானிய (துருக்கி) ராஜ்யம் உலர்ந்து மழுங்கி விட்டது. (கமால் அத்தாத்துர்க் இல்லாது போயிருப்பின், இதுபோதுள்ள சிறு துருக்கியும் எஞ்சாது அஸ்தமித்தே போய்விட்டிருக்கும்.) சமீபத்தில் அரசியல் ஞானி ஜின்னா சாஹிப் — தம்மை நபியின் வாரிசென உரிமை கொண்டாடியது கிடையாது — பாக்கிஸ்தானுக்காகப் பாடுபட்டு வந்தக்கால். "ஜம்ஈயத்துல் உலமா"க்களாய தேவ்பந்து முல்லாக்கள் முட்டுகட்டை போட்டது உலகறிந்த விஷயமே!

நஞ்சமூக முல்லாக்கள் வீழ்க!

(24 - ஆம் பக்கத்தொடர்)

பார்க்கட்டும், எத்தனை பொடி வியாபாரிகள் பெரிய லக்ஷாதிபதிகளாயிருக்கிறார்களென்று. சென்னைமா நகரில் பீடி வியாபாரத்தால் லக்ஷாதிபதியாகியிருப்பவர்கள் பற்பல பேர்களுண்டு. சிகரெட் விற்கும் ஐரோப்பியர்கள் கோடீசுவரர்களாகி விட்டார்கள். ஆயின், புகை பிடிக்கும் புண்ணிய புருஷர்களோ அத்துணைக்கத்துணை ஏழ்மையடைந்து வருகிறார்கள் என்பது தானே அர்த்தம்? வெற்றிலை பாக்கும் இப்படித்தானே? ப—ர்.]

திருமணமும் பிரிவினையும்

இன்றைய - அதிலும் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மிகவும் சொற்பமாகத் தெரிந்துகொண்டிருக்கும் விஷயம் விவாகத்தைப் பற்றியதும், தலாக்கைப் பற்றியதுமாகும். அல்லது அவர்கள் தெரிந்துகொள்வதற்கு உதவியாகத் தமிழ் நூல்களும் இவை சம்பந்தமாக இதுவரை வெளிவரவில்லை. ஆனால், எமது இந்நூலிலே இஸ்லாமிய மார்க்கப்படியுள்ள நிக்காஹூம் தலாக்கும் இன்னது இன்னதென்று நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு இஃதோர் அபூர்வ வரப்பிரசாதம். தலாக் சம்பந்தமான சகல சட்ட திட்டங்களையும் நிக்காஹ் சம்பந்தமான எல்லா வரை முறைகளையும் இனிய தமிழில் எளிது விளக்கி வைக்கும் இச்சிறந்த நூலின்

விலை 2—8—0 வி. பி. வேறு.

குத்பா பிரசங்கம்

(ஜுமுஆவில் ஓதக்கூடியது)

வெள்ளிக் கிழமை தோறும் நம் பள்ளி வாயில்களில் ஓதப்படும் குத்பாவில் எங்கெங்கெல்லாம் அரபு மேற்கோள் இருக்க வேண்டுமோ அங்கங்கெல்லாம் அரபு மேற்கோள் சேர்க்கப்பட்டும், வேலூர், (மத்ரஸா) பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் ஸத்ர் முதர்ரிஸ் மௌலானா, மௌலவீ அப்துல் ஜப்பார் மர்ஹூம்) அவர்களின் "பத்வா" சேர்க்கப்பட்டும், அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப் அவர்களால் செந்தமிழில் தயாரிக்கப்பட்டும் இருக்கிறது. இதில் 57 குத்பாக்கள் அடங்கியிருக்கின்றன. இறுதியில், நபிகள் நாயகம் (சல் அம்) ஆதியில் குபாயில் புரிந்த குத்பா பிரசங்க மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு, நல்ல அழகிய பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. இருவர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. கண்ணைப் பறிக்கும் வனப்பு மிக்கது.

விலை ரூ. 2—12—0 வி. பி. பி. வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை-5.

[உரிமை யாவும் ஆசிரியருக்குச் சொந்தம்]

அத்தியாயம் — 27

உடைந்த உள்ளம்

அரண்மனைக் குள்ளே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தாற்காலிகமாக நிறுத்திக் கொண்டு, மூஈஜுத்தின் ஐபக்கின் வீட்டினுள்ளே சென்று சிறிது எட்டிப் பார்ப்போம்:—

அந்தப் பெரிய துரதிருஷ்டம் பிடித்த நாளன்று மைமூனாவைக் கடைக் கண்ணால் நோக்கியும், சிறுவன் நூருத்தீன் அலீயைத் தூக்கி முத்தமிட்டும் அரண்மனைச் சேவகத்துக்காக வெளியே சென்ற அத்தா பேக்குல் அஃஸக்கிர் மூஈஜத்தின் மீண்டும் வீடு திரும்பவே யில்லை. அரண்மனைக்குச் சென்றவர் ஷஜருத்துர்ரை மணந்து கொண்டா ரென்பதையும், மறுகணமே போலி சுல்தானாகப் பிரகடனஞ் செய்யப்பட்டா ரென்பதையும் இரண்டொரு தினங்களில் மைமூனா தெரிந்து கொண்டு விட்டாள். இதைக் கேள்வியுற்றதும் அவள் வயிற்றில் 'சொரேர்' என்ற பயங்கர உணர்ச்சி பிறந்தது. தன் கணவரை உயிருடனே பறிக்கக் கொடுத்து விட்டதாகவே அவள் உணர்ந்தாள். ஷஜருத்துர்ரின் காமமோக வலைக்குள்ளே வீழ்ந்த மூஈஜுத்தீன் எங்கே மீளப்போகிறார்? என்று அவள் மனச்சாட்சி உறுத்திற்று. கடும்புயல் வீசும் கடலிடைச் சிக்கிய பாய்மரக் கப்பலென நிலைகுலைந்தாள். ஊணை மறந்தாள்; உறக்கத்தை யிழந்தாள்; உன்மத்தம் பிடித்துப் போயினாள். உள்ளமெல்லாம் உருகிற்று; உடல மெல்லாம் இளைத்தது; வாயெல்லாம் வறந்தது; உதடெல்லாம் உலர்ந்தது. எப்பொழுதும் புன்முறுவல் பூத்து நிற்கும் அவளுடைய அழகிய வதனம் நீலமேகத்துள் புதைந்த நிலவெனக் காட்சி யளித்தது. மின்னிக் கொண்டிருக்கும் நீண்ட கூந்தல் சடைபிடித்துப் பின்னிக் கொண்டது. சூரியோதயத்துக்குப் பின்னர்த் தேஜஸும் ஒளியும் குன்றிக் காணப்படும் கிருஷ்ண பக்ஷத்துப் பஞ்சமி சந்திரனையே அவளதுடல் நிகர்த்துக் காணப்பட்டது. மாமை நிறம் மங்கியது.

உலகத்தில் ஒரு கற்புள்ள மாது எவ்வளவுதான் நித்திய தரித்திரத்திலே கிடந்துழன்று, வேளா வேளைக்குக் குடிப்பதற்குக் கூழ்கூடக் கிடைக்காமல் திண்டாடித் தெருவில் நின்று வாடி வதங்கிய போதினும், அவளுக்கு ஒரே ஒரு சுவர்க்கானந்தம் மட்டும் எப்போதும் நிலவிக்கொண் டிருக்கும். அந்தச் சுவர்க்கானந்தப் பேரின்பப் பெருந்துணை தான் அவளுடைய கணவனாவான். ஆனால், அக்கணவனை அவள் இழக்க நேர்ந்தால், அதிலும் உயிருடன் பறிகொடுக்க நேர்ந்தால் அவள் கண்ணெதிரே இம் முழு உலகுமே இருளடைந்துவிடும்; இல்லாத தரித்திர மெல்லாம் ஒன்றாய்ப் படையெடுக்க நேரும்; பொல்லாத வேளைகளே அவளை வந்தடுக்கும். ஒரே பிள்ளையைப் பெற்றிருக்கும் ஒற்றை மலடியுங்கூடத் தன் குழந்தையைப் பறி

கொடுக்க இசைந்தாலும் இசைவாள்; அல்லது தன்னுயிரைப் பரிகாரமாகக் கொடுக்கச் சம்மதித்தாலும் சம்மதிப்பாள்; ஆனால், தன் கணவனைப் பலி கொடுக்க எப்படித் துணிவாள்? "பதவி மோகம் பிடித்த ஒரு கைம் பெண்ணான துருக்கி நாட்டு அடிமைச் சிறுக்கிக்கு என் கண்கண்ட தெய்வமான கொழுநனைப் பலியிட்டு விட்டேனே! மோஹினிப் பேயான கள்ள வேசிக்கு என் கணவனைக் கைந்நழுவி விட்டேனே! குலாபுத்ராவினும் சாஹஸம் மிக்க தேவடியாள் காலடியில் அவரைப் படுக்க விட்டேனே!" என்றெல்லாம் சிற்சில சமயங்களில் மைமூனா கதறியழ நேர்ந்ததைக் கண்டு எவரே அவளைக் கடிந்து கொள்ள முடியும்?

உலகத்திலுள்ள எத்தனையோ விதமான கொடுமையான பொறாமைகளுள் ளெல்லாம் மிக மிக உச்சத்தில் நிற்கும் ஒரே ஈடிணையற்ற கொடிய பொறாமை காதலைப் பற்றியது என்பதை நாம் முன்னமே கூறியிருக்கிறோம். ஒரு மனைவி தன் கணவன் மாட்டு என்னதான் பக்ஷமில்லாமலும் அன்பு காட்டாமலும் ஒழுகி வந்தபோதினும், அவன் வேறு ஒருத்தியை மணந்து கொண்டான், அல்லது ஒரு வேசியின் ஆசைக்கு இலக்காகி விட்டான் என்று அவள் கேள்வியுற்ற மாத்திரத்தில் சுருண்டு விடுகிறாள்; அல்லது பொறாமையால் மனம் புழுங்கி நாளடைவில் மாண்டு போகிறாள். ஆனால், தன் கணவனிடம் உள்ளன்புடனும், மெய்க் காதலுடனும் ஈருடலும் ஓருயிருமாய்ப் பல ஆண்டுகளைக் கடத்தி, ஒரு செல்வச் சிறுவனைப் பெற்றெடுத்தும் விட்ட மைமூனாவுக்கு எப்படிப்பட்ட பொறாமை — நியாயமான பொறாமை ஜுவாலை விட்டு எரிந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்?

செத்த சவத்தைக் க்கண்ணெதிரில் வைத்துக் கொண்டாவது முன்னம் ஷஜருத்துர் கனன்றழுதார். ஆனால், இப்போது மைமூனாவோ தன் கணவனை உயிருடன் பறிகொடுத்துவிட்டுப் புலம்பிக்கொண் டிருந்தாள். ஷஜருத்துர்ரின் கணவராய் விளங்கிய சுல்தான் ஸாலிஹையாவது இயற்கை மரண மென்பது கொள்ளையடித்துச் சென்றது; ஆனால், மைமூனாவின் கணவராய் விளங்கும் முஈஜுத்தீனை ஷஜருத்துர்ரின் பேராசை இறுஞ்சிக் கொண்டுவிட்டது. ஷஜருத்துர்ராவது கணவனை இழந்த விதவையாகி வேறு மணம் செய்துகொள்ள முடிந்தது. மைமூனாவின் கதியோ? பல நாள் பட்டினியால் வாடியவனைக் கையையும் கட்டி வாயையும் பொத்தி, நறுமணங் கமழும் அறுசுவை யுண்டி முன்னே உட்காத்தி வைப்பதற்கும், மைமூனாவின் கணவர் உயிருடனிருப்பதற்கும் என்ன வித்தியாச மிருக்கிறது? அல்லது சாகசக் கள்ளி ஷஜருத்துர்ரின் மோக விஷத்திலிருந்து முஈஜுத்தீன் உயிருடன் மீண்டு தம் ஆசை மனைவியிடம் வந்து சேருவா ரென்பதற்கு எவரே உறுதி கூறுவர்?— இவற்றை யெல்லாம் நினைக்க நினைக்க மைமூனாவின் ஹிருதயம் வெடித்து விடும்போ லிருந்தது. அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!!

அரண்மனையில் முஈஜுத்தீனுக்குப் பதவி உயர உயர, மைமூனாவின் வீட்டுக்குக் காவலும் உயர்ந்தது; கிடைத்தற்கரிய பண்டங்களும், விசித்திர விசித்திரமான ஆபரணங்களும், விதம் விதமான உணவு வகைகளும் நாடோறும் அவளுடைய வீட்டுக்கு வந்துகொண் டிருந்தன. இவற்றை யெல்லாம் பார்க்கப் பார்க்க, மைமூனாவுக்குப் பற்றி யெரிந்தது—இல்லை, பற்றியெரிகிற நெருப்பில் 'பெட்ரோல்' எண்ணெயை ஊற்றுவதுபோ லிருந்தது! முஈஜுத்தீன் இனிமேல் இந்தப் பக்கம் திரும்பப்போவதில்லை யென்பதை மைமூனா நன்குணர்வா ளாதலால், தான் அணிந்திருந்த அணிகலன்களையும். உயர்ந்த ஆடையாபரணங்களையும் களைந்தெறிந்துவிட்டு, விதவையின் கோலத்தில் இருந்து வந்தாள். இப்படிப் பட்ட வேளையில் சுல்தான் முஈஜுத்தீன் ஐபக்கும், சுல்தானா ஷஜருத்துர்ரும் அவளுடைய வீட்டுக்குப் புதிய பண்டங்களை யனுப்பிப் பயன் என்னவோ?

சிந்தை நொந்து சோர்வடைந்து, உள்ளமுருகி நைந்து போய் உயிர் போகப் போகும் பிணம் போலக் காட்சி யளித்துவந்த மைமூனா இன்னம் உயிர் வாழ்ந்து வந்ததற்கு ஒரே காரணம் அவள் வயிறுளைந்து பெற்ற ஒரே மைந்தன் நூருத்தீன் தான் என்பதை நாம் கூறத் தேவையில்லை. மைமூனாவின் வாழ்க்கை யென்னும் கொடும்பாலைவனத்தில் இந்த நூருத்தீ னென்னும் ஒரே ஒரு புற்கதிர் தான் சாந்தியளித்து வந்தது. எனவே தான், அவளும், போகிற தன் உயிரைப் போகாமல் பிடித்துக்கொண் டிருந்தாள். முன்பெல்லாம் அவள் சிறிது நம்பிக்கை வைத்திருந்தமையால் தன் கணவர் அரண்மனையில் எப்படி க்ஷேமமாயிருக்கிறா ரென்றாவது வருவார் போவாரைக் கேட்டு நம்பி வாழ்ந்திருந்தாள். இப்போதோ அவள்எல்லா நம்பிக்கையின் எல்லையையும் முற்றக் கடந்து போய், நம்பிக்கையில்லாக் குறைவாழ்வில் சஞ்சரித்துக்கொண் டிருந்தமையால், எவரிடத்தும் தன் கணவரைப் பற்றி எதையும் விசாரிப்பதை அறவே நிறுத்திக் கொண்டு விட்டாள்.

ஆனால், அவ் வுள்ள முடைந்த மைமூனா தன் போட்டிக் காரியான மாற்றாள் ஷஜருத்துர்ரின் வாழ்க்கை விருத்தாந்தங்களை மட்டும் எவ்வளவு நுணுக்கமாகத் தெரிந்து கொள்ளலாமோ, அவ்வளவு நுணுக்கமாக விளங்கிக் கொள்ள முற்பட்டாள். ஷஜருத்துர்ரின் வின்னியாசமான சரித்திரம் மைமூனாவுக்கு விபரீதமான கற்பனைகளை யெல்லாம் உண்டு பண்ணிவிட்டது. ஒரு விஷயத்தை யார் யார் எந்த எந்தக் கண்ணைக் கொண்டு பார்க்கிறார்களோ, அவரவர்களுக்கு அந்த அந்தப் படியே தோற்ற மளிப்பது சகஜம். எனவே, ஷஜருத்துர்ரைப் பற்றி மைமூனா எவ்வளவு பொறாமை மிக்க வயிற்றெரிச்சலுடன் ஆராய முற்பட்டாளோ, அவ்வளவு விபரீதமாகவே எல்லாம் அவள் கண்முன் காட்சியளித்தன. "ஒண்ட வந்த பிடாரியான வேற்று நாட்டு அடிமைச் சிறுக்கி தன் சாகசத்தால் ஸாலிஹின் மதியை மயக்கி, ஒரு பிள்ளையையும் பெற்று, தாற்காலிக சுல்தானாவாக ஆட்சி செலுத்தி, பிறகு கணவனை யிழந்த கைம் பெண்ணாகி, இத்தாவி லிருக்கையிலேயே கபட

மாகச் சட்ட பூர்வமான சுல்தான் மலிக்குல் முஅல்லமைக் கொலைபுரியத் தூண்டுதல் புரிந்து, அரசாங்கத்துக்குத் தன்னைத் தானே சுல்தானுவாக உயர்த்திக் கொண்டு, நாடாளும் பேராசையால் கலீபாவின் கட்டளையை உதாசினம் செய்து, கலீபாவை ஏமாற்றுவதற்காக என் கணவரையும் கவர்ந்து கொண்ட காதகியை யான் எப்படிப் பழிவாங்குவேன்?" என்று ஏங்கித் தவிக்க முற்பட்டாள், அம் மனமுடைந்த காரிகை. என்ன மனமுடைந்துதான் என்ன செய்வது? ஸல்தனத் ஷஜரின் கையி லல்லவா இருக்கிறது!

பகலெல்லாம் அவள் ஏதேதோ சிந்திப்பாள்; இரவெல்லாம் அவள் வேறுவிதமாக முடிவுகட்டுவாள்; விடிகிற நோத்தில் முற்றிலும் புதிய சபதங்களைச் செய்துகொள்வாள். சுருங்கக் கூறுமிடத்து, பொறுமை யென்னும் தனதுள்ளத்திலே பழிவாங்குதலென்னும் கத்தியைத் தீட்டித் தீட்டிக் கூர்மையாக்கிக் கொள்ளத் தலைப்பட்டாள். அப்படிக் கூர்மை ஏறவேற, அவளுடைய உடைந்த உள்ளம் நாளடைவில் இறுக ஆரம்பித்தது. சமயம் வாய்த்தால் ஷஜருத்துர் ரென்னும் அம் மாயமிக்க மோசக்காரியின் சூரலையாவது பிறியெறிய வேண்டுமென்று கைபிசைந்தாள், மைமூனா. ஆனால், நாடாளும் ஷஜருத்துர் முன்னே இவள் எந்தச் சுண்டு விரலை யசைக்க முடியும்?

எனவே, சமயம் வருகிற வரையில் மிக்க பொறுமையுட னிருப்பதைத் தவிர்த்து வேறு வழியில்லை யென்று கண்டுகொண்ட மைமூனா அந்தப் 'பொறுமை' யென்னும் பொறுமையின்மையை மேற்கொண்டாள்.

ஒரு நாள் மைமூனா தூங்கிக்கொண் டிருந்த தன் மைந்தனின் கன்னத்தைத் தடவிய வண்ணம் அமர்ந்திருந்தாள். அப்போது வீதி வழியே போகிறவர்கள் உரத்த சப்தமிட்டுப் பேசிக்கொண்டு போவதையும், நடு நடுவே "இரு சுல்தான்கள்!" என்று ஏதேதோ கூறிக்கொள்வதையும் செவிமடுத்தாள். உடனே அவள் வாரிச் சுருட்டியெழுந்து, நூருத்தீனை மெல்லப் படுக்க வைத்துவிட்டு, தலையணையை யணைத்து வைத்து வாயிற் பக்கம் சென்று, அங்கு நின்ற சேவகர்களை விஷயம் என்ன வென்று கேட்டாள்.

"யா உம்மு நூருத்தீன்! அமீருல் மூமினீன் கலீபா அவர்கள் இந்த மிஸ்ரின் ஸல்தனத்துக்குப் புதிய சுல்தானொருவரை நியமித்தனுப்பி யிருக்கிறார்களாம். அந்தப் புதிய சுல்தானின் பெயர் அல் மலிக்குல் அஷ்ரப் என்று சொல்லுகிறார்கள்," என்று ஒரு காவலன் அறிவித்தான்.

"புதிய சுல்தானா! அப்படியானால் நூருத்தீனின் தந்தையார் பதவியைத் துறந்து விட்டாரோ?" என்று மைமூனா அம்மையார் திரைமறைவுக்கு இப்புற மிருந்தே வினவினார்.

"அதுதான் இல்லை, அம்மணி! சுல்தான் முஈஜுத்தீன் ஐபக்கும் சுல்தான் மலிக்குல் அஷ்ரபும் சேர்ந்தே இரு சுல்தான்களாக வீற்றிருக்கிறார்களாம்."

"அவள் என்னவானாள்?—அவள்தான், ஷஜருத்துர்!"

"அவள் அந்தப் புரத்துள்ளே ஒளிந்து கொண்டு விட்டாளாம். கலீபா நியமித்தனுப்பிய சுல்தானை அவள் அவமானப் படுத்திய படியால், புர்ஜீகள் கலகம் விளைத்து அவளை அடிக்க ஓடினார்களாம். அதற்குள் அவள் தப்பிக்கொண்டு உள்ளே ஓடிப் போய்விட்டாளாம். மீதி விவர மொன்றும் தெரியவில்லை."

"நீ ஓடு, ஓடு! சீக்கிரமாய் அரண்மனைக்கு ஓடிப்போய் என்ன நடந்த தென்பதைத் தெரிந்து வா. அவளுக்குக் கேடுகாலம் வந்துவிட்டதென்றே நினைக்கிறேன். அவளைப் பிடிக்கிற சனியன் அவரையும் சேர்த்துப் பிடித்துக் கொள்ளப் போகிறது! ஓடு, ஓடு! அவரை எப்படியாவது இங்கே கொண்டு வந்து சேர்த்துவிடு. அவர் இங்கே வந்துவிட்டால் எப்படியாவது தப்பிப் பிழைத்து ஓடிவிடலா மென்று நான் கூறுவதாக அவருக்குத் தெரிவி! நிற்காதே, சீக்கிரம், சீக்கிரம்!" என்று படபடத்தாள் மைமூனா.

அக் காவலன் அக்கணமே அவ்விடம்விட் டகன்றான்.

மைமூனாவுக்கோ, திக் திக் கென்று நெஞ்சம் துடித்தது. ஆனால், அரண்மனையில் பெரிய குழப்பம் ஏதாவது ஏற்பட்டு முஈஜுத்தீன் தப்பி யோடி இங்கே வந்துவிடமாட்டாரா வென்று தவியாய்த் தவித்தாள். ஆனால், அவ் வெண்ணம் நீடிக்கவில்லை. முன்பொரு சமயம் விளைந்த கலகத்தின் போது உயிர் தப்ப ஓடிய முஅல்லமின் கதி யாதாயிற்றென்பதை மைமூனா மறந்துவிடவில்லையாதலால், எங்கே புர்ஜீகள் இப்போது முஈஜுத்தீனை அம் மாதிரி கொலை புரிந்து விடுவார்களோ என்று துடிதுடித்தாள். "ஏ இறைவா! என் கணவரை உயிருடன் காப்பாற்றி என்னிடம் சேர்ப்பிப்பாயா!" என்று அலறிக் கொண்டே குப்புற்று வீழ்ந்து குறையிரக்க லாயினாள்.

அலை மோதுகிற அவளதுள்ளத்திலே எண்ணிறந்த கற்பனைச் சித்திரங்கள், வெகுவர்ண தர்சனியில் மாறி மாறி வருவதே போல் ஓடியோடி மறைந்தன. உடலெலாம் வேர்த்து விட்டது; கைகால்கள் ஜில்லிட்டு விட்டன. இதுவரை, முஈஜுத்தீனை உயிருடனே பறிகொடுத்து விட்டதாகக் கருதி யிருந்த மைமூனாவுக்கு, இப்போது கணவன் உயிர் தப்பினால் போதுமே என்ற ஆசை எழுந்து விட்டது. நூருத்தீன் நன்றாய்த் தூங்கிக்கொண் டிருந்தான். கண்ணீர் வழிகிற தன் வதனத்தை அக் குழந்தையின் முகத்தண்டை வைத்துக் கொண்டு மைமூனா மெய் சோர்ந்தாள். சென்ற காவலனும் சீக்கிரம் திரும்புகிறதாய்க் காணோம். நேரம் செல்லச் செல்ல அவளுக்கு மெய் பதற வாரம்பித்தது. துர்நிமித்தமான செய்தியை எங்கே

(37 - ஆம் பக்கம் பார்க்க)

இறைவனின்றி மனிதன் உயிர்வாழ முடியுமா?

[அறிஞர் வஸ்வானீ அறைவது]

நம்முடைய பரம விரோதி யொருவனையுங்கூட முஹம்மத் (சல்) சபிக்க மாட்டார். "நான் சபிப்பதற்காக இவ்வுலகில் அவதரிக்கவில்லை; நான் எல்லாரிடையேயும் சாந்தியையும் சமாதானத்தையும் பிரசாரம் பண்ணுவதற்காகவே உங்களிடையே வந்துள்ளேன்!" என்றே அவர் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார். அவருடைய நேத்திரங்கள் தாம் என்ன தேஜஸ் மிக்கவையாய்க் காணப்படுகின்றன! அவருடைய தினசரி வாழ்வில் தாம் அவர் எவ்வளவு எளிமையுடனும் பணிவுடனும் காணப்படுகிறார்! அவர் கொஞ்சமாகவே பேசுகிறார்; அவருடைய உணவோ மிகச் சாதாரணமானது— அத்திப்பழங்கள், பேரீச்சங் கனிகள், தண்ணீர்— இவ்வளவே! தாம் ஒரு தெய்விக சக்தி படைக்கப் பெற்றவரென்ற "இடம்ப உல்லாசம்" அவரிடம் அறவே கிடையாது. "நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே!" என்று அவர் தம் தோழர்களிடம் நவில்கிறார்.

நோயுற்றவர்களிடம் அவர் சென்று இன்மொழி பேசுகிறார். ஏழைகளுடன் சேர்ந்து ஒன்றாய் உணவருந்துகிறார். அடிமைகளை அவர் ஆறுதன் மொழிகளுடன் உபசரிக்கிறார். மக்களைப் பார்த்து அவர் கூறுகிறார்:—"கொலை புரியாதீர்கள்; திருடாதீர்கள்; பொய் பேசாதீர்கள்; இடம்ப வாழ்வை உதறித் தள்ளுங்கள்; வட்டி வாங்காதீர்கள்!"

குழந்தைகள் மீது அவருக்கிருக்கும் அன்பின் ஆழந்தான் என்னே! வீதிகளில் அவர்களைக் காணுந்தொறும் அவர் அவர்களை ஆசீர்வதிக்கிறார்; குழந்தைகளும் அவரை மிகவும் அபிமானத்துடன் உற்று நோக்குகின்றன. அரப் நாட்டிலே யுள்ள மக்கள் (அந்தக் காலத்தில்) பெண் குழந்தைகளை மிகக் கேவலமாக மதித்து, ஏழ்மைக்கு அஞ்சித் தங்கள் புத்திரிகளைக் கொன்று அதற்காக ஒரு தண்டனையையும் பெற்றுக் கொள்ளாமல் தப்பிவிடுகிறார்கள். ஆனால், முஹம்மதோ (சல்) அப்பெண் குழந்தைகளை ஆசீர்வதிக்கிறார்! ஒரு பெண் குழந்தை தம்மருகில் வரும்போது அதைக் கிட்ட அழைத்து, அதன் தலை மயிரைத் தடவிக் கொடுத்து, மிகமிருதுவாக அதனிடம் சம்பாஷிக்கிறார்!

அவருடன் ஒப்பிட்டுப் பார்க்குமளவில் இந்த 20-ஆவது நூற்றாண்டில் உயிர் வாழும் நாம் எப்படிக் காணப்படுகிறோம்? பொன்னாசையால் வெறிபிடித்து, பதவி மோகத்தால் கண்ணிழந்து, டாம்பிக வாழ்வால் தீக்குணமிகுந்து, குழந்தைகளிடம் அன்புடனும் அபிமானத்துடனும் ஒழுக வேண்டுமென்பதைக் கிஞ்சித்தும் உணராமல் கேடுகட்டலையும் நாம் அநாகரிகம் பிடித்த காட்டுமிராண்டிகளைவிட, தீவட்டிக் கொள்ளைக்காரர்களைவிட எந்த அம்சத்தில் மேம்பட்டவர்களாக விளங்குகிறோம்? பேராசை யென்னும் மோகம் நம்மை ஆட்டிப் படைக்கிறது. மனிதனின் சரியான கடமை யென்பது அவனுடைய ஆத்மாவை எப்படி விழிப்படையச் செய்து அதன் மூலம் உலகிலுள்ள சகல ஜீவராசிகளின் ஆவியையும் ஆத்மிக மயமாக ஊடுருவச் செய்யலாம் என்பதாகத்தான் காணப்பட்டு வருகிறதென்பதைப் பணப் பொதிகளின் மீது மிதந்து அவதியுறும் மேனாடுகள் கீழ்நாடுகளிடமிருந்துதான் கற்றாக வேண்டும். எதிர் காலத்தின் மிகப் பெரும் பிரச்னையாக விளங்கப் போவது ஸோஷலிஸமன்று; புரட்சியன்று; பார்லிமெண்ட் மூலம் செலுத்தும் சுய ஆட்சியன்று. ஆனால், இறைவனின்றி மனிதன் உயிர் வாழ முடியுமா? என்பதே அந்தப் பெரும் பிரச்சினையாய்க் காணப்பட்டு வருகிறது.

—*Mira.*

"வெள்ளையனே, வெளியேறு!" என்ற முழக்கம் எல்லா நாடுகளிலும் தலை தூக்க ஆரம்பித்ததும் ஆபிரிகாவிலுள்ள கெனியாவில் அது சொல்லொணா விபரீத உருவைப் பெற்றுக்கொண்டு விட்டது. சமீபகாலமாகப் பத்திரிகைகளில் பிரக்யாதியைப் பெற்றுக்கொண்ட இரகசியக் கூட்டத்தினர் பற்றிய கட்டுரை இது.

கெனியாவின் மாவ் மாவ் பயங்கரக் கூட்டம்

[மாத்யூ ஹால்டன் வரைவது]

சென்ற 200 ஆண்டுகட்கு மேலாகவே ஆபிரிகா கண்டத்தில் ஐரோப்பியர்கள் குடியேறி, அதை வளப்பமாக்கிக் கொண்டும், ஆட்சி செலுத்திக் கொண்டும், அபிவிருத்தி செய்து கொண்டும், சுரண்டிக் கொண்டும் இருந்துவருகிறார்கள். எகிப்து, எதியோப்பியா, லைபீரியா ஆகிய தேசங்களைத் தவிர்த்து, ஆபிரிகா கண்டத்தின் மிகுதி எல்லாப் பகுதிகளையும் அவ் வெள்ளையர்கள் மத்திய தரைக் கடற்கரையிலிருந்து தெற்கு முனைவரை இப்போது ஆண்டு வருகிறார்கள். ஆனால், இப்போது ஆபிரிக்காவில் கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது. அநீதி யிழைக்கப்படுகின்றமையால் உபத்திரவ முற்றதினாலும், ஆசியா கண்டத்தில் சமீபத்தில் விளைந்த மாறுதல்களைக் கண்டு கண் விழித்தமையாலும், நிறவெறி அதிகரிக்க ஆரம்பித்து விட்டதாலும், வெள்ளையனே கற்றுக் கொடுத்த சுதந்தர உணர்ச்சி பொருளாதார சரிசமத்துவம் முதலியவற்றை உணர்ந்து கொண்டமையாலும் இப்போது கறுப்பு மனிதன் தன்னுடைய கைவரிசையைக் காண்பிக்க முற்பட்டு, தன் நிலத்தைத் தானே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கனவு காண முற்பட்டு விட்டான். மிகச் சமீபத்தில் ஏற்பட்ட அத்தகைய உபத்திரவம் ஒன்று கிழக்கு ஆபிரிகாவிலுள்ள பிரிட்டிஷ் கெனியா குடியேற்ற வட்டாரத்திலே வியாபிக்கத் தொடங்கி யிருக்கிறது. அங்கேயுள்ள நீகிரோவர்களின் ஓர் இரகசிய கூட்டமே 'மாவ் மாவ்' என்ற பெயருடன் பெருங் கலக்குக் கலக்கிவிட்டிருக்கிறது.

மிருகத்தனமான அநாகரிக மதச் சடங்குகளுடன் கூடிய மாவ் மாவ் என்பது மிகவும் கொடிய கொள்கையே யாகும்; ஆனால், வெள்ளையர்கள் ஆரம்ப காலத்தி லெல்லாம் அதைப் பற்றிக் கொஞ்சமும் பொருட் படுத்தவே யில்லை; ஏனென்றால், அஃதோர் அநாகரிக மதக்கோட்பா டென்று மட்டுமே ஒதுக்கித் தள்ளப்பட்டு வந்ததன்றி, பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் அது தலையிடுமென்று வெள்ளையர் அப்போது கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை. அப் பகுதியிலுள்ள சுதேசக் குடிகள் பல முறையும் கிறிஸ்து மதத்தை வெறுத்துப் பழங்காலக் காட்டுத் தெய்வங்களைக் கெனியா மலைச் சாரல்களிலும் கிலிமஞ்சாரோ மலையிலும் வழிபடும் இரகசியக் கூட்டத்தினராக வேலை செய்ய ஆரம்பித்தனர். எல்லாம் பழைய 'ஐயாமுல் ஜாஹிலியத்' தாகவே தோன்றத் தலைப்பட்டன.

ஆனால், அந்த மாவ் மாவ் என்னும் கோட்பாடு முற்றிலும் வேறுவிதமான பயங்கரத் தன்மை பொருந்தியதென்று இப்போது அஞ்சப்படுகிறது. அது கார்ல் மார்க்ஸின் கம்யூனிஸ சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொள்ள முற்பட் டிருக்கிறது. எனவே, கெனியா பெரிய நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. கெனிய அரசாங்கத்துக்கும் பெரிய குடிபடையாகிய கிக்யூக்களுக்கு மிடையே ஒரு யுத்தமே தொடங்கிவிட்டது. பிரிட்டிஷ் படைகள் அங்கு வந்து சேர்ந்தன. மாவ் மாவ் பயங்கர வாதிகள் 40 கொரோமான கொலைகளையும் புரிந்து விட்டார்கள். கெனியாவில் வசிக்கும் வேறு பூர்விகக் குடி மக்கள் மாவ் மாவ் மீது வெறுப்புக் கொண் டிருந்த போதினும், தங்கள் உயிருக்கு அஞ்சி, வெள்ளையரின் பொலீஸுக்கு உதவி புரியவும் மறுக்கிறார்கள்.

ஆபிரிகாவின் ஏனைப் பகுதிகளில் வசிக்கும் நீகிரோவர்களை விட, கெனியாவிலுள்ள நீகிரோவன் நல்லவிதமாகவே வெள்ளையர்களால் நடத்தபபடுகிறான்: அவன் ஒரு குற்றவாளியாகவோ அல்லது ஓர் அடிமையாகவோ கருதப்படுவதில்லை; ஆனால், வெள்ளையருக்கும் கறுப்பருக்கு மிடையே நல்லவிதமான சமூக உறவே நீடித்து நிற்கிறது. எனினும், அங்குள்ள சில விரல்விட் டெண்ணத்தக்க வெள்ளையர்களின் கையிலே அந்நாட்டின் மிக வளப்பமான நில புலங்களின் கோடிக்கணக்கான ஏக்கர்கள் சிக்கிக் கிடக்கின்றன; ஏராளமான சுதேசிகளுக்கோ மிகக் குறுகிய சொற்ப விஸ்தீரண நிலப்பரப்பே சொந்தமா யிருக்கிறது. நிற வேற்றுமை யுணர்ச்சி காரணமாக, கறுப்பு மனிதர்கள் வெள்ளையரை விடக் கீழானவர்க ளென்றும், அவர்களை ஆள அருகதை வாய்ந்த உயர்வானவர்கள் வெள்ளையரே என்றும் அங்குள்ள நிலைமை காணப்படுவதும் வாஸ்தவமே. இந் நிலைமை இனியும் தொடர்ந்து

நீடித்திருக்கப் போவதில்லை யென்ப தென்னவே வாஸ்தவந்தான்.

மாவ் மாவ் சடங்குகள்

"ஜயாமுல் ஜாஹிலியத்" நிலவிய ஆபிரிகாவின் அந்தகார நாட்களை நிகர்ப்பனவாகவே இந்த மாவ் மாவ் இனத்தினரின் அநாகரிகக் கொடுமைகள் காணப்படுவதுடன், இப்போதுள்ளதைவிட நல்ல வாழ்க்கையை வாழ வேண்டுமென்று ஆசைகொண்டிருப்பதாகவும் தோன்றுகின்றது. பெருந் திகில் ஊட்டுகின்றதென்னும் ஹோதாவில் அது நசுக்கப்பட்டு ஒழிக்கப்படத்தான் வேண்டும்; ஆனால், ஆபிரிகர்கள் ஒரு பெருத்த அளவுக்குப் பொருளாதார நீதியையும், நில உரிமையில் சம பாகத்தையும் பெறும்படி செய்தாலொழிய அதன் கொள்கைகளை யாராலும் கொன்றொழிக்க முடியாது. ஏனென்றால், ஆபிரிகாவின் நிலம் முதலில் ஆபிரிகனுக்கே தானே சொந்தம்?

மாவ் மாவின் மிருகத்தனத்தை யாரும் பொய்யென்று கூறி ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அதன் கொடூர மூர்க்கர்கள் புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்காக இராக் காலங்களில் கூட்டம் கூடுகிறார்கள். ஒரு மனிதனோ, அல்லது மனுஷியோ அங்கத்தினராக மறுத்தால் உடனே கொடிய சித்திரவதை பிரயோகிக்கப் படுகிறது. எனவே, அங்குச் சென்று சிக்கிக் கொண்ட ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் மூச்சுப் பேசாமல் அங்கத்தினராகிவிடச் சம்மதிக்கின்றனர். அப்படிச் சம்மதித்த பிறகேதான் பிரமாணமெடுத்துக் கொள்ளும் .சடங்கு தொடங்குகிறது. இந்தச் சடங்கின் போது உதிரம் குடிப்பாட்டப் படுவதாலும், ஒரு செம்மறியாடு சிதைக்கப் படுவதாலும், இன்னம் பல அந்தகார அருவருப்புக்கள் நிகழ்வதாலும் காணச் சகியாக் குடல் நடுக்கமே ஏற்பட்டு வருகிறது.

பிரமாணம் எடுத்தல்

பிரமாணத்தின் போது உச்சரிக்கப்படும் வார்த்தைகளும், அந்தச் சடங்கும் விதம் விதமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் இது மிகவும் விசேஷமானது: ஒரு செம்மறியாட்டுக் கிடா மிகவும் மூர்க்கமான முறையில் சித்ரவதை புரியப்பட்டுக் கொல்லப்படுகிறது. பிறகு அதன் உதிரம் மரத்தால் செய்யப்பட்ட பாத்திரங்களில் நிரப்பப் படுகிறது. பிரமாணம் எடுக்க வேண்டியவன் அந்த உதிரத்துக் கெதிரே மண்டியிட்டுக் குந்தி மந்திரோச்சாரணம் புரிகிறான்; பிறகு மண் நிரப்பப்பட்ட ஒரு பாத்திரத்தின் முன்பும் ஈட்டி, கத்தி முதலிய ஆயுதங்களுக்கு முன்பும் இதே மாதிரி உச்சாரணம் செய்கிறான். அப்பால் வளைவாக நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு மரவளைவின் கீழே நுழைந்து செல்கிறான். ஒரு வாழைத் தண்டு உட்புறம் குடையப்பட்டு அதில் நிறைய உதிரம் கொட்டப்படுகிறது. அந்த உதிரத்தின் மீது ஓர் ஆட்டின் கண் மிதக்க விடப்படுகிறது. அவன் உதிரத்தைச் சப்பிச் சப்பிப் பருக வேண்டும். கடைசியாக அந்தக் கண்ணை ஓர் ஆணியால் குத்தியெடுத்து, அப்படியே முற்சொன்ன மர வளைவின் மீது அடித்து அறைந்துவிட வேண்டும். அப்பாலேதான் அவன் பிரமாணம் எடுக்கிறான்.

இவையெல்லாம் அந்தகார மிக்கனவாகவும் அறியாமை நிரம்பியனவாகவும் காணப்படுகின்றனவே என்று நீங்கள் கருதலாம். ஆனால், அவர்கள் எடுக்கிற உறுதிப் பிரமாணம் அப்படிப் பட்டதாயில்லை. பலதிறப் பட்டனவாயிருப்பினும், கீழ்க்காணும் சில தினுசுகளே அவர்களெடுக்கும் பிரமாணமாகும்:—

கெனியாவைவிட்டு வெள்ளையனை விரட்டியடிக்க வேண்டும்; வெள்ளையனுக்கு ஓர் அங்குல நிலமும் விற்கக் கூடாது; கிறிஸ்து மதத்தை எதிர்த்துத் தாக்க வேண்டும்; அவர்களோ அவர்களுடைய பிள்ளை குட்டிகளோ மனைவி மக்களோ மாதா கோவில்களுக்கு அல்லது மதப்பிரசார சங்கங்களுக்கு அல்லது அரசாங்கப் பள்ளிகளுக்குப் போக மாட்டார்கள்;

வெள்ளையனிடமிருந்து துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் திருடவேண்டும்; எப்போது கட்டளை பிறக்கிறதோ அப்போதே வெள்ளையனைக் கொல்ல வேண்டும்; வெள்ளையனைக் கொன்று விட்டு அல்லது அவனிடம் கொள்ளையடித்து விட்டு ஓடிவருகிறவனைக் காப்பாற்ற வேண்டும்; ஒளித்து மறைத்து வைக்க வேண்டும்;

சிறைக் காவலிலிருக்கும் அவர்களுடைய தலைவனை ஜோமோ கென்யட்டா என்பவனைச் சிறை மீட்க வேண்டும்.

மேலே சொன்ன இந்தப் பிரமாணங்களைக் கூர்ந்து நோக்கினால் வெறும் மதச் சடங்குகளை நிகழ்த்துகிற சூனிய வித்தைக் காரர்களின் சாதாரணச் செயல்களே இவையென்று எவரும் கூறிவிட முடியாது. அந்த மாதிரியாக ஆரம்பித்த அது, காலம் செல்லச் செல்ல ஒரு தேசீய இயக்கமாகவும் அரசியல் இயக்கமாகவும் மாற்றுருப் பெற ஆரம்பித்து விட்டது.

ஜோமோ கென்யட்டா என்பவன் அவர்களுடைய தலைவன்; அவன் தற்போது சிறையில் காவலிலிருக்கிறான்; அவன் பிரசங்கத்தில் எவ்வளவு வல்லுநனென்றால், கேட்போரனைவரையும் மயக்கிவிட வல்லவன். அவனையே தனிப் பெருந் தலைவனென்று அவர்கள் கொண்டு விட்டார்கள். ஆபிரிக மக்களைச் சுயேச்சை பெறச் செய்து விடுதலையளிக்க வென்றே தங்கள் கடவுள்கள் அவனை இவ் வுலகுக்கு அனுப்பி யிருப்பதாக மாவ் மாவ் காரர்கள் தங்கள் சத்தியப் பிரமாணத்தில் குறிப்பிடுகிறார்கள். அவர்களுள் கிறிஸ்தவர்களாயிருக்கும் பேர்வழிகள் தேவ ஆராதனையின் போது பாடுகிற கிறிஸ்தவ கீதங்களில் எங்கெங்கே இயேசுவின் நாமம் வருகிறதோ அங்கங்கே ஜோமோவின் பெயரையே உச்சரிக்கின்றனர்.

சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட பின்னர் அந்தப் புது அங்கத்தினனுக்கு அடையாளங்களும் முத்திரைகளும் வழங்கப்படுகின்றன. அவனுடைய

வலது தோட்பட்டை மீது மூன்று ஆழமான வெட்டுக்கள் குறிக்கப்படுகின்றன. அவன் தன் சத்தியத்தை முறித்துவிட்டால், தனக்கும் தன் குடும்பத்தின ரனைவருக்கும் எல்லாக் கேடுகாலங்களும் மரணமும் வரக்கடவன வாக என்று அறுதி யிடுகிறான். அப்பால் உடனே அவன் மாவ் மாவ் அங்கத்தினனாகி விடுகிறான்.

கடுமையான இரகசியம்

மாவ் மாவின் அந்தரங்க இரகசியங்கள் எவ்வளவு வன்மையுடன் பாதுகாக்கப் படுகின்றன வென்றால், அதில் மொத்தம் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கின்றன ரென்பதையோ, அல்லது அதற்கு வேறிடங்களி லிருந்து கம்யூனிஸ்ட் ஆதரவு கிடைக்கிறதா வென்பதையோ கெனியாவின் பொலீஸால் இன்றளவும் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்தச் சங்கத்தின் செயல்கள் சில அம்சங்களில் பழங்கால நடத்தைகளை நிகர்த்திருந்த போதினும், மலேயாவிலுள்ள கம்யூனிஸ்ட் கொரில்லாக்களின் தன்மையையே பெரும்பாலும் நிகர்த்தனவாய்த் தென்படுகின்றன. மலேயாவில் ஏற்பட்டதைப் போல், கெனியாவிலும் முதன் முதலாக ஓர் இரகசியக் கொலைக் கூட்டமாகவே இது ஆரம்பமாயிற்று. மலேயாவிலுள்ளதைப் போலவே, இங்குள்ள கிராம வாசிகளும் பொலீஸுக்கு யாதொருவிதத் தகவலும் தெரிவிக்கக் கூடாது என்று அபரிமித அச்சமூட்டப் பெறுகிறார்கள். மலேயாவிலுள்ள கொரில்லா வீரர்கள் ரப்பர் மரங்களை அறுத்து வெட்டித் தள்ளினார்கள்; கெனியாவின் மாவ் மாவ்களோ ஆடு மாடு மந்தைகளைத் தாக்குகிறார்கள்.

அரசாங்கத்துக்குத் துணையாயிருந்த உள்ளூர் வாசிகளும் வெள்ளையர்களும் 40 பேர் வரை மிருகத்தனமாய்ப் படுகொலை புரியப்பட்டார்கள்; நூற்றுக் கணக்கான பேர்கள் அடியும் உதையும் பெற்றார்கள்; எத்தனையோ பேர் விபரீதமான முறையில் சித்திரவதை புரியப்பட்டார்கள். ஆடுமாடுகள் மீதுங் கூட அமானுஷிகத் தனமான கொடுங் கொலைகள் புரியப்படுகின்றன.

மாவ் மாவ் மிகவும் வன்மையாய் வேரூன்றியுள்ள கிக்யூ குல மக்களே கெனியாவில் மிக அதிகமான ஜனத்தொகை யுள்ளவர்களாவர். 10,00,000 மக்கள் அக்குலத்தினராய் விளங்குகின்றனர். அவர்களுள் 90 சத விகிதத்தினர் மாவ் மாவ் அங்கத்தினராக வென்று சிலர் சொல்கின்றனர்; மற்றுஞ் சிலர் 50 சதவிகிதமே அங்கம் வகிப்பதாகக் கூறுகின்றனர்; இன்னுஞ் சிலரோ, மொத்த அங்கத்தினர்களே 15,000 தான் என்று வாதிக்கின்றனர். சில ஜில்லாக்களில் 80 சதவிகித மக்கள் சத்திய பிரமாணம் வழங்கி யிருக்கின்றன ரென்பதென்னவோ உண்மைதான். அந்த அங்கத்தினர்களுள் மிகப் பெரும்பாலானோர் தங்கள் விருப்பத்துக்கு மாற்றமாக, வலுக்கட்டாயத்தின் மீது அங்கத்தினராக்கப்பட்டன ரென்பதை நாம் மறக்கலாகாது. சேர மறுக்கிறவர்களுக்கு உதையும் அடியும் சித்திரவதையுமே வழங்கப்படுகின்றன; அந்தச் சங்கத்தின் இரகசியங்களை வெளியிட்டு விடுபவர்களோ சித்திரவதை புரியப் பொட்டுக் கொலைபுரியப் படுகிறார்கள். இந்தப் பொல்லாத கொடுமைகள் இரகசியத்தை வெளியிடுபவனுக்கு மட்டுமின்றி, அவனுடைய மனைவிக்கும் மக்களுக்கும் ஏனைக் குடும்ப அங்கத்தினரொவ்வொருவருக்குமே தயாராய்க் காத்து நிற்கின்றன.

சென்ற 10, 12 வருஷங்களுக்கு முன்னேதான் முதன் முதலாக மாவ் மாவ் சங்கம் நிருமிக்கப்பட்டதென்று கருதப்படுகிறது. ஜோமோ கென்யட்டா ஒருவனைத் தவிர்த்து மற்றுமுள்ள தலைவர்கள் யார் யார் என்பதைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. மிகவும் மூர்க்கமான தீவிரவாதிகள் பெரும்பாலும் வாலிபர்களே—அதிருப்தி யுற்ற, நிலம் வேண்டுமென்று துடிக்கிற, நைரோபியில் வேலையின்மையால் திண்டாடுகிற மக்கள்களாவர். அந்தச் சங்கத்தில் வயது முதிர்ந்தவர்களுங்கூட அங்கம் வகிக்கிறார்கள். அவர்களுக்கு மாவ் மாவின் அந்தரங்கக் கொள்கைகள் என்ன வென்பது தெரியாவிட்டாலும், கிறிஸ்து மதத்தைத் தொலைக்க வேண்டுமென்றும், மீண்டும் பழையபடி ஐயாமுல் ஜாஹிலியத் திரும்பிவர வேண்டுமென்றும் அவர்கள் அக்கறை காண்பிக்கிறார்கள்.

மாற்றுப் பரிகாரம்

கெனியா அதிகாரிகளும், வேறு சில உள்ளூர்க் குல மக்களும், சில 'புத்திசாலி'களும் சேர்ந்து

இஸ்லாமிய இலக்கியத் தமிழ் மஞ்சரி
பாகவி
ஆசிரியர்
T.F.R. மஆலி சாஹிப்.
சந்தா ரூ 2
எங்கும் ஏஜெண்டு தேவை
பிரதி அணா 3
13. தாஹிர் சாஹிப் தெரு, சென்னை - 2.
பாகவி
வாலிபர்களின் வழிகாட்டி ::
ஆலிம்களின் அன்பன் ::
பாகவிகளின் தோழன் ::
ஆஸ்திகர்களின் ஆதர்ஸன்
நாஸ்திகர்களின் நாசகாலன்
பாகவி
சந்தாவை மணியார்டரில் அனுப்புக.

தங்கள் மக்களிடையே யாரேனும் மாவ் மாவ் சபதத்தை எடுத்துக்கொண்டிருப்பார்களேயானால், அவர்கள் மாற்றுப் பரிகாரம் செய்து தங்களைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டுவிட முடியும் என்று விளக்கம் செய்து, இப்போது வேறுவிதமான சடங்குகளையும் வேறு முறையான பிரமாணங்களையும் பின்பற்ற வேண்டுமென்று அறிவுறுத்தி, அதே மாதிரியும் செய்துவிட்டிருக்கிறார்கள். இந்த மாற்றுப் பரிகாரமென்பதும் மிகவும் அருவருப்புள்ளதும், பயங்கரமானதும், உதிரம் முதலிய உபத்திரவங்கள் கலந்தது மாகவே காணப்படுகின்றது. ஒரு வெள்ளாட்டுக் கடாவோ, செம்மறிக் கடாவோ ஒரு பிரமாதமான சடங்குக்குப்பின் கொல்லப்படுகிறது. அதன் சில மாமிசங்களும், உதிரமும் தெய்விகத் தண்ணீரும் ஒன்று கலக்கப்படுகின்றன; இந்தத் திரவத்திலே மாந்திரீகத் தலைவன் ஆட்டுக் குளம்பை நனைத்தெடுத்து, "சுத்திகரிக்கப்பட வேண்டிய" பக்தர்களெதிரே நீட்டுகிறான். அதை அவர்கள் ஒவ்வொருவரும் ஏழு முறை வீதம் உறுஞ்சுதல் வேண்டும். தெய்விக அத்திமரத்தின் கொப்புக்களையெல்லாம் ஒடித்து அந்தத் திரவத்தில் நனைத்தெடுத்து, அவற்றை ஒவ்வொருவனுக்கும் எவ்வேழு முறை கொடுக்கிறான். மந்திரோச்சாரணங்கள் நெடுகவே நடைபெறுகின்றன. அப்பால் 'சுத்திகரிக்கும்' பிரமாணம் எடுக்கப்படுகிறது. மாந்திரீகத் தலைவன் அந்த மனிதனுடைய மூக்கு நுனியிலே வெள்ளை விபூதியால் அடையாளமிடுகிறான். இவ்வளவோடு அந்த மனிதன் முன்னம் மாவ் மாவுக்குச் செய்து கொடுத்த சத்திய பிரமாணம் தறிபட்டு விடுகிறது.

இதுவரை மிகச் சில கிக்யூக்களே தப்பியோடி வந்துவிடத் தைரியங் கொண்டார்கள்; அல்லது தைரியத்துடன் பொலீஸுக்குத் தகவல் கொடுத்துத் தலைவர்களைக் கைது செய்யும்படி துணை புரிந்தார்கள்.

எனவே, கெனியா அரசாங்கமும் பொலீஸும் மூர்க்கமான நடவடிக்கையெடுத்தால் மட்டுமே எல்லாரையும் பிடிக்க முடியுமென்று கருதி, கூட்டு அபராதங்களையும் கூட்டுத் தண்டனைகளையும் விதிக்க முற்பட்டிருக்கிறார்கள் மாவ்மாவின் இரகசியங்களை மக்கள் வெளியிட மறுத்தால், அவர்கள் அத்தனை பேரும் கைது செய்யப்படுகிறார்கள்; அவர்களுடைய ஆடு மாடுகளெல்லாம் பறிமுதல் செய்யப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் முழுக் கிராமங்களுமே படுநாசப் படுத்தப்பட்டு, மக்கள் வேறு புதிய ஸ்தலங்களில் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னம் சில சமயங்களில் அவர்கள் ஆடுமாடுகளே போல் அடைக்கபபட்டார்கள். "தண்டனை கொடுத்தால் மட்டுமேதான் சுதேசிக் குடிக்குப் புத்தி வருகிறது," என்று வெள்ளையன் கூறுகிறான். இதைப்போன்ற வார்த்தைகள் அல்லது இன்னம் கடுமையானவையே கெனிய சட்டசபைகளில் முழங்கப்பட்டிருக்கின்றன—குருட்டுத்தனமாகவும், சென்றகால சரித்திரங்களெல்லாம் அறிவுறுத்தியிருப்பதற்கு நேர் மாறாகவும், குற்ற மிழைப்பவனைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு குற்றமும் புரிந்தறியாத நிரபராதிகளைத் தண்டிப்பதென்பது ஆபிரிக மக்களிடையே, கெனியாவில் மட்டுமின்றி அந்தக் கண்ட முழுதுமுள்ள நீகிரோவரிடையே பெரிய தீயைத்தான் நிச்சயமாக மூட்டிவிடும்.

பலாத்காரம் வழி காட்டாது

வெறும் பலாத்காரத்தைக் கொண்டு மட்டுமே மாவ் மாவைத் தீர்த்துக் கட்டுவதென்பது இயலாது. ஆனால், தரித்திரத்தைக் களைவதன் மூலமும் நம்பிக்கையிழந்து பரிதபித்து நின்று துடிக்கும் கெனிய நீகிரோக்களின் குறைகளை நிவர்த்திப்பதன் மூலமுமே அதை ஒருவாறு ஒழிக்க முடியும். அவர்களுக் கிருக்கும் குறைகள் வாஸ்தவத்திலேயே பெருங் குறைகளாகவே இலங்கி வருகின்றன. அவர்களுக்கு வழங்கப்படும் மிகக் குறைந்த கூலியும், அவர்களுக்கு நிலம் வேண்டுமென்னும் உத்வேகமுமே அத்தகைய குறைகளை உண்டுபண்ணி விட்டன. இவை செப்பனிடப் படுமேயானால், மாவ் மாவ் என்பது தானே செத்து மடிந்துவிடும்.

இதுதான் உபத்திரவத்தின் அடிப்படை :—மூன்று குறிப்பிட்ட வட்டாரங்களிலும், கிலிமஞ்சாரோ மலைச் சரிவுகளிலும் வசிக்கிற 10 லக்ஷத்துக்கும் அதிகமான கிக்யூ குலத்தினருக்கு 2000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பே சாகுபடிக்குச் சொந்தமாயிருக்கிறது. ஆனால், அங்குக் குடியேறியுள்ள 15,000 வெள்ளையருக்கோ 20,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள செழிப்பான நிலங்கள் சொந்தமாயிருக்கின்றன.

"வெள்ளையனே வெளியேறு!"

கிக்யூக்களுக்காக வென்று ஒதுக்கப்பட்டுள்ள ரிஸர்வ் வட்டாரங்களில் ஒரு சதுர மைலுக்கு 400 முதல் 1000 சுதேசிகள் வரை இடித்துப் பிடித்துக் கொண்டு செறிந்து வாழ்கின்றனர். வெள்ளையர்கள் மட்டும் சுகஜீவனம் நடத்துவதற்காக வென்று பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மலைச் சாரல் பகுதிகளில் ஆபிரிக குடிகள் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாதென்பதுடன், அங்கே 300 வெள்ளைநிறக் குடியானவர்கள் மட்டுமே 16,000 சதுர மைல் விஸ்தீரணத்தில் வசிக்கிறார்கள். கெனியாவில் குடியேறிய வெள்ளையன் மூர்க்க குணம் படைத்த கயவனல்லன். அவன் அங்குக் குடியேறியதும் பள்ளிக் கூடங்களையும், (கிறிஸ்து) மத பிரசார சங்கங்களையும், ஆஸ்பத்திரிகளையும் உற்பத்தி செய்து விட்டான். அதனால் சரீராரோக்கியம் அங்கே முன்னேற்றதைப் பெற்றுக் கொண்டுவிட்டதென்றாலும், இதன் காரணமாக மரணத் தொகை விகிதம் குறையத் தொடங்கி ஜன நெருக்கடியும் பிரஜா உற்பத்தியும் அதிகரித்து, தரித்திரத்துக்கான பிரச்சினைகளையும் உண்டுபண்ணி விட்டது.

கிக்யூ வம்சத்தினரிடையே யுள்ள நிலங்கள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பொதுப் பொதுச் சொத்தாயிருக்கின்றன. ஒரு மனிதன் இறந்துவிட்டால், அவனுடைய நில உரிமை அவன் மக்களுக்குப் பங்கிடப்பட்டு, காலஞ் செல்லச் செல்ல,

லைமுறை மாற மாற அது குறுகிக் கொண்டே போகிறது. இன்றைத் தினத்திலே எவனிடமும் அரை ஏக்கருக்கு அதிகப்படாத நிலமே இருந்து வருகிறது. எவனிடமாவது 5 ஏக்கர் இருந்து விட்டால், அது மிகப்பிரமாதமான பெருஞ் சொத்தாய்க் கருதப்படுகிறது. எனவே, சுதேசிகளுக்கு நிலம் இல்லாமற் போகப்போக, அவர்கள் பெருத்த அளவில் நகரங்களுக்குள் குடியேறி, கூலிக்கு வேலை பார்க்கும் ஊழியத்தைத் தேடியலைய முற்படுகின்றனர். அவர்களுள் 25,000 பேர் ஆண்டொன்றுக்குத் தலைக்கு ரூ. 300 கூடக் கூலியாகப் பெற முடிவதில்லை. கெனியத் தலைநகரான நைரோபியில் வேலையின்றியும், தங்க வீடின்றியும் எத்தனையோ ஆயிரக் கணக்கான சுதேசிகள் அவதிப்பட்டுக் கொண்டு கிடக்கிறார்கள்.

பொருளாதாரச் சீர்கேடு ஒருபுற மிருக்க, நிற வெறி வேறு அங்கே தாண்டவ மாடுகிறது. நீகிரோவர்கள் நகரங்களின் இன்ன இன்ன குறிப்பிட்ட ஸ்தலங்களிலும், நாடுகளின் இன்ன இன்ன ரிஸர்வ் வட்டாரங்களிலும் மட்டுமே குடியிருக்கலாம் என்று ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர். எனவே, அவர்கள் "வெள்ளையனே, வெளியேறு!" என்று எதிர்க்கத் தொடங்கி விட்டனர்.

நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், கெனியாவில் வசிக்கும் வெள்ளையர்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இந்த நிலைமை இப்படியே வெகு நாட்களுக்கு நீடித்து நிற்கப் போவதில்லை. நாம் விரும்பினாலும் வெறுத்தாலும், இந்த உலக வாழ்க்கை முறைச் சீதோஷ்ண ஸ்திதி மாறியே விட்டது. மாவ் மாவ் என்னும் இரகசிய சங்கத்தின் கொடுமைகளென்னவோ மிகவும் அமானுஷீக மானதும் பொல்லாததுமேதான் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவற்றுக் கெல்லாம் அடிப்படையாகக் காணப்படுவது ஆபிரிக நீகிரோவர்களின் தேசீய உணர்ச்சியே யாகும். ஆபிரிகா தங்களுக்கே சொந்த மென்றும், 'வெள்ளையர்களின் மலைச்சாரல்கள்' சுத்த அக்கிரமமானவை யென்றும் அவர்கள் கதறுகிறார்கள். ஆபிரிகாவில் பிரிட்டிஷாரின் கொள்கை மற்ற இடங்களி லிருப்பதைவிட விசேஷமானதாகவே இருந்துவருகிற தென்றாலும், போதுமான விசேஷ முள்ளதாகக் காணப்படவில்லை. சமீபத்தில் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஜேம்ஸ் கிரிபித்ஸ் கூறியதுபோல், வெள்ளையனுக்கும் கறுப்பனுக்கு மிடையே ஒரு பக்கா யுத்தம் தோன்றுவதைத் தடுக்க ஓர் இறுதியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிற தென்றால், அது கெனியாவில் நாம் காண்பிக்கும் நிஜமான ராஜீய நல்லுறவுத் தந்திரத்தைத்தான் முற்றிலும் சார்ந்திருக்கிறது.

[ஜோமோ கென்யட்டாவின் வழக்கு நடந்து முடிந்துவிட்ட தென்றாலும், அவன் வழக்கை விசாரித்த நீதிபதி இம் மாதம் 8–ஆம் தேதிதான் தீர்ப்புக் கூறமுடியுமென்று சொல்லி யிருக்கிறார். அந்த மாவ் மாவ் தலைவனின் கதி எப்படி முடியப்போகிறதோ, தெரியவில்லை. ப–ர்.

(31 – ஆம் பக்கத் தொடர்)

கொண்டு வந்து விடுகிறானே என்ற கவலையால் கலங்கித் தவித்தாள் கதியற்ற மைமூனா.

தூங்கி விழித்த சிறுவன் நூருத்தீன் தன் தாயாரை நோக்கி மழலைச் சொற்களால் "ஏன் அழுகிறாய், அம்மா?" என்று மதுரமாய்க் கேட்டான்.

இக் கேள்வி வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதுபோ லிருந்தது அவளுக்கு. "என் கண்ணே! உன் அபூ இன்று இங்கே வரப்போகிறாராம்!" என்று சொல்லிக் கொண்டே மேலும் அழுதாள்.

"என்ன! அபூ வரப்போகிறாரா? இதற்காக நீ யேன் அழுகிறாய்?" என்று யதார்த்தமாய் வினவினான் சிறுவன்.

"நான் அழவில்லையே! என் கண்களில் தூசி விழுந்து விட்டது," என்று நாஜுக்காய்ப் பேசி விட்டு, எழுந்து சென்று அச்சிறுவனுக்குத் தின் பண்டம் வழங்கினாள்.

பொத்துக் கொண்டு பீரிடுகிற துக்கத்துக்குப் பெரிய ஆப்பாக விளங்குகிற தன் கான்முனையின் இனிய வதனத்தை உற்று நோக்கிக் கொண்டே அவள் நின்றாள்.

(தொடரும்)

ஓர் அறிவிப்பு

சந்தாதாரர்கள் தங்களுடைய வருஷ சந்தாவை முன்பணமாக அனுப்பிவைத்தால், அவர்களுக்கும் லாபமுண்டு; எமக்கும் சிரமமில்லை. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் எப்போது சந்தா முடிகிறதோ அப்போதே அவர்களுக்கு நாம் அறிவிப்புக் கொடுக்கிறோம். அவர்கள் உடனே தங்கள் சந்தாவைப் புதுப்பிக்கத் தவறிவிட்டால், நாம் அவர்களுக்கு V. P. மூலம் பத்திரிகையை அனுப்ப நேரிடுகிறது. இதனால் வீணே தபால் செலவு 7 அணா கூடுதலாக ஆகி, சந்தாதாரர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு வந்தது. ஆனால், நம் காருண்யமிக்க அரசாங்கம் 1-4-1953 முதல் ரிஜிஸ்ட்ரேஷன், V. P. முதலிய கட்டணங்களை மிகவாகப் பெருக்கிவிட்டபடியால், இனிமேல் மேலும் கூடுதலாக வீண் நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, நம் சமூகத்தின் நன்மையைக் கருதி நம் சந்தாதாரர்களை நாம் விநயபூர்வமாக வேண்டிக்கொள்வ தென்னவென்றால், அவரவருக்கும் சந்தா முடிவு தெரிவிக்கப்பட்ட வுடனே தயவு செய்து முன்பணமாகச் சந்தா அனுப்பித் தங்கள் சந்தாவை நீடித்துக் கொள்வார்களாக; அல்லது ஒரு முக்காலணாக் கார்டு எழுதித் தங்கள் சந்தாவை நிறுத்திக்கொள்வார்களாக. நம் சமூகத்தின் சொற்பச்செல்வம் தபாலாபீஸ் V.P. கட்டணஸ்டாம்பாகப் பாழ்படாமல் காப்பாற்ற அன்பர்கள் முன்வருவார்களாக!

மானேஜர்.

தூங்குகிற முஸ்லிம்காள்! நீங்கள் கண் விழிப்பது எக்காலம்?

N. B. A.

சென்ற இதழில் நான் வரைந்திருந்த ஓர் ஆங்கில வர்ணப் படம் பற்றிய விமரிசனத்தை நீங்கள் ஊன்றிப் படித்திருப்பீர்களென்று நம்புகிறேன். அதிலிருந்து என்ன விளக்கமாகின்றதென்றால், கிறிஸ்து மத பிரசார அடிப்படையுடன் எழுதப்பட்ட ஒரு சரித்திர நவீனத்தின் கதாசிரியருக்கு எல்லாக் கிறிஸ்தவர்களுமாகச் சேர்ந்து கொண்டு நோபல் பரிசு வழங்கினார்களென்றும், அந்த நோபல் பரிசு பெற்ற "**கோவாடிஸ்**" என்னும் சரித்திர நவீனத்தைப் புகழ்மிக்க ஒரு ஹாலிவுட் ஸினிமாக் கம்பெனிக்காரர்கள் டெக்னிகலர்ப் படமாகத் தயாரித்திருக்கிறார்களென்றும் நீங்கள் விளங்கிக் கொண்டீர்கள். முன்பு என்னால் எழுதப்பட்டது பட விமரிசனந்தானேயொழிய, அதன் பொருள் பற்றிய விமரிசனமன்று ஆகையால், இப்போது இதைப்பற்றிக் கொஞ்சம் தெளிவுபடுத்த வேண்டும்.

முன்னமே தெரிவித்தபடி, அந்த ஸினிமாக் கதையின் அடிப்படை முற்ற முற்றக் கிறிஸ்து மத பிரசாரமே யாகும். ரோமாபுரியில் நீரோ சக்ரவர்த்தியின் ஆட்சி உச்சத்திலிருந்த காலத்தில் அங்கே எப்படிக் கிறிஸ்து மதம் — சாந்தத்தையும், சமாதானத்தையும், ஒரு கன்னத்தில் அறை விழுந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்ட வேண்டுமென்னும் பரம அஹிம்சா தர்மத்தையும், 'உன் எதிரியையும் நேசிப்பாயாக!' என்னும் மிகப் பரந்த தாராளத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட ஏசு நாதரின் மார்க்கம் — மிகவும் சாத்விகமான முறையில் நுழைக்கப்பட்டதென்பதை அக் கிறிஸ்தவர்கள் மிகவும் அரும்பாடு பட்டுக் கற்பனையாகச் சிருஷ்டித்துக் காட்டிப் படம் பார்ப்பவரின் உள்ளத்தைத் தந்திரமாகக் கவர்ந்துவிட முற்பட்டிருக்கிறார்கள். ஒரு பாபமுமறியாத ஏழைக் கிறிஸ்தவர்கள் கொடுங் கோலனாகிய நீரோவின் சிங்கங்களுக்கு இரையாக்கப்படும், "அஞ்ஞானி"களான ரோமர்களால் சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டுங்கூட இறுதியில் கிறிஸ்து மதம் மட்டுமே வென்றது என்றும், அஞ்ஞானம் அழிந்தொழிந்தது என்றுப் கற்பித்துக் காட்டியிருக்கிறார்கள். ரோமாபுரி சரித்திரத்தையும் ஐரோப்பாக் கண்ட சரித்திரத்தையும் நுணுக்கமாகப் பயிலும் விவேகிகள் இந்தக் கூற்றுக்கு நேர் மாற்றமான உண்மைமையைத்தான் காண்கின்றனர்! என்னெனின், ரோமாபுரியில் கிறிஸ்து மதம் நுழைந்த பிறகுதான் இன்னம் பொல்லாத கேடுகாலங்களெல்லாம் கிறிஸ்து மதத்தின் பெயரால் விளைக்கப்பட்டன; கிறிஸ்து மதம் ரோம் நகரில் போப்பாண்டவர் உருவத்திலும், கர்தினல்கள் உருவத்திலும் நிலைநாட்டப்பட்ட பிறகே தான் ஐரோப்பாக் கண்ட முழுதும் "Dark Ages" (இருள் சூழ்ந்த கும்மிருட்டுக் காலம்) என்னும் மேக மண்டலம் சூழ ஆரம்பித்து, 700 வருஷ காலம் வரை அங்கே என்ன நிலவிற்று, என்ன நிலவவில்லை யென்பதை இன்றளவுங்கூடக் கண்டு பிடிக்க முடியாத பேரிருளை உற்பத்தி செய்துவிட்டது. கிறிஸ்தவர்கள் எந்த ரோமர்களை "அஞ்ஞானிகள்" (Pagans) என்று அழைக்கிறார்களோ, அந்த ரோமர்கள் ஆட்சி செலுத்திய கி. மு. பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட சரித்திர நிகழ்ச்சிகளைப் பத்திரமாகத் தொகுத்து விட்டுச் சென்றிருக்க, தங்களைப் பெரிய "ஞானிகள்" என்று அழைத்துக் கொண்ட கிறிஸ்தவர்கள் ரோமர்களையும், ரோம நகரத்தையும், சரித்திர சாஸ்திரத்தையும், மனித வாழ்க்கையையும் இருட்டடிப்புச் செய்து விட்டார்கள். இஸ்லாமும் உற்பத்தியாகாம லிருந்து, சிலுவை யுத்தங்களும் நிகழாம லிருந்து, முஸ்லிம் நாகரிகமும் கலையும் பண்பும் கலாஞானமும் மட்டும் ஐரோப்பாவுள் நுழையாம லிருந்திருந்தால் மத்திய காலத்தில் வாழ்ந்த ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இன்னம் பலப்பல நூற்றாண்டுகட்கு ஐரோப்பாவை மேலும் இருட்டடிப்புச் செய்து

அதைக் குட்டிச் சுவராகவே ஆக்கிவிட்டிருப்பார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், வளம் பெற்று ஓங்கி உயர்ந்து நின்ற ரோம நகரத்தை அக்காலக் கிறிஸ்து மதம் அழித்தொழித்து மக்களைப் பெரிய இருளுள்ளே ஆழ்த்தித் தாழ்த்தி விட்டது. அந்த அநாகரிகப் பேரிருளைப் போக்கி வெளிச்சத்தை உண்டுபண்ணுவதற்கு இஸ்லாம் உதயமாக வேண்டியிருந்தது! ஏனென்றால், ஐரோப்பாவுள்ளும் ரோமாபுரிக்குள்ளும் இஸ்லாம் என்னும் சூரியன் நுழைந்த பிறகுதான், சுமார் 700 ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்கள் இருட்டடிப்புச் செய்திருந்த பூபாகம் ஞான ஒளியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இஃது என் சொந்தக் கற்பனையன்று, ஆனால் சரித்திரம் கூறும் சான்றாகும். இன்றுங்கூட நீங்கள் ஐரோப்பிய சரித்திர நூல் எதை எடுத்துப் பார்த்தாலும், கிறிஸ்து மதம் நுழைந்த அன்றிலிருந்து, கிறிஸ்தவர்கள் சிலுவை யுத்தம் புரிந்து முஸ்லிம்களிடம் தோல்வியடைந்து, முஸ்லிம் நாகரிகத்தை ஐரோப்பாவுக்குள் கொண்டு சென்று பரத்துகிறவரையில் அந்தக் கண்டம் அனுபவிக்க நேர்ந்த காலவெல்லைக்கு "Dark Ages" (ஐயாமுல் ஜாஹிலியத் என்று அரபியில் அழகாகக் கூறலாம்) என்றே கொட்டையெழுத்துக்களால் நாமமிட்டழைக்கிறதைக் கண்ணாரக் கண்டு கொள்ளலாம்.

இப்படிப்பட்ட காரிருளை உண்டு பண்ணத் துணை புரிந்த கிறிஸ்து மதத்தை மேனாட்டினர் இந்தக் காலத்தில் எவ்வளவு தந்திரமாக மாற்றுருக் கொடுத்துப் 'பாலிஷ்' என்னும் மெருகுபூசி மக்களை மயங்கச் செய்து கிறிஸ்து மதத்தைப் பிரசாரம் புரிகிறார்கள், பார்த்தீர்களா? ரோமநாகரிக ஒளியை ஊதியணைத்துவிட்ட பழங்காலக் கிறிஸ்து மதத்தை ஒரு போலந்துக்காரர் எவ்வளவு வஞ்சகமாக வருணித்து நாவலெழுதினார், பார்த்தீர்களா? அப்படி உலகத்தை மயக்கத் தக்க (அல்லது ஏமாற்றத் தக்க) வகையில் கற்பனைக் கதை எழுதி கிறிஸ்து மதத்தைப் புகழ்ந்து வருணித்த கெட்டிக்காரத் தனத்துக்காக அந் நாவலாசிரியருக்கு நோபல் பரிசுங்கூட வழங்கி விட்டார்கள்! ஐரோப்பாவில் இருளைப் புகுத்திய கிறிஸ்து மதத்தைப் பற்றி இப்படி நேரெதிரிடையாக எழுதியவருக்கு ஏன் நோபல் பரிசு தான் வழங்க மாட்டார்கள்? அல்லது மற்றப் பரிசுதான் வழங்கமாட்டார்கள்? அப்படிப்பட்ட மனமுருக்கும், கிறிஸ்துமத பிரசாரத்தை எளிதில் புகட்டும் அமைப்புப் பெற்ற கதையை ஏன் பல கோடி டாலர் செலவிட்டுப் படம் பிடித்துக் காட்ட மாட்டார்கள்?

ரோமர்கள் மத்தியிலே கிறிஸ்து மதம் தோன்றிய போது கிறிஸ்தவர்களை ரோமர்கள் சிங்கங்களுக்கு உணவாக அளித்ததை மட்டுமே உங்களுக்கு அந்தக் கிறிஸ்தவர்கள் ஞாபகமூட்டுகிறார்களேயன்றி, கி. பி. 1483-ஆம் ஆண்டிலே அந்தக் கிறிஸ்தவர்கள் மத்தியில் இஸ்லாம் தோன்றிய போது ஸ்பெயின் தேச முஸ்லிம்களை அவர்கள் எப்படி முள்பதித்த பீப்பாய்க்குள் வைத்து உருட்டினார்களென்பதையோ, கொதிக்கிற எண்ணெயுள் அமுக்கிப் பொரித்தார்களென்பதையோ, இரும்புப் பணைமீது தலைகளை வைத்துச் சம்மட்டியால் அடித்துத் தூளாக்கினார்களென்பதையோ, பழுக்கக் காய்ந்த இரும்புக் கம்பிகளை மர்மஸ்தானங்களுக்குள் சொருகினார்களென்பதையோ, தலை கீழாய்ச் சுற்றுகிற இராட்டினத்தில் வளைத்துக் கட்டிக் காளவாய் நெருப்புக்கு மேலே சுழற்றிச் சுழற்றி விட்டார்களென்பதையோ, உயிருடன் எரித்தனரென்பதையோ, பலகை மீது சார்த்தி நிறுத்தி உடல் முழுதும் இருப்பு முளைகளை அறைந்தார்களென்பதையோ, இன்னம் இப்படிப்பட்ட இன்னம் பொல்லாத மிருகத்தனமான சித்திரவதைகளைப் புரிந்தார்களென்பதையோ எந்தக் கிறிஸ்தவரும் நமக்கு ஞாபகமூட்ட மாட்டார். ஒரு கன்னத்தில் அறை கொடுத்தவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்ட வேண்டுமென்று போதித்தவரின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாக லஜ்ஜையின்றித் தங்களையழைத்துக் கொண்ட கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களுக்கு ஸ்பெயின் தேசத்தில் வழங்கிய பரிசுகள் அவை.

கிறிஸ்து மத பிரசாரத்துக்காகக் "கோவாடிஸ்" கதையெழுதிய போலந்துக் காரரும், அதைப் படம் பிடித்த M. G. M. ஸ்டூடியோக் காரர்களும் தங்கள் கிறிஸ்து மதம் முஸ்லிம்களுக்களித்த மிருகவதை (Inquisition) யுடன் ஒப்பிட்டுப் பார்க்குமளவில், ரோம சக்ரவர்த்தி நீரோ ஆதிகால கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய சித்திரவதை எவ்வளவோ மிக மிக இலேசானது என்று மிக நன்றாய் உணர்வார்களென்றாலும், உலக மக்களை ஏமாற்றித் தங்கள்

கிறிஸ்து மதமே மிகவும் அப்பழுக்கற்ற உன்னத சாத்விக மார்க்க மென்றும், போக்கிரிப் பயல் நீரோ அநியாயமாக அக்காலக் கிறிஸ்தவர்களை வதைத்தபோதுங் கூட அவர்கள் கிறிஸ்துமத தர்மப்படியே நடந்துகொண்ட படியால் அதைவிட அழகான மார்க்கம் வேறெதுவுமே உலகில் தோன்ற முடியாது என்று நம்மை யெல்லாம் ஏமாற்றிவிட வேண்டுமென்றும் கருத்துக் கொண்டு ஒன்றல்ல, இரண்டல்ல பலப்பல கோடி டாலர்களை அள்ளிக் கொட்டி இந்தப் படத்தைப் பிடித்திருக்கிறார்கள். கி. பி. 1483-க்குப் பிறகு இதே கிறிஸ்தவர்கள் எப்படி நீரோவை யெல்லாங்கூட மிஞ்சிவிட்டார்களென்பதை உணராத முஸ்லிம்களை ஏய்ப்பதற்காகத்தான் அந்தப் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முஸ்லிம்கள் அவ்வளவு ஏமாந்த சோணகிரிகளா யில்லை!

எனினும், ஏ உறக்கங் கொண்டு தூங்கிக் கிடக்கும் முஸ்லிம் சகோதரர்காள்! நன்மைகளைவிடத் தின்மையே அதிகம் விளைத்த கிறிஸ்து மதத்தை இவர்க ளெல்லாரும் இவ்வளவு கபடத்தனமாகவும் நயவஞ்சகமாகவும் திரித்துக் காட்டி, தங்கள் பொய்யான மதத்திற்கு இவ்வளவு மெய்யான பிரசாரம் புரிய முற்பட்டிருக்கும்போது, முற்ற முற்ற நன்மை யொன்றனை மட்டுமே புரிந்திருக்கும் இஸ்லாத்தை நீங்கள் எப்படி யெப்படி யெல்லாம் பிரசாரம் புரியக் கட்டுப்பட்டிருக்கிறீர்கள்? நீங்கள் அப்படிப் பிரசாரம் புரிகிறீர்களா?

கிறிஸ்து மதத்தைப் புகழ்ந்து அந்தப் போலந்து வாசி எழுதிய கற்பனை நவீனத்தைப் போல் நீங்கள் இஸ்லாம் மதத்தைப் புகழ்ந்து நவீனம் எழுதத் தேவையில்லை. (அப்படியே நீங்கள் எழுதினாலும் உங்களுக்கு யாரும் நோபல் பரிசு வழங்கப் போவதில்லை!) அல்லது ரோமன் கத்தோலிக்க பாதிரிகள் ஸ்பெயின் முஸ்லிம்களுக்கு வழங்கிய Inquisition என்னும் மிருகவதைக் காட்சிகள் எவ்வளவு குரூரமாய்க் காணப்பட்டன வென்பதை டெக்னிகலரில் படம் பிடித்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. (அப்படியே நீங்கள் படம் பிடிக்க ஆசைப்பட்டாலும் உங்களிடம் கோடிக் கணக்கான டாலரோ, ஒரு M. G. M. ஸ்டுடியோவோ, மற்றச் சாதனங்களோ கிடையா; எப்படியாவது நிதி திரட்டி நீங்கள் அவ்வாறு ஒரு படமெடுத்து விட்டால், அதை எந்த ஸென்ஸார் போர்டும் அங்கீகரிக்கப் போவதில்லை!) அல்லது இல்லாததையும் பொல்லாததையும் புளுகிப் புகழ்ந்து, உலக மக்களை ஏமாற்றுவதற்காக "எங்கள் இஸ்லாம் மதம் மட்டுமே ஒவ்வோர் ஈமான்கொண்டவனையும், அவன் எவ்வளவு பெரிய பாபம் புரிந்தவனா யிருப்பினும் நேரே சுவர்க்கத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்" என்று பொய்ப் பிரசாரம் புரிய வேண்டிய அவசிய மில்லை. (அப்படியே நீங்கள் பிரசாரம் புரிய ஆரம்பித்தால் உங்களை எவரும் பாராட்டி 'மஸீஹ்' பட்டம் வழங்கப் போவதில்லை!) அல்லது பெரிய பெரிய 'சித்து'களும் 'எத்து'க்களும் புரிந்து, வேறு மதக் கோட்பாடுகளி லிருந்து காப்பியடித்து, இஸ்லாத்தில் இல்லாததை யெல்லாம் இருப்பது போல் எடுத்துக் காட்டி உலக மக்களை ஏமாற்ற வேண்டிய தேவை யில்லை.

ஆனால், நீங்கள் செய்ய வேண்டுவதுதான் என்ன? உங்களுள் பலருக்கே — கோபியாதீர்கள்! — நம் ரசூலுல்லா (ஹ்) (சல்அம்) அவர்களின் மெய்யான சரித்திரம் என்னவென்பது தெரியாது. அதையாவது நீங்கள் பூரணமாய்த் தெரிந்து கொள்ள வேண்டாமா? தெரிந்து கொண்டதைப் பிறர்க்குப் போதிக்க வேண்டாமா? இது சம்பந்தமாக எங்கள் புக் டெப்போவிலுள்ள "**மஹான் முஹம்மத் நபி** (சல்)" என்னும் சிறு நூலும், "**நபிகள் நாயக மான்மியம்**" என்னும் பெரிய நூலும் விற்கிற வேகத்திலிருந்தே நம்நாட்டு முஸ்லிம் சகோதரர்கள் இஸ்லாமத பிரசார விஷயத்தில் எவ்வளவு தூரம் அக்கறைகொண்டிருக்கிறார்களென்பதை நாம் அளந்து பார்த்துக் கொள்ள முடிகிறது. முற்சொன்ன கிறிஸ்துமத பிரசார ஸினிமாப் படம் பிடிக்கத் தேவைப்பட்டதில் எத்தனையோ கோடியில் ஒரு பங்கை நம் நாட்டு முஸ்லிம்கள் செலவழிக்க முற்பட்டாலும், ஒரே வாரத்துக்குள் எல்லார் கையிடையேயும் ரசூலுல்லா (ஹ்) வின் (சல்) நம்பகமான உண்மைச் சரித்திர நூலைச் சேர்ப்பித்து விட முடியும். மேனாட்டுக் கிறிஸ்தவர்கள் 11 சிலுவை யுத்தங்களைப் புரிந்து, எவ்வளவோ செல்வத்தை யிழந்து, சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்களை யடைந்து முஸ்லிம்களிடம் எல்லா விதமான ஞானங்களையும் கற்றுச் சென்றார்கள். பிறகு, நம்மிடம் கற்ற வித்தையை

நம்மிடமே காண்பிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். நாமோ இன்னம் நன்றாய்த் தூங்கிக் குறட்டை விட்டுக்கொண் டிருக்கிறோம்.

நான் சென்ற 13 ஆண்டுகட்கு முன் ஐரோப்பிய சரித்திர மாணவனா யிருந்த காலத்தில், இஸ்லாம் என்னும் ஜோதி மட்டும் உதய மாகாம லிருந்திருந்தால், ஐரோப்பியர்களின் கதி என்னாகி யிருக்குமென்று பல முறையும் சிந்தித்த துண்டு. சிலுவை யுத்தங்களால் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடம் என்னென்னவோ நலன்களை யெல்லாம் பெற்றுச் சென்றிருக்க, முஸ்லிம்களாகிய நாம் இன்று அதே கிறிஸ்தவர்களின் கையை ஏன் எதிர்பார்த்து நிற்க வேண்டுமென்று என்னையே நான் வினவிக் கொண்டதுண்டு. முஸ்லிம்களைப் பற்றியும் இஸ்லாத்தைப் பற்றியும் வாய்க்கு வந்தபடி மேனாட்டுக் கிறிஸ்தவர்கள் திட்டிக் குவித்த போதினும், 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்னும் சர்வவித்தியா கோச நூலில், "சிலுவை யுத்தங்கள்" என்ற கட்டுரையில் அந்தக் கிறிஸ்தவர்கள் தாங்கள் அநியாயமாய் முஸ்லிம்கள் மீது யுத்தந் தொடுத்து உதையைப் பெற்றுக் கொண்டதை வெட்கத்துடன் ஒத்துக் கொண்டு, அந்தச் சிலுவை யுத்தங்களின் போது ஐயூபி முஸ்லிம் மன்னர்கள் எவ்வளவு பெருந்தன்மையுடன் கிறிஸ்தவர்களை நிஜமாக நேசித்தார்களென்பதை இவ்வாறு மெய்ம் மறந்து எழுதி வைத் திருக்கிறார்கள்:—

"The Ayyubites had always been, on the whole, chivalrous and tolerant; Saladdin and his successors, Adil and Kamil, had none of them shown an implacable enmity to the Christians."—

(முற்ற முற்ற ஐயூபிகள் எப்போதுமே எதிரிகள் மாட்டு வீரத்துடனும் விட்டுக் கொடுக்கும் தன்மையுடனுமே இருந்தார்கள். கிறிஸ்தவர்கள் மீது ஸலாஹுத்தீனோ, அவர் சந்ததியார்களான ஆதிலும் காமிலுமோ தீராப் பகையோ வெறுப்போ எப்போதுமே கொண்டிருக்க வில்லை).

கிறிஸ்தவர்கள் மீது கொஞ்சங்கூடத் துவேஷம் பாராட்டாத முஸ்லிம்களைப் பிற்காலக் கிறிஸ்தவர்கள் முற்சொன்ன மிருகவதைத் தண்டனைகளை மிருகத்தனமாக வழங்கியதை நான் படிக்க நேர்ந்ததும் என் குடரெலாம் குலுங்கிவிட்டது. எனவே, நான் அன்றே ஒரு திட வைராக்கியம் எடுத்துக் கொண்டேன். என்ன தெரியுமா? முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை எவ்வளவு கண்ணியமாக நடத்தி யிருக்கிறார்களென்பதைத் தமிழ் மூலக முஸ்லிம்களுக்கு என்னாலியன்ற வரை எடுத்துக் காட்டவேண்டுமென்பதாகும். அம்முயற்சியாற் பிறந்ததே நம் சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவரும் "ஷஜருத்துர்" என்னும் சரித்திர நவீனமாகும். உண்மைச் சரித்திரக் கதையாகிய இது அந்தக் கற்பனைச் சரித்திரக் கதையாகிய "கோவாடிஸ்" என்னும் கதையைவிட அழகாயிருக்கிறதெனினும் இஸ்லாத்தை மேன்மைப் படுத்தியும் கிறிஸ்து மதத்தை மட்டமாக்கியும் அக் கதை விளங்கி வருவதால் இதுவரை எந்த மேனாட்டினரும் ஷஜருத்துர் கதையைப் படமெடுக்கத் துணியவில்லை. கேவலம் ஒரு பெண்மணியிடம் ஒரு பெரிய சிலுவை யுத்தத்தை இழக்க நேர்ந்ததே என்னும் வெட்கமே அவர்களை அப்படிப் படம் எடுக்காமல் தடுத்துவிட்டது.

இவை யெல்லாம் ஒரு புற மிருக்க, நம் சமூகம் மட்டும் உறக்கத்திலிருந்து விழிப்புற்று விட்டதேயானால், அந்த ஐயூபி சுல்தான்களைவிட அழகான சமுதாயத்தை நிறுவ முடியும். நம் மதத்தின் உன்னதத் தன்மைகளை நன்கெடுத்துக் காட்டி உலக மக்களை இஸ்லாத்தின் பக்கல் ஈர்க்க முடியும். முஸ்லிம்களைப் பற்றியும், முஹம்மத் நபி (சல்) அவர்களைப் பற்றியும் இல்லாததையும் பொல்லாததையும் எதிர்மத வாதிகள் விஷமத்தனமாகச் சிருஷ்டித்து விடாமல் காப்பாற்ற முடியும். இதற்காக நாமொன்றும் மிகப் பெரிய தியாகங்கள் புரிய வேண்டிய அவசியமில்லை; ஸினிமாப் படங்கள் எடுக்கத் தேவையில்லை. நாம் நாமும்நம் நம் கடமையை உணர்ந்து, நம்மைச் சூழ்ந்தோர்களுக்கு உண்மை இஸ்லாம் என்ன வென்பதை இலேசாக விளக்குவதே போதுமானது. நபிகட்டிலகத்தின் (சல்) சரித்திரத்தை நீங்கள் நன்றாய்ப் படியுங்கள்; பிறரையும் படிக்கச் செய்யுங்கள். இந்த உண்மையை எடுத்துரைப்பதற்கு ஒரு நோபல் பரிசோ, ஒரு கலர் ஸினிமாவோ தேவையில்லை. ஆனால், நீங்கள் தூங்குகிற தூக்கத்தில் பொழுது விடிந்ததுங்கூடத் தெரியாமல் உறங்குவதால், உடனே துயிலெழுங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

குர்ஆன் மஜீதை நான் மொழிபெயர்த்த முழு விருத்தாந்தம்

[By B. D. Shah]

"ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியராயிருந்த அஹ்மத் ஸயீத் ஆலிம் (மர்ஹூம்) சாஹிப் என்னை யொரு பொல்லாத, சு. ஜ. இஸ்லாத்தின் வன்பகைஞ தஜ்ஜாலென்று கருதியிருந்த போதிலும், அதன் எழுத்தாசிரியர் ஸ்தானத்திலிருந்து அலுவல் பார்த்துவந்த (திருச்சி, லால்குடி) ஆலீஜனுப் குலாம் அஹ்மத் சாஹிப் என்னும் அன்பர் என்மாட்டுப் பேரபிமானம் மிக்கவராகவே யிருந்துவந்தார். இவர் என்னைக் காணுந்தோறும், "ஜவாஹிருல் புர்க்கான்" மொழிபெயர்ப்பைப் பற்றி அதிக அக்கறையுடனே க்ஷேமலாபம் விசாரிப்பார். இவர் ஒரு ஞாயிற்றுக்கிழமைக் காலையில், ஒரு முஸ்லிம் நண்பரை யழைத்துக்கொண்டு, பறங்கிமலையிலிருந்த என்னை வந்து சந்தித்தார். நான், அவர் வந்த விசேஷம் யாதென்றும், அவருடன் கூடிவந்த அந்த முஸ்லிம் நண்பர் யாரென்றும் விசாரித்தேன். அந்நண்பர் ஒரு சிறிது கருநிறமுடையவராகவும், சற்றே மாறுகண் படைத்தவராகவும், பழனிப்பக்கத்து ராவுத்தரை யொத்த ஒரு வெள்ளைத் தலைப்பாகையும், ஒரு வெள்ளைக் கமீஸூம் (ஷர்ட்) அணிந்தவராகவும் காணப்பட்டார். அவரது தோற்றத்தைக் கொண்டு அப்புண்ணிய சீலர் ஓர் ஓதியுள்ள "ஆலிம்சா" வென ஒருவராலும் ஊகிப்பதென்பது சிறிதும் சாலாது. அவரைத் தம்முடைய நண்பரென்றும், என்னைக் காணவந்த காரியம் "ஜவாஹிருல் புர்க்கான்" மொழிபெயர்ப்பு விஷயமாகவென்றும் என் நண்பர் குலாம் அஹ்மத் கூறினர். நான் சரியென்று சொல்லி, சம்பாஷிக்கத் துவக்கினேன். அவர் பின் வருமாறு பேசத் துணிந்தார்:—

"தாங்கள் குர்ஆன் ஷரீபைத் தமிழில் மொழிபெயர்க்கின்றீர்களே, அதற்கோர் அரபு படித்த ஆலிம் தேவையில்லையா? எனக்குத் தெரிந்த ஒரு மவுலவீ—வேலூரில் தஹ்ஸீலான ஒரு பாக்கவீ—சாஹிப் இருக்கிறார்; அவர் தங்களுக்குப் பேருதவி புரிவார். அன்னார் தங்களுக்குத் தேவையா?" இது செவியேற்று, யான், "அவர் எங்கே இருக்கிறார்?" என்று ஆவலுடன் வினவினேன்.

"அவர் சென்னையிலேதான் இருக்கிறார்," என்றார் என் நண்பர்.

"அவர் நன்றாக நம் வேதம் ஓதியிருக்கிறாரா?"

"ஆம், வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்திலே ஓதித் தஹ்ஸீலான மவுலவீயே!"

"ஓஹோ! அப்படியா? ஆயின் அவருக்குத் தமிழ் தெரியுமா?"

"தெரியும்."

"தமிழில் இலக்கண இலக்கியப் பயிற்சி யுண்டா?"

"எல்லா ஆலிம்சாக்களுக்கும் தெரிகிற தமிழ் இவருக்கும் தெரியும்."

"தமிழில் இலக்கண இலக்கியப் பிழையில்லாது எழுதத் தெரியாதவர் எவ்வாறு குர்ஆனெ கரீம் போன்ற இறைவன் திருமறையைச் சரியான செந்தமிழில் மொழிபெயர்க்க முன் வரத்துணிகின்றார்?"

இது செவியேற்று, அவருடன் வந்த மற்றொருவர் குறுக்கிட்டு, "மவுலவீகள் அரபுக் குர்ஆனிலுள்ள கருத்தை அப்படியே தங்கள் மனஸிலே வாங்கிக்

கொள்ளுகிறார்கள்; அப்பால் தங்களுக்குத் தெரிந்த தாய் மொழித் தமிழிலே எழுதுகிறார்கள்,'' என்று கூறினர்.

"உங்கள் மத்ரஸாவில், அரபிலிருந்து தமிழில், தமிழிலிருந்து அரபு பாஷையிலே மொழி பெயர்க்கக் கற்றுக் கொடுக்கிறார்களா?'' என்று யான் வினவினேன்.

இதற்கவர், "நம் மவுலவீ சாஹிபுக்கு அம் மொழிபெயர்ப்பு வேலை நன்ருய்த் தெரியும்,'' என்று சவடால் பேசினர்.

அப்பொழுது நான் என் நண்பரைப் பார்த்து, "அப்படிப்பட்ட பிருஹஸ்பதியின் நாமம் என்னவோ?'' என்று வினவினேன்.

இது கேட்டு, அவர் தம்முடன் வந்திருந்தவர் வதனத்தை ஜாடையாய் நோக்கிவிட்டு, "அவர் பெயரைப் பிறகு தெரிவிக்கிறேன்; அந்த ஆலிம் தங்களுக்குத் தேவையா?'' என்று வினவுற்றார். இங்கு எனக்குச் சந்தேகம் சிறிது ஜனித்தது. எனவே, யான்,

"அவருக்கு ஆங்கிலம் தெரியுமா?' என்று வினவினேன். இதற்குத் "தெரியாது,'' என்ற விடைகிடைத்தது.

"பொது அறிவு (general knowledge) உண்டா?"

"கிடையாது; வெறும் ஆலிம்சாதான்.''

"அவருக்கு ஆங்கில ஸ்கூலுக்குப் போய்வந்த பழக்கமுண்டா?''

"ஏழாவது எட்டாவதுவரை அவர் அந்த ஸ்கூலில் படித்திருக்கிறார்,'' என்ருர் ஜனப் குலாம் அஹ்மதுடன் வந்திருந்தவர்.

"அப்படியானல், பூகோளம் தெரியுமா?''

"ஏழாவது வகுப்புக்குள்ள அவ்வளவே தெரியும்.''

"ககோள (வான) சாஸ்திரம்?''

"சிறிதும் தெரியாது.''

"உலக சரித்திரம் தெரியுமா?''

"ஏழாவது வகுப்புப் பாடமே தெரியும்.''

"ஸயன்ஸ் (விஞ்ஞான) சாஸ்திரம்?''

"தெரியாது.''

"பூமி சாஸ்திரம், வானசாஸ்திரம், பவுதிக சாஸ்திரம், பவுமியசாஸ்திரம், தாவர சாஸ்திரம், தாது சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், பிராண சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், மனித உடற் கூற்று வண்ணம், உளநூல் பெருமை, தத்துவ சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் ஆகிய மிகப்பல சாஸ்திரங்களில் ஒன்று கூடத் தெரியாதல்லவா?'' என்றேன் யான்.

"ஒன்றுகூடத் தெரியாது.''*

"அதுபோகட்டும். அவருக்கு ஹிந்து மத கிறிஸ்துமத ஆராய்ச்சி யுண்டா? அவற்றைவிட இஸ்லாம் எப்படிச் சிறந்ததென இந்த ஆலிமால் இதுகாலை எண்பித்துக் காட்ட இயலுமா?''

"இம் மாதிரியான பாடம் இவர்கள் படிக்கும் மத்ரஸாவிலேயே கிடையாதே!"

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, இறுதியிலே யான் இவ்வாறு கூறினேன்: "இறைவன் குர்ஆனிலே எல்லாவித ஆழிய ஞானங்களும் நிறைந்து மலிந்து கிடக்கின்றனவே! எனவே, அவை யொன்று மறியாத ஆலிமொருவர் எவ்வாறு அத் தெய்வத் திருமறையிலுள்ள சகலவித ஜவ்ஹர்களையும், முத்துக்களையும், இரத்தினங்களையும் வெளியிலெடுத்து விகசிதப்படுத்த முன்வருதல் கூடும்? சகல ஞானங்களும் செறிந்துள்ள தெய்விகக் குர்ஆனின் பெருமையையும் மேன்மையையும் ஒருவித

* இப்பபடிப்பட்ட ஆலிம் பிறகொரு சமயம், "நான் நான்காவது பாரம் வரை ஸயன்ஸ் படித்திருக்கிறேன். எனவே, எனக்குத் தெரியும் ஸயன்ஸ் நாஸ்திகம் என்று,'' என்று எழுதிப் பெருமை பேசினர். 4-ஆவது பார ஸயன்ஸ் ஞானம் எவ்வளவு அதிகமென்று ஸயன்ஸ் வாத்தியாரைக் கேட்டுப் பாருங்கள்.

ஞானமுமில்லாத ஓர் "ஆலிம்" என்பவரால் எவ்வாறு அறிவது சாத்தியமாகும்? எனவே, இத்தகையினர் எவ்வாறு அவ்வுயரிய திருவேதத்தின் மேன்மைகளனைத்தையும் ஏனையவர்க்கெல்லாம் எளிதில் எடுத்து விளக்கும் ஆற்றல் பெறுவார்? ஸையன்ஸே நாஸ்திகமென்று கூறுகிறவர் எவ்வாறு இறைவன் கலாம் ஷரீபின் உண்மைப் பெருமையை இக்கால உலகாயதர்க்கு முன்னே இனி தெடுத்து விளக்க வல்லராவார். இஸ்லாம் ஏனையெல்லா மதங்களைக் காட்டினும் மிகச் சிறந்த சமயமாயிருந்து வருங்கால், ஹிந்து மதம் கிறிஸ்து மதம் இவ்விரண்டின் தத்துவங்களையேனும் ஆராயாதவர்கள் இத்தமிழ் நாட்டிலே எவ்வாறு இஸ்லாத்தின் சிரேஷ்டத்தை எடுத்துத் துலக்கும் சக்தியையும் சாமார்த்தியத்தையும் பெறுவார்? ஆதலால், மீக்கூறிய அருகதைகளற்ற ஒருவர் குர்ஆன் மஜீதை எவ்வாறு மொழி பெயர்ப்பார்? எவ்வாறு அதற்கு உயரிய வியாக்கியானம் செய்வார்?" *

"இல்லை; அவர் அரபிலுள்ளதை அப்படியே தமிழில் தர்ஜுமா செய்து தருவார்," என்றூர் என் நண்பர் குலாம் அஹ்மத்.

"இந் நவீன யுகத்துக்கு அதுமட்டும் போதாதே! நான் மேலே கூறியுள்ள அத்தனை ஞானங்களும் வேண்டுமே, இஸ்லாத்தின் திருமறைக் குரிய இனியில்லாப் பெருமையை எல்லார் முன்னும் எடுத்துக் காட்ட!"

"இவ்வளவு பெரிய காரியத்தை அவர்பா லிருந்து எதிர்பார்ப்பது இயலாது," என்று கூறிவிட்டு, என் நண்பரும், அவருடன் கூட அன்று வந்த அந்த (உத்தமபாளையம்) ஆலிம்சாவும் மாலை மணி 3-க்கு வெறுமனே சென்னைக்குத் திரும்பிச் சென்றனர்.

அந்த ஆலிமின் அரபு, தமிழ் ஞானங் குறித்துத் திரிச்சிராப்பள்ளி ஆலீஜனுப் ந. மு. காஜாமியான் ராவுத்தரவர்களைக் கேட்டுப்பாருங்கள். இன்னம் அந்த பாக்கவீ சாகிபு பற்றிய விளக்கமான விவரங்களைச் சற்று நுணுக்கமாய் வரைகிறேன். அப்பால் அவரைப்பற்றி நீங்களே முடிவு கூறலாம்.

(தொடரும்)

* இவர் இச் சென்னையிலுள்ள ஒரு முஸ்லிம் புஸ்தக வியாபாரிக்குக் குர்ஆன் ஷரீபைத் தர்ஜுமா செய்து வியாக்கியானமும் எழுதிக் கொடுத்துள்ளார்; அதனைப் பார்வையிட்டால் அந்த ஆலிம்சாவின் கல்வித் திறனும் அறிவின் பெருமையும் செவ்வனம் விளங்கக் கிடக்கும். கல்வியறிவு படைத்துள்ள எந்த மனிதனும் அதை வாசித்து வாயால் சிரிக்கமாட்டான். இன்னம் அந்த ஆலிம்சாதான், "ஸுஹூலத்" துக்காக ஆண்டவன் நமக்கு வெள்ளாட்டிகளை வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ள அனுமதியளித்துள்ளான் என்று லஜ்ஜையில்லாது கூறி, எம்முடனே சண்டைக்குவந்தார். இந்த முல்லா சாஹிப் இப்பொழுது சிங்கையிலிருந்து கொண்டு, மலாய் நண்பர்கட்கெல்லாம் அடிமைப் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்தனுபவிக்க — பச்சை ஜினா செய்ய — அனுமதியளித்து வருகிறார். இவரை ஆதரிப்போர் அவ்வனுமதி — இறைவனளித்துள்ள அனுமதியாம் (?) — மிக்க இனிமையளிக்கிறதென நன்கு ரஸிக்கின்றனர் போலும்! முஸ்லிம்களின் கற்பொழுக்கத்தைக் கெடுக்க வேறென்ன வசனம் வேண்டும்?

மலேயாவிலுள்ள அன்பர்களுக்கு

"ஷாஜஹான் புக் டெப்போ"வின் நூல்கள், "தாருல் இஸ்லாம்" முதலியவை தேவைப்பட்டால் நீங்கள் சென்னைக்கு எழுதத் தேவையில்லை. இங்கே மலேயாவிலேயே உடனுக்குடன் கிடைக்கும். தங்கள் தேவைக்குக் கீழ்க் கண்ட விலாசத்துக்கு உடனே எழுதுங்கள்.

இந்தியா நாவல் டிப்போ,
3, கிருபே ரோடு, சிங்கப்பூர்.

பினங்கு-மலேயா நண்பர்களுக்கு

தாருல் இஸ்லாம் பத்திரிகையும் ஷாஜஹான் புக் டெப்போவின் நூல்களும் M. R. M. அப்துர் ரஹீம், திருச்சி ரஸூல் ஆகியோர் எழுதிய நூல்களும், இன்னம் பலவித இஸ்லாமிய நூல்களும் எங்களிடம் கிடைக்கும். தேவைக்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதுங்கள்.

K. S. முஹம்மதுகனி,
நியூஸ் பேப்பர் ஏஜெண்டு
153, கிங்ஸ்டிரீட், பினங்கு.

Printed by Sri K. Sundaresan at Photo Litho Press, Madras—5
Published by I. Abdur Rahman, at "DARUL ISLAM," 460, Triplicane High Road, Madras—5

199011

ஏ தமிழ் நாட்டு முஸ்லிம் சகோதரர்காள !

உங்கள் புத்திரர்களும் புத்திரிகளும் சுலபமான முறையி…

இஸ்லாத்தின் அனுஷ்டானங்களைப் படித்துணர வேண்டாமா?

…துவரை பத்துப் பதிப்புக்கள் வரை விற்று முடிந்த எமது "இஸ்லாம்" என்னும் அபூர்வமான அழகிய செந்தமிழ் நூலின் புத்தப் புதிய பதினொன்றும் பதிப்பு, இன்னம் பல மாறுதல்களுடனும் கூடுதலான படங்களுடனும் இப்போது வெளிவந்திருக்கிறது. மிகப் பெரும்பாலான தமிழ் நாட்டு முஸ்லிம்கள் சென்ற முப்பதாண்டுகளாக ஈமான், தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் என்னும் ஐந்து பாலான கடமைகளையும் பிறர் உதவியின்றித் தமிழில் கற்றுத் தேர்வதற்கு எமது இஸ்லாம் ஒன்றுமட்டுமே பேருதவியா யிருக்கிற தென்பதை எல்லாரும் நன்குணர்வர். ஷாபி, ஹனபீ ஆகிய இரு மதுஹபுக்குரியவர்களும் இப் புஸ்தகத்தின் துணை யொன்றைமட்டுமே வைத்துக் கொண்டு, எல்லா பர்லான, வாஜிபான, சுன்னத்தான சகல தத்துவங்களும் மஸ்அலாக்களுடன் இந் நூலில் இனிது வர்ணிக்கப்பட் டிருக்கின்றமையால், முழுப் பயனையும் பெற்றுக்கொண்டு விட முடியும். பள்ளியிற் படிக்கும் சிறுவர் சிறுமியர் முதல், ஹஜ்ஜென்னும் இறுதிக் கடமையை முடிக்கச் செல்லும் வயோதிகர் ஈறாக ஒவ்வொருவரும் இதைத் துணையாகக் கொண்டு நன்மை பெற முடியும். தொழுகையின் ஒவ்வோர் அச்சமும் எப்படிப்பட்டவரும் நன்கு விளங்கிக் கொள்ளத் தக்கவாறு இனிது விளக்கப்பட் டிருப்பதைப்போல், ஹஜ் சம்பந்தமான ஒவ்வொரு கடமையும் விளக்கமாகவும், விவரமாகவும், நுணுக்கமாகவும் தீட்டப்பெற் றிருக்கின்றன. நம் முஸ்லிம்களுக்கும், தொழுகையைக் கற்க விரும்பும் பாலியர்களுக்கும் ஹஜ் செய்ய நாடி யாத்திரை …றப்படுகிற இருபாலார்களுக்கும் மிகப்பெருந் துணைவனா யிருக்கக்கூடிய நூல் இஃது ஒன்றே யாகும். கண்கவரும் ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டுள்ள இந்தப் புத்தப் புதிய பதினொன்றும் பதிப்பின் விலை ரூ. 3 தான். இவ்வளவு சிறு விலையில் அவ்வளவு பெரிய விஷயங்களைப் போதிக்கும் வேறு தமிழ் நூல் ஒன்றுமே நம் நாட்டிலில்லை. தபால் செலவு 10 அணா.

"நபிகள் நாயக மான்மியம்"

(முதற் பாகம்)

29 அதிகாரங்கள்: ஹி. ஆறாவதாண்டு, அஹ்ஜாப் யுத்தம் முடிய.

இலக்கிய உலகில் தனிப் பெரும் புரட்சி!

பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் அள்ளிச் சொரியப்பட்டு, அழகினும் அழகிதாய் வனப்பினும் வனப்பதாய், பல மூவர்ணக் கலர்ப் படங்களுடன் இந்த "தாருல் இஸ்லாம்" பத்திரி… எந்த அளவில் இருக்கிறதோ அதே ஸைஸில் 600 பக்கங்களுடன், தையாரிக்கப் பட்டுள்ளது. மி… பிரமாதமான பைண்டு செய்யப்பட்டது. 3-வர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. பார்ப்… கண்ணைப் பறிக்கத்தக்கது!

இப் பாருலகின் கீர்த்தி மிக்க ஜயதிலகமாய் விளங்கும் எம்பிரான் முஹம்மது நபி (சல் … அவர்களின் மெய்யான, ஆதார பூர்வமான அபூர்வ சரித்திரம். நாம் முன்னம் வெளியிட்ட மு… பதிப்பைவிட, இதில் 9 அதிகாரங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட் டுள்ளன. அறுசுவையுடன் கூ… இனிய விருந்தில் வயிறு நிரம்ப உண்டு விட்டு மெய்ம்மறந்து திரியும் மனிதனுக்கு ஏற்படும் ம… சியைவிட, இலக்கிய உலகில் இந்நூல் அளிக்கும் இணையற்ற இன்பத்தை வாயால் வருணிக்க இயலுமோ, இயலுமோ?

இவ்வபூர்வ இலக்கிய சரித்திர ஆராய்ச்சி பொக்கிஷம் ஒவ்வொரு நூல் நிலையத்திலும், மத்ரஸாவிலும், கல்லூரியிலும், வாசக சாலைகளிலும் பொது மக்கள் நற்பயனடைவதற்காக அத்தியாவசியமாய் இருக்கவேண்டிய அரும் பெரும் பாக்கியமாகும்.

விலை ரூ. 12. தபாற் செலவு 1-6-0 தனி.

ஷாஜஹான் புக் டெப்போ

460, திருவல்லிக்கேணி ஹைரோட் :: செ…

டர்-
வன்யா

மனிதன்

ம்நாத்... ஸ்டுடியோ: நெப்ட்யூன்